
தினபூமி
thinaboomi.com
நெல்லை, புதன், ஏப்ரல் 30, 2025 ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி பக்கம் 8 ₹ 3.00



டிரம்ப் அச்சுறுத்தல்களுக்கு இடையே கனடா நாட்டில் ஆட்சியை பிடித்த லிபரல் கட்சி
...2-ம் பக்கம்

பாராளுமன்ற சிறப்புக்கூட்ட தொடரை கூட்ட வேண்டும்: பிரதமருக்கு ராகுல் கடிதம்
...3-ம் பக்கம்

மகளிர் முத்தரப்பு கிரிக்கெட்; தென் ஆப்பிரிக்காவை வீழ்த்தி இந்திய அணி திரில் வெற்றி
...6-ம் பக்கம்





● பாவேந்தர் பாரதிதாசனின் 135-வது பிறந்த நாளையொட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில் நேற்று சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள அவரது திருவுருவச்சிலைக்கு கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப்படத்திற்கு மலர்தூவி முதல்வர் மு.க.ஸ்டாலின் மரியாதை செலுத்தினார். அருகில் அமைச்சர்கள் துரைமுருகன், மு.பெ.சாமிநாதன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மேயர் ஆர்.பிரியா ஆகியோர் உடனிருந்தனர்.

### இதுவரை பார்த்தது முதல் பாகம்தான்:

# 2026-ல் திராவிட மாடல் அரசின் 2.0 தொடங்கும்

## சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு

சென்னை, ஏப். 30-

**இதுவரை பார்த்தது திராவிட மாடல் அரசின் முதல் பாகம்தான். 2026-ல் திராவிட மாடல் அரசின் 2.0 தொடங்கும், அதில் இன்னும் சாதனைகளை படைப்போம். தமிழ்நாடு வரலாறு படைக்கும் என்று சட்டப்பேரவையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.**

**முதல்வர் பதிலுரை...**

சட்டப்பேரவையில் நேற்று (ஏப்.29) காவல் மற்றும் தீயணைப்புத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிலளித்து பேசியதாவது:- குற்றங்களை குறைக்கும் துறையாக மட்டும் இல்லாமல், குற்றங்களைத் தடுக்கும் துறையாக காவல்துறை செயல்பட வேண்டும் என்று நான் தொடர்ந்து சொல்லிக் கொண்டு வருகிறேன். இந்த நிலை உருவாகவேண்டும் என்றால், காவல்துறை சிறப்பாக செயல்பட்டால் மட்டும் போதாது. ஒட்டுமொத்த சமூகமும் சில பொறுப்புகளை உணர்ந்து செயல்படவேண்டும்.

**மதித்து நடக்க வேண்டும்**

சட்டம், ஒழுங்கை பாதுகாக்க வேண்டியது நம்முடைய அனைவரின் கூட்டுப் பொறுப்பு. எனவே, நீங்கள் அனைவரும் சட்டத்தை மதித்து நடக்க வேண்டும். சின்ன சின்ன அலட்சியங்கள் கூட தவிர்த்து, சுய ஒழுக்கத்தோடு எல்லோருக்கும் இருக்க வேண்டும். ஒரு குற்றம் நடந்த பிறகு, உடனடியாக காவல்துறைக்குத் தெரிவிக்கும் பலர் இருக்கிறார்கள். அவர்களை பாராட்டும் அதே வேளையில், ஒரு குற்றம் நடப்பதற்கு முன்பே, அதை உணர்ந்து தடுக்கும் முன்னெச்சரிக்கையும் நமக்குத் தேவை.

**செப். 6 - காவலர் நாளாக....**

உங்கள் சுற்றுப்புறங்களில் சந்தேகப்படும்படியான நபர்களின் நடமாட்டம், செயல்பாடுகள் ஏதாவது தெரிந்தால், உடனடியாக காவல்துறைக்குத் தெரியப்படுத்துங்கள். செப். 6-ம் தேதி இனி ஆண்டுதோறும் காவலர் நாளாக கொண்டாடப்படும். இந்நாளில் சிறப்பாக பணியாற்றிய காவலர்களுக்கு பதக்கங்கள் வழங்கப்படும். தமிழ்நாடு என்பது, குற்றங்கள் நடக்காத மாநிலம். போதைப் பொருள் நடமாட்டம் இல்லாத மாநிலம். பாலியல் குற்றம் இல்லாத மாநிலம், என்ற நிலையை நாம் எட்டவேண்டும். எங்கும் யாராலும் குற்றம் நடக்கக் கூடாது. மீறி நடந்தால் உடனடியாக குற்றவாளிகள் கைது செய்யப்படவேண்டும்.

**அர்ப்பணிப்போடு....**

சட்டத்தின் முன்னால் நிறுத்தப்பட்டு உடனடியாக தண்டனை பெற்றுத் தரப்படவேண்டும். மனித வளர்ச்சியின் எல்லா குறியீடுகளிலும்

(கடைசி பக்கம் பார்க்க)

### தமிழ்நாடு சட்டசபை கூட்டம் நிறைவு: ஒரேநாளில்

# 18 சட்ட மசோதாக்கள் நிறைவேற்றம்; தேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைப்பு

சென்னை, ஏப். 30-

***30* நாட்களாக நடந்த தமிழ்நாடு சட்டசபை கூட்டம் நேற்றுடன் நிறைவு பெற்றது. இதை அடுத்து சட்டசபை தேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப் பட்டது. இதில் *18* சட்ட மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன.**

தமிழக சட்டசபையில் கடந்த மார்ச் மாதம் 14-ம் தேதி பொது பட்ஜெட்டும், அடுத்த நாள் (15-ம் தேதி) வேளாண் பட்ஜெட்டும் தாக்கல் செய்யப்பட்டது. தொடர்ந்து, 17-ம் தேதி முதல் 21-ம் தேதி வரை இரு பட்ஜெட்டுகள் மீதான விவாதமும், துறை சார்ந்த இரு அமைச்சர்களின் பதில் உரையும் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து, மார்ச் 24-ம் தேதி முதல் துறை வாரியாக மானியக் கோரிக்கை விவாதம் நடந்து வந்தது. இடையில் வந்த வார விடுமுறை நாட்களிலும், பண்டிகை விடுமுறை நாட்களிலும் சட்டசபை கூட்டம் நடைபெறவில்லை.

கூட்டம் நடைபெற்ற ஒவ்வொரு நாளும் காலை 9.30 மணிக்கு முதலில் கேள்வி நேரம் எடுத்துக்கொள்ளப்பட்டது. கேள்வி நேரம் முடிந்ததும் துறை வாரியாக மானியக் கோரிக்கை விவாதம் தொடங்கியது. ஒவ்வொரு நாளும் 2, 3 துறைகள் மீதான மானியக் கோரிக்கை விவாதம் நடந்தது.

அந்த வகையில், மொத்தம் 55 துறைகள் மீதான மானியக் கோரிக்கை விவாதம் நடைபெற்றது. நிறைவாக, நேற்று காவல், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மீதான மானியக் கோரிக்கை விவாதம் நடந்தது. குறிப்பாக, இந்த விவாதத்தில் பங்கேற்று அ.தி.மு.க. பொதுச் செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி பேசினார். அவரது குற்றச்சாட்டுக்கு உடனுக்குடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் பதில் அளித்தார். இதனால், சட்டசபையில் அனல் பறந்தது.

இந்த நிலையில், நேற்று காலை முதல்வர் மு.க.ஸ்டாலினின் பதில் உரை இடம் பெற்றது. அதனைத் தொடர்ந்து, காவல், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை தொடர்பான புதிய அறிவிப்புகளை அவர் வெளியிட்டார். பின்னர், இந்த சட்டசபை கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்பட்ட 18 சட்ட மசோதாக்களும் குரல் வாக்கெடுப்பின் மூலம் நிறைவேற்றப்பட்டன. அத்துடன் கடந்த ஒன்றரை மாத காலத்தில் 30 நாட்கள் நடைபெற்ற சட்டசபை கூட்டத் தொடர் நிறைவு பெற்றது. தேதி குறிப்பிடாமல் கூட்டத்தை ஒத்திவைப்பதாக சபாநாயகர் அப்பாவு அறிவித்தார். அடுத்து, அக்டோபர் மாதம் மழைக்கால கூட்டத் தொடர் நடைபெறும். இந்தக் கூட்டம் சுமார் 3 முதல் 5 நாட்கள் வரை நடைபெறும். இந்த ஆண்டுக்கான சட்டசபை கூட்டத் தொடர் அத்துடன் நிறைவடையும்.

### வலுக்கட்டாயமாக கடனை

# வசூலித்தால் இனி 3 ஆண்டுகள் சிறை: சட்டசபையில் மசோதா நிறைவேற்றம்

சென்னை, ஏப்.30-

**வலுக்கட்டாய நடவடிக்கைகளில் கடனை வசூல் செய்தால் பிணையில் வெளிவர முடியாத அளவிற்கு சிறை தண்டனை விதிக்கும் மசோதா சட்டசபையில் நிறைவேறியது.**

கடன் பெற்றவர்களிடம் கடனை வலுக்கட்டாயமாக வசூல் செய்வதை தடை செய்வதற்கான சட்ட மசோதாவை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் 26-ம் தேதி சட்டசபையில் அறிமுகம் செய்தார். இந்த மசோதா நேற்று விவாதத்திற்கு விடப்பட்டது. அதனை தொடர்ந்து துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தாக்கல் செய்த கட்டாய கடன் வசூல் தடுப்பு மசோதா சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டது.

கடனை வசூலிக்கும் போது கடன் பெற்றவர்கள் தற்கொலைசெய்து கொண்டால் கடன் வழங்கிய நிறுவனம் தற்கொலைக்கு தூண்டியதாக கருதப்படும். வலுக்கட்டாய நடவடிக்கைகளில் கடனை வசூல் செய்தால் பிணையில் வெளிவர முடியாத அளவிற்கு சிறை தண்டனை விதிக்கப்படும். 20-ம் பிரிவில் கூறப்பட்டுள்ள மிரட்டுதல், பின் தொடருதல் போன்ற குற்றங்களைச் செய்தால், 3 ஆண்டுகள் சிறை தண்டனை அல்லது ரூ.5 லட்சம் வரை அபராதம் அல்லது இரண்டும் சேர்ந்தோ விதிக்கப்படும். கடன் வாங்கியவர் மற்றும் அவரது குடும்பத்தினரை, அதாவது அவரின் பெற்றோர், கணவர் அல்லது மனைவி, குழந்தைகள் ஆகியோரை கடன் வழங்கிய நிறுவனமோ அல்லது அதன் முகவரோ வலுக்கட்டாய நடவடிக்கைக்கு உட்படுத்தக்கூடாது. ஏற்கெனவே நிதி சுமையில் இருக்கும் கடனாளிகளிடம் இருந்து கடன்களை வசூலிக்க சட்டவிரோத செயல்பாடுகளில் ஈடுபடுவோருக்கு சிறை தண்டனை விதிக்க இம்மசோதா வகைசெய்யும்.

### எல்லையில் அதிகரிக்கும் பதற்றம் எதிரொலி:

# பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் முப்படை தளபதிகள் அவசர ஆலோசனை

புதுடெல்லி, ஏப். 30

**பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் பயங்கரவாதிகளுக்கு பதிலடி தருவது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது.**



இந்தியாவின் தலை போன்று உள்ள காஷ்மீரை குறிவைத்து, பயங்கரவாதிகள் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வந்தனர். மத்திய அரசு எடுத்த கடும் நடவடிக்கையால் காஷ்மீரில் சமீபகாலமாக பயங்கரவாத செயல்கள் ஒடுக்கப்பட்டு இருந்தது. ஆனால் கடந்த 22-ந் தேதி யாரும் எதிர்பாராத நிலையில் காஷ்மீர் மாநிலம் பஹல்காம் பகுதியில் பயங்கரவாதிகள் கொடூர தாக்குதலை நடத்தினர்.

மிருகத்தனமான இந்த தாக்குதலில் சுற்றுலா பயணிகள் உள்பட 26 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இத்தகைய கொடுஞ்செயலில் ஈடுபட்டது தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பான லஷ்கர் - இ - தொய்பாவின் கிளை அமைப்பான டி.ஆர்.எப். என்பது தெரியவந்துள்ளது. இதன் பின்னணியில் பாகிஸ்தான் இருக்கிறது என்று இந்தியா குற்றம் சாட்டி வருகிறது.

அப்பாவி மக்களை கொன்ற பயங்கரவாதிகளுக்கு, கற்பனை செய்யமுடியாத அளவுக்கு தண்டனை பெற்றுத்தருவோம் என்று பிரதமர் மோடி ஆவேசத்துடன் கூறினார். இதைத்தொடர்ந்து பாகிஸ்தானுக்கு எதிரான ராஜிய ரீதியிலான நடவடிக்கைகளை இந்தியா எடுத்தது. பாகிஸ்தானுடன் செய்யப்பட்ட சிந்து நதிநீர் ஒப்பந்தத்தை ரத்து செய்ததுடன், இந்தியாவில் தங்கியிருக்கும் பாகிஸ்தானியர்களை உடனடியாக வெளியேறும்படி உத்தரவிட்டது. மேலும் இந்தியாவின் நிலை பற்றி உலக நாடுகளுக்கு விளக்குவதற்காக பல்வேறு நாட்டு தூதர்களின் கூட்டத்தையும் வெளியுறவுத் துறை நடத்தியது.

இந்தியா எடுத்த இந்த அதிரடி நடவடிக்கையால் கலக்கம் அடைந்த பாகிஸ்தான், தன் பங்குக்கு சிம்லா ஒப்பந்தத்தை ரத்து செய்து, பாகிஸ்தான் வான்பரப்பையும் மூடுவதாக அறிவித்தது.

இதனிடையே எல்லைக்கட்டுப்பாட்டு பகுதியில் பாகிஸ்தான் ராணுவம் அத்துமீறி துப்பாக்கி சூட்டை நடத்த தொடங்கியது. இந்திய நிலைகளை நோக்கி துப்பாக்கி சூடு நடத்திய பாகிஸ்தான் ராணுவத்துக்கு, இந்திய ராணுவம் தக்க பதிலடி கொடுத்து வருகிறது.

பூஞ்ச், குப்வாரா மாவட்டங்களில் உள்ள எல்லைக் கோடு பகுதியில் பாகிஸ்தான் ராணுவம் 4-வது நாளான நேற்று முன்தினம் இரவு இந்திய நிலைகளை நோக்கி துப்பாக்கியால் சுட்டது இதற்கு இந்திய ராணுவத்தினரும் தக்க பதிலடி கொடுத்தனர். இதனால் எல்லைப்பகுதியில் போர்ப் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இது ஒருபுறம் நடந்து கொண்டு இருக்கும் வேளையில் இந்திய விமானப்படையும், கடற்படையும் தீவிர போர்ப்பயிற்சியில் ஈடுபட்டன. இது வழக்கமாக நடைபெறும் பயிற்சி என்றாலும், அதை பாகிஸ்தான் தங்களுக்கான சவாலாக பார்த்தது.

இந்த சூழ்நிலையில் பாகிஸ்தான் ரெயில்வே அமைச்சர் ஹனீப் அப்பாசி, இந்தியா சிந்து நதிநீரை நிறுத்தினால் போர் வெடிக்கும். எங்களிடம் 130 அணு குண்டுகள் உள்ளன. அவை அனைத்தும் இந்தியாவுக்காகத்தான் என்று பகிரங்கமாக மிரட்டல் விடுத்தார். அதே நேரம் இந்திய ராணுவ அமைச்சர் ராஜ்நாத் சிங், முப்படை தளபதிகளுடன் பாதுகாப்பு தொடர்பாக ஆலோசனை நடத்தினார். அதன் தொடர்ச்சியாக பிரதமர் மோடியை ராஜ்நாத் சிங் சந்தித்து பேசினார். பிரதமரின் இல்லத்தில் சுமார் 40 நிமிடங்கள் நடந்த இந்த சந்திப்பில் தற்போதைய நிலவரங்களை பிரதமரிடம் அவர் விளக்கி கூறியதாக கூறப்படுகிறது.

(கடைசி பக்கம் பார்க்க)

### முல்லைபெரியாறில் புதிய அணை:

# சுப்ரீம் கோர்ட்டில் கேரள அரசு பிரமாண பத்திரம் தாக்கல்

புதுடெல்லி, ஏப். 30-

**முல்லைபெரியாறில் புதிய அணை அமைக்க வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட்டில் கேரள அரசு பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ளது.**

கேரளாவில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான முல்லைப்பெரியாறு அணையின் மூலமாக கிடைக்கும் நீரை தேனி, மதுரை, திண்டுக்கல் உள்ளிட்ட மாவட்ட மக்கள் பாசனத்துக்காகவும், குடிநீருக்காகவும் பயன்படுத்தி வருகிறார்கள். இதற்கிடையே இந்த அணை பராமரிப்பு தொடர்பாக சுப்ரீம் கோர்ட்டில் தமிழக அரசு சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை நீதிபதிகள் சூர்யகாந்த், கோட்டீஸ்வர சிங் அடங்கிய அமர்வு விசாரித்தது. அப்போது முல்லைப்பெரியாறு அணை பராமரிப்பு விவகாரத்தில் தமிழக அரசின் கோரிக்கைகளுக்கு மேற்பார்வைக்குழு தீர்வு காணும் கூட்டத்தை நடத்த வேண்டும். இரு மாநிலங்களும் ஏற்கும்படியாக அந்த தீர்வு இருக்க வேண்டும். தீர்வு காண முடியாத விஷயங்களை அறிக்கையாக சுப்ரீம் கோர்ட்டில் மேற்பார்வைக் குழு தாக்கல் செய்ய வேண்டும் என்று நீதிபதிகள் உத்தரவிட்டிருந்தனர்.

இந்த நிலையில், முல்லைப்பெரியாறு அணை விவகாரம் தொடர்பாக சுப்ரீம் கோர்ட்டில் கேரள அரசு பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ளது. அதில், வல்லக்கடவு- முல்லைப் பெரியாறு சாலையை செப்பனிடுவதற்கு அனுமதிக்க முடியாது. அடிக்கடி மழையாலும், ஆற்றுநீர்ப் பெருக்காலும் சாலை பாதிக்கப்படும். வனப்பகுதி என்பதால் அனுமதிக்க முடியாது. தற்போதைய முல்லைப் பெரியாறு அணை பலவீனமாகவும், மக்களின் உயிருக்கு அச்சுறுத்தலாகவும் உள்ளது. முல்லைப்பெரியாறில் புதிய அணை கட்டுவதே அனைத்துக்கும் தீர்வாக அமையும். புதிய அணை கட்டுவது தொடர்பான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும். புதிய அணை கட்டுவதற்கான அனைத்து செலவுகளையும் கேரள அரசே ஏற்கும். அணை மேற்பார்வைக் குழுவை கலைக்க மத்திய அரசுக்கு அதிகாரம் இல்லை என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அடுத்த 4 நாட்களுக்கு வெப்பம் அதிகரிக்கும்

## வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை, ஏப்.30-


**தமிழகத்தில் அடுத்த நான்கு நாட்களுக்கு 3 டிகிரி செல்சியஸ் வரை வெப்பநிலை அதிகரிக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பாக அந்த மையம் வெளியிட்ட செய்தியில், குமரிக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. தென்னிந்திய பகுதிகளின் மேல், வளிமண்டல கீழடுக்கு பகுதிகளில், கிழக்கு மற்றும் மேற்கு திசை காற்று சந்திக்கும் பகுதி நிலவுகிறது. இதன் காரணமாக மே 5 வரை தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.


மே 3-ஆம் தேதி வரை தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலையில் பெரிய மாற்றத்திற்கான வாய்ப்பு குறைவு.

தமிழகத்தில் ஒருசில இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை படிப்படியாக 2-3 டிகிரி செல்சியஸ் வரை உயரக்கூடும். அதிக வெப்பநிலையும், அதிக ஈரப்பதமும் இருக்கும் நிலையில் தமிழகத்தில் ஓரிரு பகுதிகளில் அசௌகரியம் ஏற்படலாம்.


**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| 70.01 | 7.45 |
| பாயின்ட் 80,288.38 | பாயின்ட் 24,335.95 |




**தங்கம்**
1 சவரன் ₹71,840
1 கிராம் ₹8,980



**வெள்ளி**
1 கிலோ ₹111,000
1 கிராம் ₹111.00

**டாலர்** ₹85.15



**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34

டிரம்ப் அச்சுறுத்தல்களுக்கு இடையே

# கனடாவில் ஆட்சியை பிடித்தது லிபரல் கட்சி

**ஒட்டாவா, ஏப்.30-**

கனடாவில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் லிபரல் கட்சி மீண்டும் வெற்றி பெற்றுள்ளது.

கனடாவை அமெரிக்காவுடன் இணைப்பது தொடர்பாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் பேசியதற்கு எதிராக லிபரல் கட்சி மேற்கொண்ட தேர்தல் பிரச்சாரம் அதற்கு கை கொடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது. வரி, இணைப்பு அச்சுறுத்தல்களுக்கு இடையே கிடைக்கப் பெற்ற இந்த வெற்றியை பிரதமர் மார்க் கார்னி உற்சாகம் பொங்க வரவேற்றுள்ளார்.

தேர்தல் வெற்றிக்குப் பிறகு வெற்றிக் கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர், "தேர்தல் முடிவுகள், கனடாவை ஆதரிக்கவும் அதனை வலுவாகக் கட்டியெழுப்பவும் மக்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். வரவிருக்கும் நாட்களும் மாதங்களும் சவாலானதாக இருக்கும். அவை சில தியாகங்களை கோரும். ஆனால் எங்கள் தொழிலாளர்களையும் எங்கள் வணிகங்களையும் ஆதரிப்பதன் மூலம் அந்த தியாகங்களைப் பகிர்ந்து கொள்வோம். அமெரிக்க துரோகத்தின் பாடங்களை கனடா மக்கள் ஒருபோதும் மறக்க வேண்டாம்." என்று வலியுறுத்தினார்.

தொழிலதிபரும் வங்கியாளருமான மார்க் கார்னி, இந்த தேர்தலில் ட்ரம்ப் விடுத்த இணைப்பு கோரிக்கைக்கு எதிராக பிரச்சாரம் மேற்கொண்டார். கனடாவில் கன்சர்வேட்டிவ் கட்சி ஆட்சிக்கு வந்தால், ட்ரம்ப் கூறியது நிஜமாகும் என்றும் அவர் பிரச்சாரம் செய்தார். டொனால்ட் ட்ரம்ப்பின் கருத்தை மையப்படுத்தி அவர் மேற்கொண்ட தேர்தல் பிரச்சாரம் அவருக்கு கை கொடுத்துள்ளதாக அரசியல் நோக்கர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

# அமைதியை மீட்டெடுக்க இந்தியாவுடன் ராஜீய ரீதியில் முயற்சி: நவாஸ் ஷெரீப்

**லாகூர், ஏப்.30-**

இந்தியா-பாகிஸ்தான் இடையே அமைதியை மீட்டெடுக்க ராஜீய ரீதியில் உள்ள அனைத்து வழிகளையும் பாகிஸ்தான் அரசு பயன்படுத்த வேண்டும் என்று அந்நாட்டு முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் விரும்புவதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதுதொடர்பாக பாகிஸ்தான் முஸ்லிம் லீக்-நவாஸ் ஷெரீப் கட்சி வட்டாரங்கள் தெரிவித்ததாவது: பஹல்காம் தாக்குதலை தொடர்ந்து சிந்து நதிநீர் ஒப்பந்தத்தை இந்தியா நிறுத்தி வைத்தது. இதைத்தொடர்ந்து லாகூரில் நடைபெற்ற தேசிய பாதுகாப்பு குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து நவாஸ் ஷெரீபிடம் அவரின் சகோதரரும், பாகிஸ்தான் பிரதமருமான ஷாபாஸ் ஷெரீப் எடுத்துரைத்தார்.

அணு ஆயுதங்கள் கொண்ட இந்தியா-பாகிஸ்தான் இடையே அமைதியை மீட்டெடுக்க ராஜீய ரீதியில் உள்ள அனைத்து வழிகளையும் பாகிஸ்தான் அரசு பயன்படுத்த வேண்டும் என்று நவாஸ் ஷெரீப் விரும்புகிறார். மூர்க்கமான நிலைப்பாட்டை எடுக்க அவர் விரும்பவில்லை என்று தெரிவித்தன.

பாகிஸ்தானுக்கு எதிராக ராணுவ நடவடிக்கை குறித்தும் இந்தியா ஆலோசித்து வருவதாக ஊகிக்கப்படும் நிலையில், நவாஸ் ஷெரீப் இவ்வாறு தெரிவித்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

பயங்கரவாதத்தை ஊக்குவிக்கிறது:

# ஐ.நா.வில் பாக். மீது இந்தியா குற்றச்சாட்டு

**ஜெனீவா, ஏப். 30-**

ஐ.நாவில் பாகிஸ்தான் பயங்கரவாதிகளை ஊக்குவிக்கிறது என இந்தியா குற்றம் சாட்டியுள்ளது.



பாகிஸ்தானின் பாதுகாப்பு மந்திரி கவாஜா ஆசிப் பல தசாப்தங்களாக பயங்கரவாத குழுக்களுக்கு நிதியளித்து ஆதரவு அளிப்பதாக அண்மையில் வெளிப்படையாக ஒப்புக் கொண்டார். இந்த விவகாரத்தை ஐக்கிய நாடுகள் அவையில் இந்தியா எழுப்பியுள்ளது. ஐக்கிய நாடுகள் அவையில், இந்தியாவின் துணை நிரந்தரப் பிரதிநிதி யோஜ்னா படேல் கூறியதாவது:-

பாகிஸ்தான் பாதுகாப்பு மந்திரி கவாஜா ஆசிப் பயங்கரவாத அமைப்புகளுக்கு நிதியளித்து ஆதரித்ததாக வாக்குமூலம் அளித்து இருக்கிறார். அவரது இந்த பேச்சு யாருக்கும் ஆச்சர்யம் கொடுக்கவில்லை. உலகளாவிய பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் ஒரு மோசமான நாடு பாகிஸ்தான் என்பதை அம்பலப்படுத்தி உள்ளது.

பயங்கரவாத அமைப்புகளுக்கு ஆதரவு, பயிற்சி மற்றும் நிதியுதவி அளித்ததை ஒப்புக் கொண்டதை உலகம் முழுவதும் மக்கள் கேட்டனர். 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற மும்பை தாக்குதலுக்குப் பிறகு, பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதல் அதிக எண்ணிக்கையிலான பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். பயங்கரவாதம் எல்லா வகையிலும் கண்டிக்கப்பட வேண்டும் என்பதை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகிறோம்" என்றார்.

கனடா பொதுத்தேர்தலில்

# காலிஸ்தான் தலைவர் படுதோல்வி

**கனடா, ஏப். 30-**

கனடா பொதுத் தேர்தலில் காலிஸ்தான் தலைவர் தோல்வி அடைந்தார். மேலும், அவரது புதிய ஜனநாயகக் கட்சி வெறும் 6 இடங்களில் மட்டுமே வெற்றியைப் பதிவு செய்த நிலையில், கட்சிக்கான அந்தஸ்து பறிபோனது. இந்த தோல்விக்கு பொறுப்பேற்று கட்சியின் தலைவர் பதவியை ராஜிநாமா செய்வதாக ஜக்மீத் சிங் அறிவித்துள்ளார். கனடா பொதுத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நிறைவடைந்தவுடன், இந்திய நேரப்படி நேற்று காலை வாக்கு எண்ணிக்கை தொடங்கியது.

இதில், ஆளும் லிபரல் கட்சி வெற்றி பெற்றுள்ளதாக தகவல்கள் வெளியாகி வருகின்றன. மீண்டும் அக்கட்சியின் தலைவர் மார்க் கார்னி பிரதமராக பொறுப்பேற்கவுள்ளார்.

இந்த நிலையில், வெறும் 7 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றுள்ள புதிய ஜனநாயகக் கட்சி படுதோல்வியை சந்தித்துள்ளது. பர்னபி சென்ட்ரல் தொகுதியில் போட்டியிட்ட கட்சித் தலைவர் ஜக்மீத் சிங், வெறும் 9,100 வாக்குகள் மட்டுமே பெற்று மூன்றாவது இடத்தை பிடித்து தோல்வியை தழுவியுள்ளார்.

காலிஸ்தான் தலைவராக முன்னிறுத்தப்பட்ட ஜக்மீத் சிங், தனது தொகுதியிலேயே



தோல்வி அடைந்திருப்பது புதிய ஜனநாயகக் கட்சியினர் இடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மொத்தமுள்ள 343 இடங்களில் குறைந்தது 12 தொகுதிகளில் வெற்றிபெற்றால் மட்டுமே கட்சி அந்தஸ்து கிடைக்கும். இதனால், கட்சி அந்தஸ்தும் பறிபோகியுள்ளது. கடந்த தேர்தலில் 24 இடங்களில் வெற்றி பெற்ற புதிய ஜனநாயகக் கட்சி, ஆளும் லிபரல் கட்சிக்கு ஆதரவளித்திருந்தது.

இந்த நிலையில், தோல்விக்கு பொறுப்பேற்று தலைவர் பதவியை ராஜிநாமா செய்வதாக ஜக்மீத் சிங் அறிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்தியில், "புதிய ஜனநாயகக் கட்சியை வழிநடத்தியதும் பர்னபி சென்ட்ரல் தொகுதி மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியதும் என் வாழ்க்கையின் மிகப் பெரிய மரியாதையாக கருதுகிறேன். பிரதமர் மார்க் கார்னிக்கு வாழ்த்துகள்.

இந்த இரவு புதிய ஜனநாயகக் கட்சியினருக்கும் ஏமாற்றமளித்திருக்கும் என்பதை நான் அறிவேன். அதிக இடங்களை வெல்ல முடியாதது எனக்கு ஏமாற்றத்தை அளிக்கிறது.

கட்சி மீது எனக்கு நம்பிக்கை உள்ளது. நாம் எப்போதும் பயத்தைவிட நம்பிக்கையைத் தேர்ந்தெடுப்போம் என்பது எனக்குத் தெரியும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

நிஜ்ஜார் கொலை தொடர்பாக இந்தியா மீது கனடாவின் பிரதமராக இருந்த ஜஸ்டின் ட்ரூடோ குற்றம்சாட்டியதால் இரு நாட்டு உறவில் விரிசல் ஏற்பட்டது.

அப்போது, நிஜ்ஜார் கொலை செய்யப்பட்டதில் இந்தியாவுக்கு தொடர்பு உள்ளதற்கு வலுவான ஆதாரம் உள்ளதாக கடுமையான குற்றச்சாட்டை ஆளும் கூட்டணிக் கட்சியின் எம்.பி.யான ஜக்மீத் சிங் முன்வைத்தது சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

இதனிடையே, பெரு நிறுவனங்களுக்கு ஆதரவாக ஜஸ்டின் செயல்படுவதால் லிபரல் கட்சிக்கு கொடுத்த ஆதரவை வாபஸ் பெறுவதாக கடந்தாண்டு ஜக்மீத் சிங் அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

# தமிழை உயிருக்கு நிகராக கருதி தொண்டாற்றியவர் பாரதிதாசன்

## எடப்பாடி பழனிசாமி புகழாரம்

**சென்னை, ஏப்.30-**

வாழ்நாள் முழுவதும் தமிழை உயிருக்கு நிகராக கருதி தொண்டாற்றியவர் பாரதிதாசன் என எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:-

"எங்கள் வாழ்வும், எங்கள் வளமும், மங்காத தமிழென்று சங்கே முழங்கு" என்று தமிழ் மொழியின் பெருமைகளை முழங்கி, மொழிப்பற்று, இனப்பற்று, சாதி மறுப்பு உள்ளிட்ட கொள்கைகளை மக்களின் உள்ளங்களில் வளர்த்தெடுத்து, தன் வாழ்நாள் முழுவதும் தமிழை உயிருக்கு நிகராக கருதி தொண்டாற்றிய புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் பிறந்தநாளில் அவர்தம் பெரும் புகழை போற்றி வணங்குகிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# சென்னை உயர் நீதிமன்றத்திற்கு மே 1 முதல் கோடை விடுமுறை

**சென்னை, ஏப். 30-**

சென்னை ஐகோர்ட்டுக்கு மே 1-ம் தேதி முதல் கோடை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை ஐகோர்ட்டுக்கு வரும் மே 1 முதல் ஜூன் 1 வரை கோடை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது .அவசர கால வழக்குகளை விசாரிக்க நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். நீதிபதிகள் மாலா, அருள் முருகன், விக்டோரியா கௌரி ஆகியோர் மே 7, 8 தேதிகளில் அவசர வழக்குகளை விசாரிப்பார்கள்.

நீதிபதிகள் சுவாமிநாதன், லட்சுமி நாராயணன், நிர்மல் குமார் ஆகியோர் மே 14, 15, 21 மற்றும் 22 ஆகிய தேதிகளிலும், நீதிபதிகள் செந்தில் குமார் ராமமூர்த்தி, சத்திய நாராயணா பிரசாத், திலகவதி ஆகியோர் மே 28, 29 ஆகிய தேதிகளிலும் விசாரிப்பார்கள்.

# சீனா: ஓட்டலில் பயங்கர தீ விபத்து - 22 பேர் பலி

**பீஜிங், ஏப். 30-**

சீனாவில் உள்ள ஓட்டலில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இதில் 22 பேர் பலியாகி உள்ளனர்.

சீனாவின் லியோயிங் மாகாணம் லியாயங் நகரில் ஓட்டல் உள்ளது. இந்த ஓட்டலில் நேற்று மதியம் 12.30 மணியளவில் 30க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அப்போது எதிர்பாராத விதமாக ஓட்டலில் தீ பற்றியது.

இந்த சம்பவத்தில் ஓட்டலில் இருந்த 22 பேர் தீயில் சிக்கி உடல் கருகி உயிரிழந்தனர். மேலும், 3 பேர் படுகாயமடைந்தனர். தகவலறிந்து விரைந்து வந்த தீயணைப்பு மீட்புக்குழுவினர், படுகாயமடைந்தவர்களை மீட்டு சிகிச்சைக்காக அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர்.

மேலும், இந்த தீ விபத்துக்கான காரணம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

**30-04-2025**




**மேஷம்:-** இன்று, கௌரவக் குறைவு ஏற்படாவண்ணம் பார்த்துக் கொள்வது சிறப்பு. பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. துன்பம் வந்த போதினிலும் சிரிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

**ரிஷபம்:-** இன்று, குடும்ப சுகத்தில் திருப்தி ஏற்படும். புதிய ஆடை அணிகலன்கள் வாங்குவீர்கள். புதுப்புது ஆராய்ச்சிகள், அதில் தேர்ச்சியும் ஏற்படும். பெரியோர் பால் நேசம் ஏற்படும். தொழில் வளம் பெருகும்.

**மிதுனம்:-** இன்று, பெண்களால் விரயச் செலவுகள் ஏற்படும். தேவையற்ற பொருட்களை வாங்காமல் வீட்டுச் செலவுகளை குறையுங்கள். புதிய மாற்றங்களை எதிர்பார்க்கலாம். தேவையற்ற அலைச்சல்கள் தவிர்க்க முடியாததாகும்.

**கடகம்:-** இன்று, மனத் திருப்தி அதிகரிக்கும் வண்ணம் தனவரவு அதிகரிக்கும். ஆரோக்கிய மேம்பாட்டால் ஆனந்தம் பெருகும். பிரிவால் ஏற்பட்ட துன்பம், இணைவால் மாறும். இல்லத்தில், இரு கரையும் புரண்டோடும் சந்தோஷம்.

**சிம்மம்:-** இன்று, அரசு ஆதரவு, பெரியோர் உதவி, உத்தியோக வாய்ப்பு என நன்மை தரும் நன்னாள். முன்னேற்ற வாய்ப்புகள் கதவைத் தட்டும். தன்னம்பிக்கை, தேகதிடம், தைரியம் ஆகியவை ஓங்கும்.

**கன்னி:-** இன்று, உடன்பிறப்புக்களின் ஒற்றுமை ஓங்கும். கோவில், குளம் பணிகளில் ஈடுபாடு கொள்வார்கள். அனைத்திலும் எளிதில் வெற்றி கிடைக்கும். சுற்றுலாப் பயணங்கள் சென்று மகிழ்வீர்கள். தன்னம்பிக்கை கூடும்.

**துலாம்:-** இன்று வழக்குகளை ஒத்திப் போடுவது நல்லது. அதிகாரிகளிடம் பணிவோடு நடந்தால் அனுகூலமான சூழல் நிலவும். வீட்டில் உள்ள விலை உயர்ந்த பொருட்களை பாதுகாப்பாக வைப்பது அவசியம்.

**விருச்சிகம்:-** இன்று, குடும்ப சுகத்தில் திருப்தி ஏற்படும். புதிய ஆடை அணிகலன்கள் வாங்குவீர்கள்., சாஸ்திர ஆராய்ச்சியும், அதில் தேர்ச்சியும் ஏற்படும். பெரியோர் பால் நேசம் ஏற்படும். தொழில் வளம் பெருகும்.

**தனுசு:-** இன்று, தனவரவு அதிகரிக்கும். எதிரிகள் அடிபணிவர். ஆரோக்கியம் மேம்படும். பயண சுகம் ஏற்படும். தனக்கெனத் தனி வீடு அமையும். குடும்பத்தில் சுபகாரியங்கள் குதுகலமாய் நிறைவேறும்.

**மகரம்:-** தடைபட்ட காரியங்கள் கண்டு தன்னம்பிக்கை இழக்காதீர்கள். முயற்சியைக் கைவிடாது தடைக்கற்களை படிக்கற்களாக மாற்றி துணிவுடன் செயல்களில் இறங்கினால். வெற்றி உறுதி.

**கும்பம்:-** இன்று, அன்னையின் ஆரோக்கியத்தில் சிறப்பு கவனம் தேவை. மனோபயம் மற்றும் தூக்கக் குறைவு ஆகியவை ஏற்படும். பொருட்களைப் பத்திரமாகப் பாதுகாப்பது அவசியம். வயிற்று உபாதைகள் எழலாம்.

**மீனம்:-** இன்று, அனைத்துச் செயல்களிலும் எளிதில் வெற்றி கிடைக்கும். உல்லாசமான சுற்றுலாப் பயணங்கள் ஆகியவை ஏற்படும். மனைவியின் உதவி பெற்று மகிழ்வீர்கள். தன்னம்பிக்கை கூடும்.




**முதல்வர் மு.க. ஸ்டாலினை தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு தலைமைச் செயலக ஊழியர் சங்கம், ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பு, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம், தமிழ்நாடு அனைத்து அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சி பணியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு போன்ற பல்வேறு சங்கங்களின் நிர்வாகிகள் சந்தித்து, அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன் கருதி பல்வேறு அறிவிப்புகளை சட்டமன்றப் பேரவையில் அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர்.**

# இ.கம்யூ. கட்சியின் கேரள மாநில செயலாளர் துணை முதல்வர் உதயநிதியுடன் சந்திப்பு

**சென்னை, ஏப். 30-**

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கேரள மாநில செயலாளர் தமிழக துணை முதல்வர் உதயநிதியை சந்தித்தார்.

துணை முதல்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

கேரள மாநிலத்தின் வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை மந்திரி கே.ராஜன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கேரள மாநில செயலாளர் பினோய் விஸ்வம் மற்றும் அக்கட்சியின் தமிழ் மாநில செயலாளர் அண்ணன் முத்தரசன் ஆகியோர் தலைமைச் செயலகத்தில் நேற்று நம்மை மரியாதை நிமித்தமாக சந்தித்தார்கள். கேரளத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள பாசிச எதிர்ப்பு மாநாடு தொடர்பாக எடுத்துரைத்து, அதில் நாம் பங்கேற்க வேண்டுமென்று அழைப்பு விடுத்தார்கள். என தெரிவித்துள்ளார் .

# அமெரிக்கா: மாணவர்களுடன் கலந்துரையாடிய அண்ணாமலை

**சென்னை, ஏப். 30-**

இந்தியா கொள்கை மற்றும் பொருளாதார ஆராய்ச்சி குறித்து அமெரிக்காவின் அரிசோனா மாநில பல்கலைக்கழகத்தில் மாணவர்களுடன் பா.ஜ.க. முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை கலந்துரையாடினார்.

தமிழக பா.ஜ.க.வின் மாநில தலைவராக இருந்த அண்ணாமலை மாற்றப்பட்டு, புதிய மாநில தலைவராக நயினார் நாகேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். மாநில தலைவர் மாற்றத்துக்கு பிறகு அண்ணாமலை பல்வேறு பயணங்களை மேற்கொண்டு வருகிறார். குறிப்பாக, கடந்த 14-ம் தேதி ஆன்மிக பயணமாக அண்ணாமலை இமயமலை சென்றார். இமயமலையில் ஸ்ரீ ஸ்ரீ மகாவதார் பாபாஜி குகையில் தியானம் செய்தார்.

3 நாள் ஆன்மிக பயணத்துக்கு பிறகு மீண்டும் சென்னை திரும்பினார். பின்னர், கட்சியின் பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்ட அவர், கடந்த 23-ம் தேதி அமெரிக்கா சென்றார். அமெரிக்காவில், கலிபோர்னியா மாகானத்தில் உள்ள புகழ்பெற்ற ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகத்தில், 'ஸ்டான்போர்ட் இந்தியா மாநாடு 2025' என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கத்தில் பங்கேற்று கலந்துரையாடினார். அதனை தொடர்ந்து, அமெரிக்காவில் உள்ள டெஸ்லா மோட்டார்ஸ் நிறுவனத்தின் உயர் நிர்வாகிகளுடன் முக்கியமான கலந்துரையாடல் நடத்தியுள்ளார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் அரிசோனா மாநில பல்கலைக்கழகத்தில், இந்தியா கொள்கை மற்றும் பொருளாதார ஆராய்ச்சி குறித்து மாணவர்களுடன் கலந்துரையாடி உள்ளார். இந்த கலந்துரையாடலில் இந்தியாவின் வளர்ச்சி மற்றும் கொள்கை மாற்றங்கள் குறித்த மாணவர்களின் பல்வேறு கேள்விகளுக்கு அண்ணாமலை விளக்கமாக பதில் அளித்தார்.

# புதுச்சேரி முதல்வர் வீட்டுக்கு மீண்டும் வெடிகுண்டு மிரட்டல்

**புதுச்சேரி, ஏப். 30-**

புதுச்சேரி முதல்வர் ரங்கசாமியின் வீட்டுக்கு மீண்டும் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

புதுச்சேரி திலாஸ்பேட்டையில் உள்ள முதல்வர் ரங்கசாமியின் வீட்டில் வெடிகுண்டு இருப்பதாக மின்னஞ்சல் மூலம் நேற்று (செவ்வாய்க்கிழமை) தகவல் வந்துள்ளது. இதையடுத்து வெடிகுண்டு நிபுணர்கள் மோப்ப நாய் உதவியுடன் தீவிர சோதனை மேற்கொண்டு வருகின்றனர். அதேபோல பிரெஞ்சு தூதரகம், அப்பா பைத்தியசாமி கோயிலுக்கும் நேற்று வெடிகுண்டு மிரட்டல் வந்துள்ளது. அங்கும் சோதனை நடைபெற்று வருகிறது.

புதுச்சேரி முதல்வர் ரங்கசாமியின் வீட்டுக்கு கடந்த ஏப். 19 ஆம் தேதியும் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது. அன்றைய சோதனையில் வெடிகுண்டு மிரட்டல் புரளி என தெரிய வந்துள்ளது. இதுதொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். முன்னதாக மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தீயணைப்புத் துறை அலுவலகம், ஜிப்மர் மருத்துவமனை, புதுச்சேரி கடற்கரை சாலையில் உள்ள சில ஹோட்டல்களுக்கும் வெடிகுண்டு மிரட்டல் வந்தது குறித்தும் காவல்துறையினர் விசாரித்து வருகின்றனர்.

# நடிகர் ஜாக்கிசானுக்கு சாதனையாளர் விருது

**ஹாங்காங், ஏப். 30-**

நடிகர் ஜாக்கி சானுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டு, திரைத்துறையில் அவர் படைத்த சாதனைகளுக்காக கௌரவிக்கப்பட உள்ளார்.

நடிகர், இயக்குநர், எழுத்தாளர், தயாரிப்பாளர், பாடகர், முக்கியமாக சண்டைக் கலைஞர்... இப்படி பல வித்தைகளைக் கற்றுத் தேர்ந்து ஆசிய கண்டத்தைக் கடந்து, ஹாலிவுட் உலகை தம் பக்கம் திரும்பி விண்ணளவு வியந்து பார்க்கச் செய்த 'ஜாக்கி சானுக்கு' வாழ்நாள் சாதனையாளர் விருதளிக்கப்பட உள்ளது. 71 வயதைக் கடந்தாலும் இளமைத் துடிப்புடன் செயல்படும் ஹாங்காங் நாட்டைச் சேர்ந்த ஜாக்கி சானுக்கு சுவிட்ஸர்லாந்தில் ஆகஸ்ட் முதல் வாரம் நடைபெறவுள்ள 78-ஆவது 'லோகேர்னோ திரைப்பட விழாவில்' இந்த உயர் கௌரவம் வழங்கப்படவுள்ளது. அவர் ஆகஸ்ட் 9-ஆம் தேதி இந்த விருதைப் பெற்றுக் கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

1960-களில் குழந்தை நட்சத்திரமாக திரையுலகில் அடியெடுத்து வைத்த ஜாக்கி சானுக்கு சாதனைகள் புதிதல்ல என்றாலும், சர்வதேச அளவில் புகழ்பெற்ற 'லோகேர்னோ திரைப்பட விழா' அரங்கில் விருது வழங்கப்பட உள்ளது பெருமையானதொரு மகுடமாகும்.

# த.வெ.க. கொடி வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

**சென்னை, ஏப். 30-**

த.வெ.க.கொடி விவகார வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

விஜயின் த.வெ.க. கொடியில் இரட்டை யானை இடம் பிடித்துள்ளது. பகுஜன் சமாஜ் கட்சி கொடியிலும் யானை இடம் பிடித்துள்ளதால் விஜய் கட்சி பயன்படுத்த தடைகோரி வழக்கு. விஜயின் தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் கொடியில் இரட்டை யானை இடம் பெற்றுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட கட்சியான மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சி யானை சின்னத்தை பயன்படுத்தி வருகிறது. இதனால் விஜய் கட்சியின் கொடியில் யானை சின்னத்தை பயன்படுத்த தடைவிதிக்கக்கோரி பகுஜன் சமாஜ் கட்சியின் தமிழக பொதுச் செயலாளர் சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது அங்கீகரிக்கப்பட்ட கட்சியின் சின்னத்தை யாரும் பயன்படுத்த முடியாது என்று மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து வழக்கு விசாரணையை நீதிமன்றம் ஜூன் 4ஆம் தேதிக்கு ஒத்திவைத்துள்ளது.

# பாரதிதாசன் வரிகளை நெஞ்சங்களில் ஏந்திப் பயணித்திடுவோம்: முதல்வர்

**சென்னை, ஏப்.30-**

பாவேந்தர் பாரதிதாசன் யாத்த வரிகளைத் தமிழர் நெஞ்சங்களில் ஏந்திப் பயணித்திடுவோம் என முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

பாரதிதாசனின் 135-வது பிறந்த நாளை முன்னிட்டு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், வேழத்தின் வலிமையோடு - திகட்டாத தீந்தமிழின் சுவையில், மடமைகளைச் சுட்டெரித்து, இருண்ட வீட்டில் குடும்ப விளக்கேற்றிய இசையமுது பாவேந்தர் பாரதிதாசன் புகழ் ஓங்குக!

இல்வாழ்க்கையில் அடியெடுத்து வைக்கும் இணையரை வாழ்த்தும் போதெல்லாம், பாவேந்தர் எடுத்துச் சொல்லியபடி, வீட்டுக்கு விளக்காக - நாட்டுக்குத் தொண்டர்களாக வாழ்ந்திட வேண்டும் என்பதையே அறிவுரையாக வழங்குகிறேன். குன்றிலிட்ட விளக்காகத் தமிழ்ச்சமுதாயத்துக்கு ஒளி கொடுக்கும் பாவேந்தர் பாரதிதாசன் யாத்த வரிகளைத் தமிழர் நெஞ்சங்களில் ஏந்திப் பயணித்திடுவோம். என முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்

# 2026-ல் ஒரே வெர்ஷன் தான்; அது அ.தி.மு.க. வெர்ஷன்

## எடப்பாடி பழனிசாமி கருத்து

**சென்னை, ஏப்.30-**

2026-ல் ஒரே வெர்ஷன் தான் -அது அ.தி.மு.க. வெர்ஷன் தான் என எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள எக்ஸ் தளப் பதிவில் கூறப்பட்டிருப்பதாவது:-

கள்ளச்சாராய ஆட்சிக்கு கள்ளக்குறிச்சியே சாட்சி... சட்டம் ஒழுங்கு சீர்கேட்டிற்கு மாணவர்கள் புத்தகப் பையில் அரிவாள்களே சாட்சி... பெண்கள் பாதுகாப்பின்மைக்கு அண்ணா பல்கலைக்கழகமே சாட்சி... போதைப் பொருள் கடத்தலுக்கு தி.மு.க. அயலக அணியே சாட்சி... போதையின் பாதைக்கு ரிஷிவந்தியம் தி.மு.க. இளைஞரணி கூட்டமே சாட்சி... ஸ்டாலின் மாடல் சமூக (அ)நீதிக்கு வேங்கைவயலே சாட்சி...

ஏற்கனவே ஆப்ரேஷன் கஞ்சா 2.0, 3.0, 4.0 அனைத்துமே தோல்வி. இதில் இன்று வெர்ஷன் 2.0 லோடிங் ஆம்.. அ.தி.மு.க. ஆட்சியில் தலை நிமிர்ந்து இருந்த தமிழ்நாட்டை,

ஜாமீனில் வந்தவர்க்கெல்லாம் தியாகி பட்டம் கொடுத்து தலைகுனிய வைத்ததற்கு பொம்மை முதல்-அமைச்சரே சாட்சி!2026-ல் ஒரே வெர்ஷன்தான் -அது அ.தி.மு.க. வெர்ஷன்தான். மக்கள் வருகின்ற 2026 சட்டமன்ற பொதுத் தேர்தலில் பெரிய 'ஓ' (0) வாக போட்டு #ByeByeStalin... என்று சொல்லும்போது முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தாங்கள் சட்டையை கிழித்துக்கொண்டு தவழ்ந்து செல்லாமல் இருந்தால் சரி. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பஹல்காம் சம்பவங்கள் மீண்டும் நடக்கக் கூடாது

## நடிகர் அஜித்குமார் கண்டனம்

**புதுடெல்லி, ஏப்.30-**

பஹல்காம் தாக்குதல் போன்ற சம்பவங்கள் மீண்டும் நடக்காது என்று நம்புகிறேன் என்று பத்மபூஷண் விருது பெற்ற நடிகர் அஜித்குமார் கூறியுள்ளார்.

டெல்லியில் நடிகர் அஜித்குமாருக்கு நேற்று முன்தினம் (ஏப்.28) பத்மபூஷண் விருது வழங்கப்பட்டது. குடியரசுத் தலைவர் மாளிகையில் நடந்த விழாவில் அஜித்குமார் தனது குடும்பத்துடன் கலந்து கொண்டார். இந்நிலையில் ஏ.என்.ஐ. செய்தி முகமைக்கு அவர் அளித்த பேட்டியில், "பஹல்காம் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன், இனிமேல் இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நடக்காது என்று நம்புகிறேன். இந்த விவகாரத்தில், அரசு தனது கடமையை சிறப்பாக செய்து வருகிறது. நாம் அனைவரும் வேற்றுமைகளை மறந்து, அமைதியான சமூகமாக வாழ வேண்டும்.

இன்று (நேற்று) நான் நமது ராணுவ வீரர்களைச் சந்தித்தேன். அவர்களுடைய தியாகத்தை நாம் ஒவ்வொருவரும் வணங்க வேண்டும். ராணுவ வீரர்களின் கடுமையான உழைப்பால் தான் நாம் அனைவரும் நிம்மதியாக உறங்குகிறோம். ராணுவத்தினருக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இரவு பகல் பாராமல் அவர்கள் நமது நாட்டின் எல்லையைப் பாதுகாக்கின்றனர். அவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில், ஒவ்வொரு மதத்தவருக்கும், சாதியினருக்கும் மதிப்பளித்து நாட்டில் சண்டையிட்டுக் கொள்ளாமல், ஒற்றுமையோடும் அமைதியோடும் வாழ வேண்டும்'' என்று அவர் கூறியுள்ளார்.

# மே 3-ல் தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டம்

**சென்னை, ஏப். 30-**

முதல்வர் ஸ்டாலின் தலைமையில் திமுக மாவட்ட செயலாளர்கள் கூட்டம் வரும் 3 ம்தேதி சென்னையில் நடைபெறுகிறது.

தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டம் வருகிற 3-ம் தேதி காலை 10.30 மணிக்கு முதல்வரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறுகிறது. அறிவாலயத்தில் கலைஞர் அரங்கில் நடைபெறும் இக்கூட்டத்திற்கு அனைத்து மாவட்ட செயலாளர்களும் தவறாமல் வந்து பங்கேற்க வேண்டும் என்று பொதுசெயலாளர் துரைமுருகன் வெளியிட்ட அறிக்கையில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# பாராளுமன்ற சிறப்புக் கூட்டத்தொடர்: பிரதமர் மோடிக்கு ராகுல் காந்தி கடிதம்

**புதுடில்லி, ஏப்.30-**

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்கு எதிராக இந்தியாவின் ஒற்றுமையைக் காட்ட பாராளுமன்ற சிறப்புக் கூட்டத்தொடரை கூட்ட வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடிக்கு மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கடிதம் எழுதியுள்ளார்.

ஜம்மு - காஷ்மீரின் பஹல்காம் சுற்றுலாத் தலத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 சுற்றுலாப் பயணிகள் பலியாகினர்.

இதனைத் தொடர்ந்து, அனைத்துக் கட்சிகள் கூட்டத்தை கூட்டிய மத்திய அரசு, பஹல்காம் தாக்குதல் தொடர்பாக விளக்கம் அளித்தது. இதையடுத்து, மத்திய அரசின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்கும் என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி அறிவித்தார்.

இந்த நிலையில், காங்கிரஸ் தலைவரும் மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவருமான மல்லிகார்ஜுன கார்கேவைத் தொடர்ந்து, மக்களவை எதிர்க்கட்சித் தலைவரான ராகுல் காந்தியும் பாராளுமன்ற சிறப்புக் கூட்டத்தை கூட்டக் கோரி பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அதில், ராகுல் காந்தி தெரிவித்திருப்பதாவது: "பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதல் ஒவ்வொரு இந்தியரையும் கோபப்படுத்தியுள்ளது. இந்த நெருக்கடியான நேரத்தில், பயங்கரவாதத்துக்கு எதிராக நாம் எப்போதும் ஒன்றாக நிற்போம் என்பதை இந்தியா காட்ட வேண்டும். பாராளுமன்றத்தின் இரு அவைகளின் சிறப்புக் கூட்டத்தொடர் கூட்டப்படும் என்று எதிர்க்கட்சி நம்புகிறது. அங்கு மக்களின் பிரதிநிதிகள் தங்கள் ஒற்றுமையையும் உறுதியையும் காட்ட முடியும். அத்தகைய சிறப்புக் கூட்டத்தை விரைவில் கூட்ட வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

# இஸ்லாமிய கோர்டுகளுக்கு சட்ட அங்கீகாரம் இல்லை

## சுப்ரீம் கோர்ட் திட்டவட்டம்

**புதுடெல்லி, ஏப்.30-**

இஸ்லாமிய நீதிமன்றங்களுக்கு சட்ட அங்கீகாரம் இல்லை. அவை பிறப்பிக்கும் உத்தரவுகள் யாரையும் கட்டுப்படுத்தாது என சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு ஒன்றில் குறிப்பிட்டுள்ளது.

இஸ்லாமிய பெண் ஒருவர் இரண்டாவது திருமணம் செய்து கொண்டுள்ளார். கணவர் பைக் உடன் ரூ.50,000 வரதட்சிணை கேட்டு தொந்தரவு செய்துள்ளார். எதுவும் கிடைக்காததால் காஜியாத் நீதிமன்றம் மூலம் தலாக் பெற்றுள்ளார். அதன்பின் விவகாரத்து பெற்ற பெண், ஜீவனாம்சம் கோரி குடும்ப நல நீதிமன்றத்தை நாடியுள்ளார்.

இருவருக்கும் இது இரண்டாவது திருமணம் என்பதால், தனியாக வாழ்வதற்கு மனைவியே காரணம் என கூறி ஜீவனாம்சம் கோரிக்கையை நிராகரித்துவிட்டது.

அலகாபாத் உயர் நீதிமன்றமும் ஜீவனாம்சக் கோரிக்கையை நிராகரித்ததால், அந்தப் பெண் பின்னர் சுப்ரீம் கோர்ட்டில் முறையிட்டார். இந்த மனு நீதிபதிகள் சுதான்சு துலியா, அஷானுதீன் அமனுல்லா தலைமையிலான அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது, சுப்ரீம் கோர்ட் 2014-ல் வழங்கிய தீர்ப்பை சுட்டிக் காட்டிய நீதிபதிகள், "காஜி நீதிமன்றம், ஷரியா நீதிமன்றம் போன்றவற்றுக்கு சட்ட அங்கீகாரம் இல்லை. அவை பிறப்பிக்கும் உத்தரவுகள் யாரையும் கட்டுப்படுத்தாது. அதை அமல்படுத்தவும் முடியாது ஒரு வழக்கில் சுப்ரீம் கோர்ட் ஏற்கெனவே தீர்ப்பளித்துள்ளது. ஷரியா நீதிமன்றங்கள் எடுக்கும் முடிவுகள் எல்லாம் சம்பந்தப்பட்டவர்கள் ஏற்றுக்கொண்டால் மட்டுமே செல்லுபடியாகும். அது மூன்றாம் நபருக்கு பொருந்தாது.

இரண்டாவது திருமணம் என்பதால் வரதட்சிணைக்கு வாய்ப்பில்லை என காரணம் கூறி குடும்ப நல நீதிமன்றம், அலகாபாத் உயர் நீதிமன்றம் ஜீவனாம்சத்தை மறுத்துள்ளன. இந்த முடிவுகள் எல்லாம் சட்டப்படியானது அல்ல, யூகத்தின் அடிப்படையிலானது. நீதிமன்றம் என்பது ஒழுக்கம் மற்றும் நெறிமுறைகள் குறித்து சமூகத்துக்கு போதிக்கும் ஒரு நிறுவனம் அல்ல. பைக் மற்றும் ரூ.50,000 கேட்டு மனைவியை கணவர் கொடுமைப் படுத்தி விவகாரத்து செய்துள்ளார். அவர் மனைவிக்கு மாதம் ரூ.4,000 ஜீவனாம்சம் வழங்க வேண்டும்'' என்று நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்.

# பஹல்காம் தாக்குதல் சம்பவம்: மத்திய உள்துறை அமைச்சகம் முக்கிய ஆலோசனை

**புதுடில்லி, ஏப்.30-**

பஹல்காம் தாக்குதல் தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சகம் முக்கிய ஆலோசனை நடைபெற்றது.

ஜம்மு - காஷ்மீரின் பஹல்காம் சுற்றுலாப் பகுதியில் கடந்த ஏப். 22 அன்று பயங்கரவாதிகள் நடத்திய கொடூரத் தாக்குதலில் 26 சுற்றுலாப் பயணிகள் கொல்லப்பட்டனர். இந்த சம்பவம் நாட்டில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ள நிலையில் பாகிஸ்தானுக்கு எதிராக மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

பாகிஸ்தானும் இந்தியாவுக்கு எதிராக நடவடிக்கைகளை அறிவித்து வருவதால் இரு நாடுகளுக்கும் இடையே பதற்ற சூழல் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் மத்திய உள்துறை செயலாளர் கோவிந்த் மோகன் தலைமையில் முக்கிய உயர்நிலை ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் எல்லைப் பாதுகாப்புப் படை, அசாம் ரைபிள்ஸ் மற்றும் தேசிய பாதுகாப்புப் படை இயக்குநர் ஜெனரல்கள், மத்திய ரிசர்வ் காவல் படை மற்றும் மத்திய தொழில்துறை பாதுகாப்புப் படையின் மூத்த அதிகாரிகள் கலந்து கொண்டனர். பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் பாதுகாப்பு விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழுக் கூட்டம் இன்று நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

# மே 12ம் தேதி இ.பி.எஸ்.-ன் 71-வது பிறந்தநாள் விழா

## ஏழைகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்க திட்டம்

**சென்னை, ஏப். 30-**

அ.தி.மு.க.வில் முதன் முதலாக எடப்பாடி பழனிசாமியின் பிறந்தநாள் விழா வரும் மே 12 ம்தேதி கொண்டாடப்படுகிறது. இந்த கொண்டாட்டத்தில் ஏழைகளுக்கு அன்னதானம், ரத்த தானம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.

சென்னை ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க. அலுவலகத்தில் ஜெயலலிதா பேரவை மாவட்ட செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது, சட்டமன்ற எதிர்க்கட்சித்துணை தலைவரும் ஜெயலலிதா பேரவை மாநில செயலாளருமான ஆர்.பி. உதயகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் முன்னாள் அமைச்சர்கள் திண்டுக்கல் சீனிவாசன், எஸ்.பி. வேலுமணி, நத்தம் விஸ்வநாதன், ஒ.எஸ்.மணியன், கடம்பூர் ராஜூ, பா.வளர்மதி, மற்றும் எம்.எல்.ஏ.க்கள் கிருஷ்ணமுரளி, வி.கே. சிவக்குமார் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் வரும் மே 12-ம் தேதி எதிர்க்கட்சித் தலைவரும் அ.தி.மு.க. பொது செயலாளருமான எடப்பாடி பழனிசாமியின் 71-வது பிறந்தநாள் எளியோருக்கு ஏற்றம் தரும் திருவிழாவாக கொண்டாடப்படும் என்று அறிவிக்கப்பட்டது. எடப்பாடி பழனிசாமியின் பிறந்தநாளையொட்டி சர்வசமய பிரார்த்தனைகளும் ஏழை எளிய மக்கள் பயன் பெறும் வகையில் நலத்திட்ட உதவிகள் அன்னதானங்கள் மருத்துவ முகாம்கள், மாணவர்களுக்கான விளையாட்டு போட்டி மற்றும் பெண்களுக்கான கோலப்போட்டிகள் நடத்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அ.தி.மு.க. ஆட்சியின் சாதனைகளை பட்டியலிட்டு கிராமங்கள் தோறும் நடத்தப்படும் திண்ணை பிரசாரம் தொடர்ந்து 12 வாரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அதனை தொடர்ந்து வீடுகள் தோறும் நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது, மேலும் 2026 ஆம் ஆண்டு நடைபெறும் சட்டமன்றத்தேர்தலில் எடப்பாடி பழனிசாமியை தமிழக முதலமைச்சராக்கும் வகையில் அயராது உழைப்பது என்றும் அவருடைய பிறந்தநாளை கொண்டாடும் வகையில் சென்னையில் மிகப்பெரிய பொதுக்கூட்டம் நடத்துவது என்று முடிவெடுக்கப்பட்டது. முன்னதாக இந்த கூட்டத்தில் பேசிய எதிர்க்கட்சித் துணைத்தலைவர் ஆர்.பி., உதயகுமார், கடந்த சட்டமன்றக்கூட்டத்தில் மின்சாரத் துறை மானியக்கோரிக்கை விவாதத்தில் முன்னாள் அமைச்சர் நத்தம் விஸ்வநாதனை தி.மு.க.வினர் பேச விடவில்லை. அதனால் எதிர்க்கட்சித்தலைவர் எடப்பாடி பழனிசாமி, உங்களுக்கு சரியான பாடம் புகட்டப்படும் என்று கூறினார். அதனால் தானோ என்னவோ மின்சாரத்துறை அமைச்சர் செந்தில் பாலாஜி, தொடர்ந்து அமைச்சராக இருப்பாரா இல்லையா என்ற நிலை ஏற்பட்டு இருக்கிறது.

எதிர்காலத்தில் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க. கூட்டணி வெல்வது நிச்சயம் அ.தி.மு.க.வை பொறுத்தவரை 234 தொகுதிகளில் வெல்வது லட்சியம். 200 இடங்களில் வெல்வது நிச்சயம். நேற்றுவரை இரண்டாவது இடத்திற்கு தான் போட்டி நிலவுகிறது என்று இறுமாப்புடன் பேசிய தி.மு.க.வினர், இப்போது கூட்டணி அமைந்ததும் கூட்டணி ஆட்சியா தனித்த ஆட்சியா என்று கேட்கின்றனர். இதிலிருந்தே அ.தி.மு.க. கூட்டணி வெற்றி கூட்டணி என்று உறுதியாகிவிட்டது என்றார். இந்த கூட்டத்தில் அ.தி.மு.க. எம்.எல்.ஏ. ஜெயகுமார், முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் முருகுமாறன், சரவணன் ஜெயலலிதா பேரவை நிர்வாகிகள் மூவேந்தன், எஸ்.டி.எஸ். செல்வம், கே.ஏ.கே. முகில் ஆகியோர் பங்கேற்று பேசினர்.

# பிரதமர் நரேந்திர மோடியுடன் நயினார் நாகேந்திரன் சந்திப்பு

**புதுடெல்லி, ஏப்.30-**

டெல்லியில் பிரதமர் மோடியை தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் சந்தித்து பேசினார்.

தமிழக சட்டசபை தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெறுகிறது. தேர்தலுக்கு இன்னும் ஓராண்டு உள்ள நிலையில், அரசியல் களம் இப்போதிலிருந்தே சூடுபிடிக்க தொடங்கிவிட்டது. தமிழகத்தில் பா.ஜ.க.வுடன் அ.தி.மு.க. மீண்டும் கூட்டணி அமைத்துள்ளது. அதேபோல தமிழக பா.ஜ.க. தலைவராக இருந்த அண்ணாமலை மாற்றப்பட்டு நயினார் நாகேந்திரன் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், நயினார் நாகேந்திரன் நேற்று முன்தினம் திடீர் பயணமாக டெல்லி சென்றார். டெல்லியில், மத்திய உள்துறை மந்திரி அமித்ஷாவை பகல் 1 மணியளவில் சந்தித்து பேசினார். இந்த சந்திப்பு சுமார் ½ மணி நேரம் வரை நீடித்தது.

இந்த சந்திப்பின்போது, வருகிற 2026 சட்டசபை தேர்தல் கூட்டணியை வலுப்படுத்துவது தொடர்பாகவும், தேர்தலை எதிர்கொள்வது, குறித்தும், கட்சியில் நிர்வாகிகள் நியமனம், பூத் கமிட்டியை மேம்படுத்துவது குறித்தும் இருவரும் தீவிர ஆலோசனை நடத்தினார்கள்.

இந்த நிலையில், நயினார் நாகேந்திரன் நேற்று பிரதமர் மோடியை சந்தித்து பேசியுள்ளார். இந்த சந்திப்பின் போது பல்வேறு முக்கிய விவகாரங்கள் குறித்து பேசப்பட்டு இருக்கலாம் என்று சொல்லப்படுகிறது.

# எஸ்.பி.வேலுமணி வீட்டில் ரஜினிகாந்த்: புதுமண தம்பதியினரை வாழ்த்தினார்



**சென்னை, ஏப்.30-**

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணியின் வீட்டிற்கு சென்று புதுமண தம்பதியினரை ரஜினிகாந்த் வாழ்த்தினார்.

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சரும், தொண்டாமுத்தூர் தொகுதி எம்.எல்.ஏ.வுமான எஸ்.பி.வேலுமணியின் மகன் விஜய்விகாஸ் திருமணம் கடந்த மார்ச் 3 ஆம் தேதி மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.

நடிகர் ரஜினிகாந்தை, எஸ்.பி. வேலுமணி நேரில் சந்தித்து தனது மகன் திருமணத்தில் பங்கேற்குமாறு அழைப்பு விடுத்து அழைப்பிதழை வழங்கினார். ஆனால் படப்பிடிப்பு பணிகளில் தன்னை முழுமையாக ஈடுப்படுத்திவிட்டதால் ரஜினிகாந்தால் திருமணத்தை நேரில் சென்று பங்கேற்க முடியவில்லை.

அதனால் படப்பிடிப்பு முடிந்து வந்தவுடன் நேற்று எஸ்.பி. வேலுமணி வீட்டிற்கு சென்று மணமக்களை வாழ்த்தி அவருக்கு மிகவும் பிடித்தமான ஸ்ரீ ராகவேந்திரா உருவ படத்தை பரிசாக வழங்கினார். அப்போது எடுத்த வீடியோ இணையத்தில் பரவி வருகிறது.

# பஹல்காம் முக்கிய குற்றவாளி மூசா பாகிஸ்தான் முன்னாள் ராணுவ வீரர்

## அதிர்ச்சி தகவல் வெளியீடு

**ஸ்ரீநகர், ஏப்.30-**

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் ஹாஷிம் மூசா பாகிஸ்தான் ராணுவத்தின் முன்னாள் சிறப்புப் படை வீரராக இருந்தவர் என்று தெரியவந்துள்ளது.



ஜம்மு - காஷ்மீர் பஹல்காம் பயங்கரவாத தாக்குதலில் 26 பேரைக் கொன்றவர்களின் புகைப்படங்களை, காயமடைந்தவர்கள் அளித்த தகவலின் அடிப்படையில் வரைந்து போலீசார் வெளியிட்டனர்.

அவர்கள் பாகிஸ்தானைச் சேர்ந்த சுலைமான் என்ற ஹாஷிம் மூசா மற்றும் தல்ஹா பாய் என்ற அலி பாய் என்பதும் மற்றொருவர் அனந்த்நாக் மாவட்டத்தைச் சேர்ந்த அபித் ஹுசைன் தோக்கர் என்பதும் கண்டறியப்பட்டது.

இந்த நிலையில், ஹாஷிம் மூசா குறித்த அதிர்ச்சித் தகவல்கள் தற்போது விசாரணையில் வெளியாகியுள்ளது.

ஹாஷிம் மூசா என்பவர் பாகிஸ்தான் ராணுவத்தின் சிறப்புப் படையில் பணியாற்றியவர். பாகிஸ்தான் ராணுவத்தில் இருந்து வெளிவந்த அவர், தடைசெய்யப்பட்ட லஷ்கர் - ஏ - தொய்பாவில் இணைந்துள்ளார்.

காஷ்மீரில் சதித்திட்டங்களுக்கு வலுசேர்க்கும் விதத்தில், லஷ்கர் - ஏ - தொய்பாவில் இணைய பாகிஸ்தான் ராணுவமே ஹாஷிம் மூசாவிடம் கேட்டுக் கொண்டிருக்கலாம் என்று விசாரணை அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.

பயிற்சி பெற்ற சிறப்புப் படை வீரரான மூசா, போர் மற்றும் ரகசிய நடவடிக்கைகளில் நிபுணத்துவம் பெற்றவராக இருக்கலாம் எனத் தெரிகிறது.

இத்தகைய பயிற்சி பெற்றவர்கள் அதிநவீன ஆயுதங்களை கையாள்வதில் திறம்பட செயல்படக் கூடியவர்களாக இருப்பார்கள். பஹல்காம் தாக்குதல் தொடர்பாக தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் தற்போது விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். காஷ்மீரில் பயங்கரவாதிகளுக்கு ஆதரவாக செயல்படுபவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில் மூசா குறித்த தகவல்கள் தெரியவந்துள்ளது.

# வெளிமாநில தொழிலாளர்களுக்கு அடையாள அட்டை வழங்க தமிழ்நாடு அரசு பரிசீலனை

**சென்னை, ஏப்.30-**

வெளிமாநில தொழிலாளர்களுக்கு அடையாள அட்டை வழங்க பரிசீலிக்கப்படும் என சட்டப்பேரவையில் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் தெரிவித்துள்ளார். தமிழக சட்டப்பேரவையில் காவல் துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்தில் தி.வேல்முருகன் எம்.எல்.ஏ. பேசும் போது, "வெளிமாநிலத் தொழிலாளர்களால் தமிழகத்தில் பல இடங்களில் சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்பட்டு வருகிறது. அதனால் அவர்கள் என்ன பணிக்காக வருகிறார்கள், எங்கு செல்கிறார்கள், எந்த நிறுவனத்தில் பணியமர்த்தப்படுகிறார்கள், எப்போது மாநிலத்தை விட்டு வெளியேறுகிறார்கள் என்பதை கண்காணிக்க வேண்டும். என்றார். அ.தி.மு.க. எம்.எல்.ஏ. ஓ.எஸ்.மணியன் பேசும்போது, "வெளி மாநில தொழிலாளர்களுக்கு அடையாள அட்டை வழங்க வேண்டும்'' என்று கோரியிருந்தார். இதற்கு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் அளித்த பதில்: ஒவ்வொரு மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் வெளி மாநில தொழிலாளர்கள் வருகையை பதிவு செய்வதற்கான போர்ட்டல்கள் உள்ளன. அதன் வழியாக பதிவு செய்யப்பட்டு வருகிறது. தொழிலாளர் நலத்துறை இணை ஆணையர் அலுவலகம், உதவி ஆணையர் அலுவலகங்களிலும் வெளி மாநில தொழிலாளர் வருகை பதிவு செய்யப்படுகிறது. நகைக்கடை மற்றும் மளிகைக்கடை உரிமையாளர்கள் உள்ளிட்டோரும், தங்கள் கடைகளில் பணியில் சேர்த்துக்கொள்ளப்படும் வெளி மாநில தொழிலாளர் விவரங்களை பதிவு செய்துக்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது. வெளிமாநில தொழிலாளர்களுக்கு அடையாள அட்டை வழங்குவது குறித்து அரசு சார்பில் பரிசீலிக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக காஷ்மீரில் பூங்கா, சுற்றுலா தலங்கள் மூடல்

**ஸ்ரீநகர், ஏப்.30-**

பஹல்காம் தாக்குதலைத் தொடர்ந்து பாதுகாப்பு முன்னெச்சரிக்கையாக காஷ்மீரில் பொதுமக்கள் பயன்பாட்டுக்கான பூங்காக்கள் மற்றும் சில சுற்றுலா தலங்கள் மூடப்பட்டுள்ளன. ஜம்மு காஷ்மீர் அரசின் இந்த நடவடிக்கை குறித்து அதிகாரிகள் கூறுகையில், "காஷ்மீரில் தாக்குதல் அச்சுறுத்தல் உள்ள சுமார் 50 பூங்காக்கள் மூடப்பட்டுள்ளன. மூடப்பட்டுள்ள பூங்காக்கள் காஷ்மீரில் இருந்து தொலைவில் உள்ளன. அவற்றில் சில கடந்த 10 ஆண்டுகளில் புதிதாக திறக்கப்பப்படவை. பாதுகாப்பு சோதனை என்பது ஒரு தொடர் நடவடிக்கை. வரும் நாட்களில் இந்த மூடப்படும் பட்டியலில் மேலும் சில இடங்கள் சேர்க்கப்படலாம்.'' என்றனர். அதே போல், சுற்றுலா பயணிகள் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ள இடங்களில், தூஷ்பத்ரி, கோகேர்நாக், துக்சும், சின்தான் டாப், அக்சாபால், பங்கஸ் பள்ளத்தாக்கு, மார்கன் டாப் மற்றும் தோஸ்மைதானம் ஆகியவை அடங்கும். தெற்கு காஷ்மீரில் உள்ள பிரபல மொகல் தோட்டங்களுக்குச் செல்வதற்கும் சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இந்த மூடல் குறித்த அதிகாரபூர்வ அறிவிப்புகள் எதுவும் வெளியிடப்படவில்லை என்றாலும், அந்தப் பகுதிகளுக்கு செல்ல சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



குறுவை பருவ நெல் சாகுபடி குறித்து விவாதிக்க விவசாயிகள் சங்க நிர்வாகிகள் கூட்டத்தை அரசு நடத்த வேண்டும். கூட்டத்திற்கு முதல்வர் தலைமை ஏற்பதுடன், நீர்வளம், வேளாண்மை, ஊரக வளர்ச்சி, வருவாய், உணவு, கூட்டுறவு ஆகிய துறைகளின் அமைச்சர்களும், அதிகாரிகளும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்க வேண்டும்.

**- ராமதாஸ்**



மத்திய புலனாய்வுத்துறை, அமலாக்கத்துறை ஆகிய அமைப்புகளை பா.ஜ.க. கைப்பாவையாக வைத்துக் கொண்டு எதிர்கட்சிகளை முடக்கி விடலாம் என நினைக்கும் நேரத்தில், டெல்லி நீதிமன்றம் சுரேஷ் கல்மாடி உள்ளிட்டவர்களை நிரபராதிகள் என விடுவித்திருப்பது, மன்மோகன்சிங் ஆட்சி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை தவிடு பொடியாக்கியுள்ளது.

**- செல்வப்பெருந்தகை**



இந்தியாவிலுள்ள பாகிஸ்தானியர்கள் அனைவரும் நாடு கடத்தப்பட வேண்டும் எனும் மத்திய அரசின் திட்டம், மனிதாபிமான நெருக்கடிகளை உருவாக்கியுள்ளது. இந்தியர்களை மணந்த பாகிஸ்தானியர்களை நாடுகடத்தும் திட்டத்தை மத்திய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

**- மெஹபூபா முஃப்தி**



காமன்வெல்த் ஊழல் குற்றச்சாட்டு வழக்கை முடித்து வைக்குமாறு அமலாக்கத்துறை தாக்கல் செய்த அறிக்கையை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. இந்த விவகாரத்தில் தவறான குற்றச்சாட்டுகளை முன்வைத்து நாட்டு மக்களைத் தவறாக வழிநடத்தியதற்கு பிரதமர் மோடியும், கெஜ்ரிவாலும் மன்னிப்பு கேட்க வேண்டும்.

**- ஜெய்ராம் ரமேஷ்**

கன்னியாகுமரி மாவட்டத்தில்

# அனைத்து கிராம ஊராட்சிகளிலும் நாளை கிராமசபைக் கூட்டம் நடைபெறும்: கலெக்டர் ஆர்.அழகுமீனா தகவல்

**கன்னியாகுமரி,ஏப்.30-**

தொழிலாளர் தினமான 01.05.2025 அன்று அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக் கூட்டத்தினை ஊராட்சிகளின் எல்லைக்குட்பட்ட வார்டுகளில் சுழற்சி முறையில் காலை 11.00 மணி அளவில் நடத்திடவும் அரசாணையில் குறிப்பிட்டுள்ளவாறு குறைவெண்வரம்பின் படி உறுப்பினர்களின் வருகை இருப்பதை உறுதி செய்து கிராம சபைக் கூட்டம் நடத்திடவும் தமிழ்நாடு அரசால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 9 ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட 95 கிராம ஊராட்சிகளிலும் 01.05.2025 காலை 11.00 மணியளவில் கிராமசபைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இக்கிராம சபைக் கூட்டத்தில் கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம், பொது சுகாதாரம் மற்றும் அனைத்து துறைகளிலும் மேற்கொள்ளப்படும் வளர்ச்சித் திட்டங்கள் குறித்தும் விவாதிக்கப்படவுள்ளது.

மேலும், அரசால் பல்வேறு துறைகளின் மூலமாக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து பொது மக்களிடம் எடுத்துரைக்கவும், பொது மக்களுக்குத் தேவையான விவரங்களை அளித்திடவும் அனைத்துத் துறைகளின் அலுவலர்களும் இக்கிராம சபைக்கூட்டத்தில் பங்கேற்கவுள்ளனர்.

எனவே, பொதுமக்கள் அனைவரும் அந்தந்த பகுதிகளில் நடைபெறவுள்ள கிராம சபைக் கூட்டத்தில் திரளாக கலந்து கொண்டு பல்வேறு நலத்திட்டங்கள் பற்றி அறிந்து பயன்பெற கேட்டுக்

கொள்ளப்படுகிறது. இவ்வாறு கலெக்டர் ஆர்.அழகுமீனா தெரிவித்தார்கள்.



வீரகேரளம்புதூரில் ர இளைஞரணி வேல்ராஜ் விக்னேஷ் ஏற்பாட்டில் கலைஞர் குடிநீர் பந்தலைதென்காசிதெற்குமாவட்டசெயலாளர்வே.ஜெயபாலன்,தொகுதிமேற்பார்வையாளர் டாக்டர் கலை கதிரவன் ஆகியோர் திறந்து வைத்து பொதுமக்களுக்கு மோர் மற்றும் தர்பூசணி பழங்களை வழங்கினார். உடன் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த 4 வருடத்தில் 16 ஆயிரத்து 14 பேருக்கு ரூ.47.94 கோடி மதிப்பிலான இலவச வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு பயனாளிகள் நெஞ்சார்ந்த நன்றி

**தூத்துக்குடி.ஏப்.30-**

சமூகத்தில் ஏழ்மை நிலையில் உள்ள அனைத்து மக்களையும் பாதுகாக்கும் நோக்கில், அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்து, அவர்;களுக்கு இந்த அரசு பக்கபலமாக இருக்க வேண்டும், அவர்களின் துயரை துடைக்க வேண்டும் என்றும், ஏழைகளின் சிரிப்பில் இறைவனை காண வேண்டும் என்று சொல்லக்கூடிய பேரறிஞர் அண்ணா அவர்களின் வழியில், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் வழியில் நடக்கக்கூடிய இந்த அரசு இன்றைக்கு சமுதாயத்தில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களுக்கான அரசாக இந்த அரசை தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வழிநடத்தி கொண்டிருக்கிறார்கள். அந்தவகையில், சமூகத்தில் வீடற்ற ஏழை மக்கள் அனைவருக்கும் சொந்தமாக குடியிருப்பு வசதி பெறுவதற்காக இலவச வீட்டுமனைப் பட்டா அல்லது வீடு வழங்க வேண்டுமென்பதே அரசின் கொள்கையாகும். இதனை அடிப்படையாகக் கொண்டு வருவாய் நிலை ஆணை எண். 21 இன் கீழ் கிராம நத்தத்தில் காலியாகவுள்ள அரசு புறம்போக்கு நிலங்களில் தகுதியுடைய, வீடற்ற ஏழை மக்களுக்கு இலவச வீட்டுமனை ஒப்படை செய்யப்பட்டு வருகின்றன. பெண்கள் நலனை உறுதி செய்யும் வகையில் இலவச வீட்டுமனை ஒப்படை குடும்பத்தின் பெண் உறுப்பினர் பெயரில் மட்டுமே வழங்கப்படுகின்றன. ஊரகப் பகுதியில் மூன்று சென்ட் நிலமும், நகர்ப்புற பகுதியில் இரண்டு சென்ட் நிலமும், மாநகராட்சிப் பகுதிகளில் இரண்டு சென்ட் நிலமும் தகுதியுள்ள பயனாளிகளுக்கு நடைமுறையில் உள்ள விதிகளின் படியும், இதர நிபந்தனைகளுக்கு உட்பட்டும் இலவச வீட்டுமனை ஒப்படை செய்யப்படுகிறது. மேலும், மாநகர, நகர மற்றும் ஊரகப் பகுதிகளில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க தகுதியுடைய காலியாகவுள்ள அரசு புறம்போக்கு நிலங்களில் வீடுகட்டி 5 வருடத்திற்கு மேல் குடியிருந்து வரும் நபர்களுக்கு சிறப்புத் திட்டத்தின்கீழ் வரன்முறைபடுத்தி இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டு வருகிறது.

இதன்படி, தூத்துக்குடி மாவட்டத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு ஆட்சிப்பொறுப்பேற்ற நாளான 07.05.2021 முதல் 25.04.2025 வரை 16014 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. பல்வேறு மாவட்டங்களில் வசிக்கும் விளிம்பு நிலையில் உள்ள இருளர்கள், நரிக்குறவர்கள் ஆகியவர்களுக்கு உரிய வீட்டு வசதியினை ஏற்படுத்தி தரும் பொருட்டு முதலமைச்சர் அவர்களின் நேரடிய



பார்வையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதன்படி, தூத்துக்குடி மாவட்டத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, அனைத்துத்தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு மக்கள் நலன் சார்ந்த திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் ஒருபகுதியாக, தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள 10 வட்டங்களில், அதாவது, தூத்துக்குடி வட்டத்தில் 244 பயனாளிகளுக்கு ரூ.75,80,350- மதிப்பிலும், திருச்செந்தூர் வட்டத்தில் 1434 பயனாளிகளுக்கு ரூ.7,77,07,739- மதிப்பிலும், திருவைகுண்டம் வட்டத்தில் 130 பயனாளிகளுக்கு ரூ.40,33,600- மதிப்பிலும், சாத்தான்குளம் வட்டத்தில் 105 பயனாளிகளுக்கு ரூ.5,11,89,696- மதிப்பிலும், ஏரல் வட்டத்தில் 193 பயனாளிகளுக்கு ரூ.88,03,260- மதிப்பிலும், விளாத்திகுளம் வட்டத்தில் 8492 பயனாளிகளுக்கு ரூ.15,36,48,009- மதிப்பிலும், ஓட்டப்பிடாரம் வட்டத்தில் 1411 பயனாளிகளுக்கு ரூ.5,81,332- மதிப்பிலும், கோவில்பட்டி வட்டத்தில் 1712 பயனாளிகளுக்கு ரூ.11,60,25,619- மதிப்பிலும், எட்டயபுரம் வட்டத்தில் 443 பயனாளிகளுக்கு ரூ.1,91,37,60- மதிப்பிலும், கயத்தார் வட்டத்தில் 1850 பயனாளிகளுக்கு ரூ.5,98,49,956- மதிப்பிலும் என மொத்தம் 10 வட்டத்தில் 16014 பயனாளிகளுக்கு ரூ.47,94,19,561-மதிப்பிலான இலவச வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது. ' தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு, தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கை முறைக்கு ஏற்றார் போல், சமூக சீர்திருத்தத் திட்டங்களை அறிமுகப்படுத்தி, சமூகத்தில் நலிந்த பிரிவினரைப் பாதுகாத்து அனைத்துத்தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் நலத்திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது'. இலவச வீட்டுமனைப் பட்டா பெற்ற பயனாளி மகிழ்ச்சியுடன் தெரிவிக்கையில் என் பெயர் முத்துலெட்சுமி. நான் தூத்துக்குடி வட்டம் கீழத்தட்டப்பாறை கிராமத்தில் வசித்து வருகிறேன். எனக்கு 2 பெண் குழந்தைகள் உள்ளது. நானும் என் கணவரும் அன்றாட கூலி வேலை பார்த்து தான் குடும்பத்தை நடத்தி வருகிறோம். நாங்கள் சுமார் இருபது வருடத்திற்கு மேல் கீழத்;தட்டப்பாறை கிராமத்தில் நத்தம் புறம்போக்கு நிலத்தில் குடியிருந்து வருகிறோம். எங்கள் வீட்டிற்கு இலவச வீட்டுமனை பட்டா வாங்க வேண்டும் என்று நீண்ட நாட்களாக நினைத்துக்கொண்டிருந்தேன். அப்பதான் சொன்னாங்க கீழத்தட்டப்பாறை கிராமத்தில் மனுநீதி நாள் முகாம் நடைபெறவுள்ளதை முன்னிட்டு, பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்கள் வழங்க போறாங்கனு சொன்னாங்க. அரசு அலுவலர்கள் எங்க கிராமத்திற்கு நேரில் வந்து மக்களிடம் கோரிக்கை மனுக்கள் வாங்குனாங்க. அப்ப நானும், நான் குடியிருக்கும் வீட்டிற்கு இலவச வீட்டுமனை பட்டா வேண்டி விண்ணப்பித்தேன். பின்னர், மனுநீதி நாள் முகாம் நடைபெறும் ஒருநாளுக்கு முன்பாக உங்கள் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டது நீங்கள் மனுநீதி நாள் முகாமிற்கு வந்து இலவச வீட்டுமனை பட்டா வாங்கிக்கோங்கனு சொன்னாங்க. அப்புறம் முகாமிற்கு வந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கையால வாங்கியது மிகவும் மகிழ்ச்சியா இருந்தது. என்னைப்போன்ற ஏழை எளிய மக்களின் குடியிருப்புகளுக்கு ஒரு அங்கீகாரம் கிடைக்க வேண்டுமென்ற அடிப்படையில் எங்களது கோரிக்கையினை ஏற்று வரன்முறைப்படுத்தி இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாவட்ட நிர்வாகத்திற்கும், சம்மந்தப்பட்ட அரசு அலுவலர்களுக்கும் என் குடும்ப சார்பில் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தொகுப்பு:**
**சே.ரா.நவீன்பாண்டியன்**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**போ.முத்துக்குமார்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி)**
**தூத்துக்குடி மாவட்டம்.**

# தென்காசி நான்கு சக்கர வாகன வியாபாரிகள் மற்றும் ஆலோசகர்கள் நலச்சங்கம் சார்பில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்




**தென்காசி, ஏப் : 30**

தென்காசியில் தமிழ்நாடு கார் வியாபாரிகள் மற்றும் ஆலோசகர்கள் நல மாநில கூட்டமைப்பு, தென்காசி நான்கு சக்கர வாகன வியாபாரிகள் மற்றும் ஆலோசகர்கள் நலச் சங்கம் சார்பில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தென்காசி புதிய பேருந்து நிலையம் அருகே மாவட்ட தலைவர் செல்வசுப்பிரமணியன் தலைமையில், செயலாளர் முகமது மைதீன், பொருளாளர் ராஜன் ஆகியோர் முன்னிலையில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது தமிழகத்தின் சிறு குறு வாகன வணிகர்களின் நலன் கருதி 1989 சட்டப்பிரிவு 430 ன் படி கடன் பதிவு நீக்குதல், பெயர் மாற்றம் போன்ற பணிகளுக்கு வாகன வணிகர்களால் வழங்கப்படும் ஆவணங்களை அதன் உரிமையாளர்களால் அங்கீகரிக்கப்பட்ட கடிதம் கொடுத்து ஆவணங்களை நாங்களே அலுவலகத்தில் நேரடியாக பெற்றுக்கொள்ளும் பழைய நடைமுறையை மீண்டும் செயல்படுத்த வேண்டும், நாடு முழுவதும் கணினி மையமாக்கப்பட்ட பின்பும் ஆவண அலுவல் பணிகள் மிகவும் காலதாமதமாகிறது எனவே வாகன வணிகர்களின் சிரமம் கருதி எங்களால் வழங்கப்படும் ஆவணங்களில் அலுவலகப் பணிகளை விரைந்து முடித்துக் கொடுக்க வேண்டும் எனவும், சிறிய அலுவலகம் மற்றும் ஆலோசகர்களாக செயல்படும் சிறு குறு வாகன வணிகர்களுக்கும் ஜிஎஸ்டி எண் அலுவலக விபரம் போன்ற விதிகளில் மாற்றம் செய்து எளிய முறையில் வாகன வணிக சான்றிதழ்கள் பெற ஆவணம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும், மேலும் கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு சாதகமாகவும் சிறு குறு வாகன வணிகர்களுக்கு எதிராகவும் மத்திய அரசால் கொண்டுவரப்படும் புதிய போக்குவரத்து சட்டங்களை மாநில வட்டார போக்குவரத்து துறை அலுவலகங்களில் அமல்படுத்துவதை தமிழக அரசு உடனடியாக தடுத்து நிறுத்திட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தென்காசி, பாவூர்சத்திரம், ஆலங்குளம், சிவகிரி, வாசுதேவநல்லூ,ர் சங்கரன்கோவில் உள்ளிட்ட மாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு கண்டன கோஷங்கள் எழுப்பியவாறு கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் தென்காசி மாவட்ட துணைச் செயலாளர்கள் செல்வம், ரவிக்குமார், செயற்குழு உறுப்பினர்கள் பாப்புலர் ராயப்பா, செல்லதுரை, செந்தில், ஜெகன், குமார், பாலாஜிகண்ணன், யாசர், மணி உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# கொண்டலூர் அரசு தொடக்க பள்ளியில் கோடைகால சிறப்பு முகாம்

**தென்காசி ஏப்.30:**

தென்காசி மாவட்டம் கீழப்பாவூர் ஒன்றியம் கொண்டலூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் எட்டு நாட்கள் கோடைகால சிறப்பு பயிற்சி முகாம் நடைபெற்று வருகிறது.

ஏழாம் நாள் கோடைகால பயிற்சி முகாமில் கதை கேளு. கதை கேளு. நிகழ்ச்சி நடைபெற்றது. மாணவர்களின் கதை கேட்கும் பழக்கத்தை அதிகரிக்கவும், அவர்களிடம் கதை கூறும் பழக்கத்தை ஊக்குவிக்கும் விதமாகவும் கதை கேளு கதை கேளு நிகழ்ச்சியை சங்கரன் கோவில் கோமதி அம்பாள் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தமிழ் ஆசிரியரும் நல்லாசிரியருமான முனைவர் சங்கர் ராம் வால் கோமாளி வேடமிட்டு நடத்தினார்.



மாணவர்களுக்கு பல்வேறு கதைகளையும், கதைகளை எப்படி உருவாக்க வேண்டும் எனவும்,குழந்தைப் பருவத்தில் கதை சொல்வதால், கேட்பதால் கிடைக்கும் நன்மைகள் பற்றியும் இந்நிகழ்ச்சியில் கூறினார்.

மாணவர்கள் ஆர்வத்துடன் பயிற்சியில் கலந்து கொண்டனர். முன்னதாக தலைமை ஆசிரியர் மைக்கேல் ராஜ் வரவேற்றுப் பேசினார். ஆசிரியர் மீனாட்சி நன்றி கூறினார். கோடைக்கால பயிற்சி முகாம் ஏற்பாடுகளை ஆசிரியர்கள் வெனிஷ்டா பொன்சுதா, சகுந்தலா என்ற ராஜகனி, உமா மகேஸ்வரி, தன்னார்வலர்கள் அர்ச்சனா. பிரசன்னா ராணி, சுரேஷ், ராஜகோபால்,தேவராஜ்,ஆறுமுக பாண்டி, தேன்மொழி, சத்துணவு அமைப்பாளர் பொன் ஷீலா, பள்ளி மேலாண்மைக் குழு தலைவர் விஜயா மற்றும் உறுப்பினர்கள் ஊர் பொதுமக்கள்,பெற்றோர்கள் இணைந்து செய்து இருந்தனர்.

# தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம் கீழப்பாவூர் ஒன்றியம் சார்பில் பணி நிறைவு பெற்ற ஆசிரியர்களுக்கு பாராட்டு விழா



**தென்காசி ஏப்.30:**

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம் கீழப்பாவூர் ஒன்றியம் சார்பில் பணி நிறைவு பெற்ற ஆசிரியர்கள் 10 பேருக்கு ( சீனிவாசகம், டேவிட்சன்அருள் பாண்டியராஜ், ஜேம்ஸ் பிரிண்டர் ,ஜெயா செல்வி, கேப்சி பாய், வசந்த மல்லிகா, ராமலட்சுமி, பேபி விக்டோரியா, பங்கேற்கன்னி, மரிய திரவியம்) ஆகியோருக்கு பாராட்டு விழா நிகழ்ச்சி நடைபெற்றது .

நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆசிரியர் மன்ற தலைவர் ராஜசேகர் தலைமை தாங்கினார் ஆசிரியர் மன்ற மாவட்ட செயலாளர் தங்கதுரை வரவேற்று பேசினார் முன்னாள் மாவட்ட திமுக செயலாளர் வழக்கறிஞர் சிவ பத்மநாதன் பரிசுகள் வழங்கி பாராட்டி பேசினார்.

நிகழ்ச்சியில் ஆசிரியர் மன்றம் மாநில பொருளாளர் கணேசன், வட்டார கல்வி அலுவலர் கிருஷ்ண பாரதி ,ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் ஜெயசிங் சுந்தரவேல், மாநில சட்ட செயலாளர் லட்சுமி குமரன், மாவட்ட பொருளாளர் சுந்தரவேல், ஆசிரியர் மன்ற நிர்வாகி அருள்மணி, பாஸ்கர், இளம்பரிதி, சண்முக சிங் ஆகியோர் வாழ்த்தி பேசினார். நிகழ்ச்சியை மன்ற ஒன்றிய செயலாளர் ஆசிரியர் செல்வம் தொகுத்து வழங்கினார்.மன்றத்தின் ஒன்றிய தலைவர் ராஜதுரை நன்றி கூறினார். நிகழ்ச்சியில் முன்னாள் மாவட்ட பொறுப்புக் குழு உறுப்பினர் மேகநாதன், ஆலங்குளம் பேரூராட்சி மன்ற முன்னாள் துணைத் தலைவர் தங்க செல்வம், ஒன்றிய கவுன்சிலர்கள், தர்மராஜ் ,சங்கர், நாகராஜ், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் அந்தோணி ராஜ், கீழப்பாவூர் பேரூர் கழக செயலாளர் ஜெகதீசன், கீழப்பாவூர் கிழக்கு ஒன்றிய துணை செயலாளர் அருணா பேரி பாண்டியன், மாவட்ட பிரதிநிதி அன்பழகன், கிளைக் கழக நிர்வாகிகள் காசி பாண்டியன், சேர்மலிங்கம், முத்து பாண்டியன், மதன் ராஜசேகர், சீனிய்யா, ஏபிஎன் குணா, ராஜபாண்டியன் ,மாணவர் அணி தினேஷ் பாண்டியன், கேபிள் அஜித், ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் அசோக், நற்பணி மன்ற தலைவர் அருணா பாண்டியன், அருணாசலம் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# தென்னையில் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈக்கள் ஒருங்கிணைந்த மேலாண்மை: வேளாண் மாணவர்கள் செயல்விளக்கம்



**தென்காசி ஏப்.30:**

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் பகுதியில், வ.உ.சி தம்பரனார் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய (கிள்ளி குளம், தூத்துக்குடி) இளங்கலை வேளாண்மை இறுதியாண்டு மாணவர்கள் பிரான்சிஸ், மாதவன், செல்வராஜ், நந்தகுமார், அப்துல் ஹலீம், சரண், ரவி பிரஜாபட் , விஷால் மீனா ஆகியோர் கிராமப்புற வேளாண்மை களப்பணி அனுபவ திட்டத்தின் கீழ், தங்கியிருந்து பயிற்சி பெறுவதோடு, இப்பகுதி விவசாயிகளுக்கு தேவையான தகவல்களையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தி வருகின்றனர்.

அதன் ஒரு பகுதியாக, திருவட்டாரின் மாத்தார் பகுதியில் விவசாய கூட்டம் நடத்தினர். அதில் அப்பகுதி விவசாயிகளின் வேளாண் தேவைகளை அறிந்து, மரவள்ளிக் கிழங்கு தண்டு நேர்த்தி, வாழையில் பனமா வாடல் மற்றும் நூற்புழுவைக் கட்டுபடுத்த கிழங்கு நேர்த்தி, ஐந்திலைக் கரைசல், மீன் அமிலம் போன்றவற்றை வேளாண் மாணவர்கள் செயல் விளக்கம் செய்து விளக்கினர்.அப்போது முக்கிய பகுதியாக தென்னையில் தற்போது மிகப்பெரிய பூச்சித் தாக்கமான ரூகோஸ் சுருள் வெள்ளை ஈக்களுக்கான ஒருங்கிணைந்த மேலாண்மை முறையை மாணவர் செல்வராஜ் செயல் விளக்கம் செய்து விளக்கினார். அவர் கூறியதாவது;

பூச்சியைக் கட்டுப்படுத்த தண்ணீரை இலையின் அடிப்புறத்தில் பீச்சி அடிக்கலாம். இயற்கை ஒட்டுண்ணி என்கார்ஸியா குடேலோபே மற்றும் இரை விழுங்கியான கிரைசோபெர்லா 1000 எண்ணம் /எக்டர் வெளியிடலாம். இது சாறு உறிஞ்சும் பூச்சி என்பதால் கரும்பூஞ்சாண் மிகப்பெரிய நோயாகும். இதை தடுக்க மைதா 5% தெளிக்கலாம்.



தென்காசி பணிமனையில் 42 வருடங்களாக பணியாற்றி ஓய்வு பெரும் கருப்பசாமி பணி நிறைவு விழா தென்காசி பணிமனையில் வைத்து நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் திருநெல்வேலி மண்டல நிர்வாக இயக்குனர் தசரதன், வணிகப்பிரிவு மேலாளர் சுப்பிரமணியன், கிளை மேலாளர் முருகன், தொமுச தலைவர் மணிகண்டன், செயலாளர் திவான் ஒலி, நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் போக்குவரத்து தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

# பூசணி செடிகளில் பழ ஈக்களை கருவாட்டுப் பொறி பயன்படுத்தி கட்டுப்படுத்தும் முறை: வேவளாண் மாணவிகள் செயல் விளக்கம்



**தென்காசி ஏப்.30:**

பூசணி வகை செடிகளில் உள்ள பழ ஈக்களை கருவாட்டுப் பொறி பயன்படுத்தி கட்டுப்படுத்தும் முறை குறித்து கிள்ளிகுளம் வேளாண் மாணவிகள் செயல் விளக்கம்.

தென்காசி மாவட்டம் கீழப்பாவூர் வட்டாரத்திற்கு உட்பட்ட குறும்பலாப்பேரி கிராமத்தில் உள்ள விவசாயிகளுடன் மாணவிகள், பூசணியில் உள்ள பழ ஈக்களை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து செயல்விளக்கத்தை அளித்தனர். இந்த செயல்விளக்கத்தினை கிள்ளிகுளம் வ.உ.சி. வேளாண்மை கல்லூரியின் இறுதி ஆண்டு மாணவிகளான ஜெய சூர்யா, காவியா, மோனிகா, நீத்து குமாரி, பிரகதி, சுபானு, சுஷ்மிதா மற்றும் வர்ஷினி ஆகியோர் பங்கேற்றனர்.

தாக்குதலின் அறிகுறிகள்: கால்களற்ற புழுக்கள் காய்களின் உட்பகுதியில் உள்ள திசுக்களை சாப்பிடும். காய்களிலிருந்து பழுப்பு நிறத் திரவம் வடியும். காய்கள் உருக்குலைந்து காணப்படும். காய்கள் முதிர்ச்சி அடைவதற்கு முன்பாக உதிர்ந்துவிடும். பாதிக்கப்பட பழம்பழத்தினிடைய பிளவுகோந்து வெளிப்படுதல். .உள் திசுக்கள் பழுப்படைதல் வளர்ச்சி குன்றிய பழம்.பூச்சிக்கொல்லி மருந்துகள் உபயோகிப்பதை தவிர்க்க வேண்டும். கருவாட்டுப் பொறியை பயன்படுத்தி கட்டுப்படுத்த வேண்டும்.

இதற்கு தண்ணீர் அருந்தும் பாட்டிலில் 5 கிராம் கருவாடு வைத்து ஒரு துளையிட்டு பொறியாக பயன்படுத்தி ஹெக்டேருக்கு 5 வைக்கவும் .இது ஈக்களை கவர்ந்து அழிக்க உதவும். 20 நாட்களுக்கு ஒரு முறை காருவாட்டை மாற்ற வேண்டும்.

இந்த கருவாட்டு வாசனையால் ஈக்கள் எல்லாம் பொறியில் விழுந்து கொல்லப்படுகின்றன.அதிக அளவு பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்துவதை விட, இந்தப் பொறிகள் பயன்படுத்தி சுற்றுச்சூழலை பாதுகாக்கலாம்.

மழைநீர்
உயிர்நீர்



சுரண்டையின் பாத்திர சக்கரவர்த்தி எஸ்.வி.கணேசன் பிறந்த நாளை முன்னிட்டு தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் வே.ஜெயபாலன் தலைமையில் சுரண்டை நகர செயலாளர் கணேசன் முன்னிலையில் நிர்வாகிகள் வாழ்த்து தெரிவித்தனர்



சங்கரன்கோவில் வட்டம் மாங்குடி கிராமத்தில் பாரதிதாசன் 134 வது பிறந்த நாளை முன்னிட்டு தமிழ் வார விழா கொண்டாடப்பட்டது. சங்க காலப்புலவர் மாங்குடி மருதனாருக்கு நிறுவப்பட்டுள்ள நினைவுத் தூணிற்கு வருவாய் கோட்டாட்சியர் கவிதா மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

# ஓபிஎஸ்- தினகரன்- சசிகலாவை அதிமுகவில் சேர்க்க எம்ஜிஆர் பக்தர்கள் ஒருங்கிணைப்பு குழு வலியுறுத்தல்



**சென்னை, ஏப்.30**

அதிமுகவில் ஓபிஎஸ் தினகரனை இணைத்து கட்சியை பலப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது

எம்ஜிஆர் பக்தர்கள் ஒருங்கிணைப்பு குழு நிர்வாகிகள் சத்திய நாராயணன், காப்பாளர் ஹயாத் ஆகியோர் சென்னையில் செய்தியாளர்களை சந்தித்தனர். அப்போது அவர்கள் கூறியதாவது எம் ஜி ஆர் ஆரம்பித்த கட்சியம் ஆட்சியும் நிலைத்திருக்க வேண்டும் என்பது எம் ஜி ஆர் பக்தர்களின் ஆசை யாகும். 2026 ஆம் ஆண்டு தேர்தலில் மீண்டும் எம்ஜிஆர் ஆட்சி வரவேண்டும். கட்சியிலிருந்து பிரிந்து சென்றவர்கள் அனைவரும் ஒரே குடையின் கீழ் இணைய வேண்டும். அதற்காக அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, ஓ. பன்னீர்செல்வம், தினகரன், சசிகலா, , கே. சி. பழனிசாமி, கட்சியை விட்டு ஒதுங்கியிருக்கும் சைதை துரைசாமி, ஆகியோரை ஒருங்கிணைக்க வேண்டும். எங்கள் கோரிக்கையை எடப்பாடி ஏற்பார் என்று கருதுகிறோம். நாங்கள் 1972 ஆம் ஆண்டு எம்ஜிஆர், அதிமுகவை தொடங்கியதில் இருந்து இன்று வரை உறுப்பினராக இருந்து வருகிறோம். கழகம் பிரிந்த காரணத்தால் 2021 ஆம் ஆண்டு தோல்வி அடைந்தோம். அப்போது 200 முதல் 5000 வாக்குகள் குறைந்ததால் தான் ஆட்சி பறிப்போனது.. எம்ஜிஆர் படத்தை பெரியளவில் போட வேண்டும். அதிமுகவே, எம்ஜிஆர் கட்சி என்று தான் மக்கள் நினைக்கிறார்கள். அதிமுக பெறுகிற வாக்குகள் அனைத்தும் எம்ஜிஆருக்காக விழுகின்ற வாக்குகளாகும். அதிமுகவில் எம்ஜிஆரின் பக்தர்களுக்காக தனி அணி ஒன்றை ஏற்படுத்த வேண்டும். அதிமுக பாஜக கூட்டணியை தலைமை அமைத்திருக்கிறது. அதனை நாங்கள் ஆதரிக்கிறோம். பிரிந்தவர்கள் ஒன்று சேர்ந்தால் மீண்டும் பலத்தோடு அதிமுக ஆட்சி அமையும்.

# கிள்ளிகுளம் வேளாண்மை கல்லூரி மாணவர்கள் நடத்தும் டிஜிட்டல் பயிர் கணக்கீட்டு பணி



**தென்காசி ஏப்30:**

அம்பை வட்டாரத்தில் கிள்ளிகுளம் வேளாண்மை கல்லூரி மாணவர்கள் நடத்தும் டிஜிட்டல் பயிர் கணக்கீட்டு பணிகளை ஆய்வு செய்த கல்லூரி முதல்வர் திருநெல்வேலி மாவட்டம், அம்பை வட்டாரத்தில் கிராமப்புற வேளாண் பயிற்சி அனுபவ திட்டத்தின் ழ் வேளாண் துறையுடன் இணைந்து கிள்ளிகுளம் வ.உ.சிதம்பரனார் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நான்காம் ஆண்டு மாணவர்கள் தனுஷ், திகேஷ், கார்த்திக் வாசன், மோகன்ராஜ், சபீன், சஞ்சய் குமார், ஷாலின் பிரைட் சுதர்சன், தருண் குமார் மற்றும் திலக் பாஸ்கர் ஆகியோர், மன்னார் கோவில், பிரம்மதேசம், கீழ அம்பாசமுத்திரம், வெள்ளாங்குழி, பாப்பான்குளம் மற்றும் மேல அம்பாசமுத்திரம் ஆகிய கிராமங்களில் டிஜிட்டல் பயிர் கணக்கீட்டு பணிகளை சிறப்பாக முன்னெடுத்து வருகின்றனர்.

மாணவர்கள், குழு ஒருங்கிணைப்பாளர்களாக செயல்படும் பேராசிரியர்கள் முனைவர் இளஞ்செழியன் மற்றும் முனைவர் ரஜினி மாலா ஆகியோரின் வழிகாட்டலின்படி இந்த பணிகளை திட்டமிட்டு, செயல்திறன் உயர்வுடன் முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த பணிகள் எவ்வாறு நடைபெறுகின்றன, மாணவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் பாதுகாப்பு அம்சங்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்ய, கிள்ளிகுளம் வேளாண்மை கல்லூரியின் முதல்வர் முனைவர் தேரடிமணி மற்றும் பாட ஆசிரியர் முனைவர் காளிராஜன் ஆகியோர் அண்மையில் மன்னார் கோவில் மற்றும் மேல அம்பாசமுத்திரம் கிராமங்களை நேரில் சென்று பார்வையிட்டனர்.

மாணவர்களுடன் நேர்காணல் நடத்தி, தொழில்நுட்ப பிரச்சினைகள் மற்றும் நிலைத்தன்மை தொடர்பான சிக்கல்களை கேட்டறிந்தனர்.

மேலும், மேற்கொள்ளும் பணிகளை பாராட்டி, தேவையான ஆலோசனைகள் மற்றும் ஊக்கமளிக்கும் வழிகாட்டுதல்களையும் வழங்கினர். டிஜிட்டல் பயிர் கணக்கீட்டு பணி மூலம் அந்தந்த பகுதிகளில் பயிர்களின் தற்போதைய நிலை, வகைகள் மற்றும் சாகுபடி முறைகள் பற்றிய துல்லியமான தகவல்கள் சேகரிக்கப்பட்டு, வேளாண் மேம்பாட்டிற்காக பயன்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலம் மாணவர்கள் கிராமப்புற வளர்ச்சியில் நேரடி பங்கெடுத்து, தங்களது தொழில்முறை அனுபவத்தை மேம்படுத்திக் கொண்டும் இருக்கின்றனர்.

இத்தகைய முயற்சிகள் மாணவர்களின் செயல்திறனை மேம்படுத்துவதோடு, இந்திய வேளாண் துறையின் முந்தின வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகின்றன.

# இலஞ்சி பாரத் வித்யா மந்திர் மேல்நிலைப் பள்ளியில் வழிகாட்டுதல் நிகழ்ச்சி



**குற்றாலம் ஏப்.30:**

இலஞ்சி பாரத் வித்யா மந்திர் மேல்நிலைப் பள்ளியில் பதினொன்றாம் வகுப்பு மாணவர்களுக்கு வழிகாட்டுதல் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு பள்ளி முதல்வர் கிப்ட் சன் கிருபாகரன் முன்னிலை வகித்தார். சித்த மருத்துவம் மற்றும் ஆலோசகர் சத்திய பிரியங்கா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.மாணவி ரேகா இவானா நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். ஷைனா யர்டன் வரவேற்புரையாற்றினார். சிறப்பு விருந்தினர் சத்திய பிரியங்கா மாணவர்களுக்கு எதிர்காலத்தை நேர்மறைச் சிந்தனையோடு எவ்வாறு எதிர்கொள்வது என்று வழிகாட்டுதலுடன் ஊக்கப்படுத்தினார். இறுதியாக பள்ளி முதல்வர் கிப்ட் சன் கிருபாகரன் நன்றியுரையாற்றினார்மாணவர்களின் வழிகாட்டுதல் நிகழ்ச்சிக்கு பாரத் கல்விக் குழுமத் தலைவர் மோகனகிருஷ்ணன், செயலாளர் காந்திமதி மோகன கிருஷ்ணன் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

# எடப்பாடி கே.பழனிசாமி முதலமைச்சர் ஆவதற்கு அயராது பாடுபட வேண்டும்: முன்னாள் அமைச்சர் பா.பென்ஜமின் பேச்சு



**சென்னை ,ஏப்.30 -**

மதுரவாயல் கிழக்கு பகுதி அ.தி.மு.க.பூத் கமிட்டி நிர்வாகிகள் பணிகள் குறித்து முன்னாள் அமைச்சர் பா.பென்ஜமின், ராயபுரம் ஆர்.மனோ ஆகியோர் ஆய்வு செய்தனர்.

அ.தி.மு.க.பொதுச் செயலாளரும் , முன்னாள் முதலமைச்சரும் , சட்டமன்ற பிரதான எதிர் கட்சி தலைவருமான எடப்பாடி கே.பழனிசாமி உத்திரவின் பேரில் , திருவள்ளூர் மத்திய மாவட்டம், மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, மதுரவாயல் கிழக்கு பகுதி அ.தி.மு.க.பூத் கமிட்டி நிர்வாகிகள் பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம் மதுரவாயல் மேட்டுக் குப்பத்தில் நடைபெற்றது.இக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சரும், திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளருமான பா.பென்ஜமின் , மாவட்ட தேர்தல் பொறுப்பாளரும், அமைப்பு செயலாளருமான ராயபுரம் ஆர்.மனோ ஆகியோர் பூத் கமிட்டி நிர்வாகிகள் பணிகள் குறித்து ஆய்வு நடத்தினர்.

ஆய்வின் போது , மதுரவாயல் கிழக்கு பகுதிக்கு உட்பட்ட வார்டு எண் 145 வார்டு நீங்கலாக, 145 முதல் 148 வரை உள்ள வார்டுகளில் உள்ள பூத் கமிட்டி நிர்வாகிகள் ஒவ்வொருவரும் ஆய்வு கூட்டத்திற்கு வந்து உள்ளனரா என ஆய்வு செய்தனர்.பின்னர் பூத் கமிட்டி நிர்வாகிகள் பணிகள் குறித்து ஆய்வு செய்து , இரட்டை இலை சின்னம் வெற்றி பெற்று, மீண்டும் அ.தி.மு.க.பொதுச் செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி முதலமைச்சர் ஆவதற்கு அயராது பாடுபட வேண்டும் என்று ஆலோசனை வழங்கினார்கள்.

இந்த கூட்டத்தில் பகுதிச் செயலாளர் ஏ.தேவதாஸ் , மாவட்ட நிர்வாகிகள் கா.சு.ஜனார்த்தனன் , ராஜா என்கிற பேரழகன், மாநில மருத்துவ அணி துணை செயலாளர் டாக்டர்.பூவை.எம். பிரேம் குமார் ஞானம், சென்னை மாநகராட்சி எதிர் கட்சி துணைத் தலைவரும், 145 வது வார்டு மாமன்ற உறுப்பினருமான டி.சத்தியநாதன் , மாணவர் அணி செயலாளர் கே.சதிஷ் குமார் குப்புரத்தினம் , வட்டச் செயலாளர்கள் எம்.பி.தென்றல் குமார், எம். கே.குமார், எம்.பாரதி , ஏ.பாரத் , தட்சணாமூர்த்தி, மேட்டுக் குப்பம் ஏ.தாமோதரன் , ஏ.மூர்த்தி, சி.நாகநாதன் ,மற்றும் எம்.எஸ்.பச்சையப்பன் , ஆலப்பாக்கம்.உதயகுமார் அரசு எம்.ஆர்.முனியன் , சி.மதன்ராஜ், பாஸ்போர்ட் இளங்கோ, யோகி பில்டர்ஸ் சரவணன், ஐடி.விங்க் கே.சதிஷ்குமார் மற்றும் பூத் கமிட்டி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்

# சாலையில் கிடந்த பையில் இருந்த ரூ.1.48 லட்சம் பணத்தை காவல் நிலையத்தில் ஒப்படைத்த போக்குவரத்து பெண் காவலர்

**சென்னை ஏப் 30-**

மாம்பலம் போக்குவரத்து காவல் நிலைய முதல் நிலை பெண் காவலர் இந்து ராணி என்பவர் கடந்த நேற்று முன் தினம் இரவு தியாகராய நகர், மேட்லி சாலை- பர்கிட் சாலை சந்திப்பில் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது சாலையில் கேட்பாரற்று கிடந்த பையை எடுத்து பார்த்த போது அதில் ரூபாய் 1,48,200/- பணம் இருந்தது தெரியவந்தது.

உடனே, பெண் காவலர் இந்து ராணி மேற்படி பணம் குறித்து அருகில் விசாரணை செய்தபோது, எந்தவொரு தகவலும் கிடைக்காததால், இந்து ராணி மேற்படி பணம் அடங்கிய பையை மாம்பலம் சட்டம் ஒழுங்கு காவல் நிலையத்தில் ஒப்படைத்ததார்.

**பணம்**

மாம்பலம் காவல் நிலைய சட்டம் ஒழுங்கு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் அப்பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவான காட்சிகளை ஆய்வு செய்ததில், அவ்வழியே சென்ற ஒரு இருசக்கர வாகனத்தில் இருந்து மேற்கண்ட பணம் அடங்கிய பை கீழே விழுந்தது தெரியவந்தது.

**பாராட்டு**

மேலும், நேர்மையாக சாலையில் கிடந்த பணம் அடங்கிய பையை காவல் நிலையத்தில் ஒப்படைத்த முதல்நிலை பெண் காவலர் இந்துராணியை காவல் உயரதிகாரிகள் வெகுவாகப் பாராட்டினர்.

# காஞ்சிபுரம் மாவட்டத்தில் திட்டப் பணிகள்: மத்திய ஊரக வளர்ச்சி செயலர் சைலேஷ் குமார் சிங், கலெக்டர் கலைச்செல்வி ஆய்வு



**காஞ்சிபுரம், ஏப். 30 -**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில், மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சி பணிகளை மத்திய ஊரக வளர்ச்சித் துறை செயலர் சைலேஷ் குமார் சிங் பார்வையிட்டு, ஆய்வு மேற் கொண்டார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில், பல்வேறு திட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த பணிகளின் தரம் - எந்த நிலையில் உள்ளன, ஆகிய விபரங்களை தெரிந்துகொள்ளும் வகையில், மத்திய ஊரக வளர்ச்சித் துறை செயலர் தலைமையில் நேற்று ஆய்வு மேற்கொள்ளப் பட்டது.

அதன்படி காஞ்சிபுரம் மாவட்டம், கரசங்கால் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசியஊரக வேலை ஊறுதி திட்டத்தின் கீழ் ரூ.1.30 இலட்சம் மதிப்பீட்டில் மரக்கன்று நடும் பணியை மத்திய ஊரக வளர்ச்சித் துறை செயலர் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். இவரும் தனது பங்கிற்கு இந்த பகுதியில் மரக்கன்றுகளை நடவு செய்தார். மேலும் கிராம விளையாட்டு திடலை பார்வையார். கிராம மக்கள் - இளைஞர்கள் இந்த விளையாட்டு திடலை பயன் படுத்துறார்களா என, கலெக்டர் கலைச்செல்வியிடம் கேட்டறிந்தார்.

இதைத் தொடர்ந்து பிரதம மந்திரி வீடு கட்டுதல் திட்டத்தின் கீழ் ரூ.1.20 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் குடியிருப்புகளை பார்வையிட்டார். மணிமங்கலம் ஊராட்சியில் மாநில அரசாங்கத்தால் செயல்படுத்தப்படும் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் குடியிருப்புகளையும் மத்திய ஊரக வளர்ச்சித் துறை செயலர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின் போது ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலர் ககன்தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் பொன்னையா, காஞ்சிபுரம் மாவட்டக் கலெக்டர் கலைச்செல்வி, கூடுதல் இயக்குநர் ஊரக வளர்ச்சி குமார். காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஆர்த்தி, காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் ஊரக வளர்ச்சி, வட்டார வளர்ச்சி அலுவலர் உதவிப் பொறியாளர்கள் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் என, பலரும் உடனிருந்தனர்.

# கோயம்பேடு உள்வட்ட சாலையில் ரூ.8.63 கோடியில் பசுமை பூங்கா

**சென்னை ஏப் 30-**

கோயம்பேடு உள்வட்ட சாலை பூந்தமல்லி நெடுஞ் சாலை சந்திப்பு பகுதியில் சுமார் 3.59 ஏக்கர் பரப்பளவில் ரூ.8.63 கோடி மதிப்பீட்டில் யோகா மையம், நடைபயிற்சி பாதை, ஜிம் உள்ளிட்ட வசதிகளுடன் இயற்கை எழில் கொஞ்சும் பசுமை பூங்கா அமைக்கும் பணியில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் ஈடுபட்டு வருகிறது.இந்த பணிகள் இறுதிகட்டத்தை எட்டியுள்ளதால், மே மாதம் இறுதிக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு திறக்கப்படும், என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து சமூக ஆர்வலர்கள்கூறுகையில், ‘கோயம்பேடு மேம்பாலத்தின் கீழ் பகுதியில் பிரமாண்டமாக பசுமை பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது. பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் பயன் பெறும் வகையில் பூங்கா கட்டப்பட்டு வருவது எங்களுக்கு பெரும் மகிழ்ச்சியாக உள்ளது. இது எப்போது பயன்பாட்டிற்கு திறக்கப்படும், என ஆவலோடு காத்திருக்கிறோம் என்றனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
11/78, Fourway Main Road, Gangaikondan, Tirunelveli-627352
Ph: 0462- 2486789
E-Mail: nellaiedi@thinaboomi.com
RNI.Regn No.66774/97
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

தமிழ்நாடு அரசு
**பொதுப்பணித்துறை**
கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்ட அலுவலகம், சேலம்
மின்னணு-ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

மொத்ததொகை ஒப்பந்த முறை

மின்னணு-ஒப்பந்தப்புள்ளி அழைப்பு எண் 4.2025/2026.க.பொ.க(கூப)வட்டம்/சேலம்/ நாள் 29.04.2025

தமிழக ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர், கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், சேலம் -7 அவர்களால் பொதுப்பணித்துறையில் பதிவு பெற்ற தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து கீழ்க்கண்ட பணிக்கு இணைய வழி மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. மின்னணு ஒப்பந்தப்புள்ளியை "https://tntenders.gov.in" என்ற இணையதளத்தில் 02.05.2025 பிற்பகல் 3.00 மணி முதல் 16.05.2025 அன்று பிற்பகல் 3.00 மணி வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இணைய வழி மூலம் "https://tntenders.gov.in" பதிவிறக்கம் செய்த ஒப்பந்தப்புள்ளியை 16.05.2025 பிற்பகல் 3.00 மணிக்குள் இணைய வழி மூலம் "https://tntenders.gov.in" பதிவேற்றம் செய்யலாம். பதிவேற்றம் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 16.05.2025-ல் பிற்பகல் 3.30 மணிக்கு இணைய வழி மூலம் "https://tntenders.gov.in" திறக்கப்படும்.

| வ.எண் | வேலையின் பெயர் | தோராய மதிப்பீட்டுத் தொகை (சரக்கு மற்றும் சேவை வரி உட்பட) (ரூபாய் இலட்சத்தில்) | முன்வைப்புத் தொகை (ரூ) | பணி முடிக்க நிர்ணயிக்கப்பட்ட காலம் |
|---|---|---|---|---|
| 1. | கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் அரசு தலைமை மருத்துவமனை வளாகத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள மாவட்ட தலைமை மருத்துவமனை கட்டிடத்திற்கு முகப்புத் தோற்றம் அமைக்கும் பணி | 88.37 | 54,500 | 90 நாட்கள் |

| | | |
|---|---|---|
| ஒப்பந்ததாரர் வகுப்பு | : | பொதுப்பணித்துறையில் ஒப்பந்ததாரராக வகுப்பு-IVல் மாநில அளவில் / இவ்வட்ட அளவில் (ரூ.50.00 இலட்சம் முதல் ரூ.2.00 கோடி வரை) மற்றும் அதற்கு மேல் |
| முன் வைப்புத் தொகை செலுத்த வேண்டிய அலுவலர் விவரம் | : | முன் வைப்புத் தொகையை இணையதளம் மூலம் மட்டுமே செலுத்தலாம். |

பணியின் பெயர், முன் வைப்புத்தொகை செலுத்த வேண்டிய விவரம் மற்றும் இதர விவரங்கள் மற்றும் விதிமுறைகளை அரசு இணையத்தளத்தில் "https://tntenders.gov.in" தெரிந்து கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளில் மாற்றம் ஏற்படின் அது பற்றிய விவரம் வளைத்தளம் "https://tntenders.gov.in"-ல் பதிவேற்றம் செய்யப்படும்.

கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து.,
கட்டட ( க&ப) வட்டம், சேலம்-7.

செ.ம.தொ.இ/1741/ஒப்பந்தப்புள்ளி/2025

வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
தென்காசி
RDOTKS
இ.ப.வ. எண்.95/2025
நாள்-25.04.2025

அனுப்புநர்
S. பால்ராஜ், த/பெ. சுப்பையா
29/2, தெற்கு காலனி
மங்களாபுரம்
கம்பனேரி-புதுக்குடி-627751
கடையநல்லூர் தாலுகா,
தென்காசி மாவட்டம்
— மனுதார்

அறிவிப்பு

மேற்படி மனுதார் S.பால்ராஜ் என்பவரின் பாட்டி மாடத்தி அம்மாள் என்பவர் கடந்த 02.05.1988-ம் தேதியன்று அம்மன் கோவில் தெரு, மங்களாபுரம்-627751, கடையநல்லூர் தாலுகா, தென்காசி மாவட்டம் என்ற முகவரியில் வைத்து இறந்தார் என்றும், தனது பாட்டியின் இறப்பினை தங்களது அறியாமையால் பதிவு செய்யவில்லை என்றும், மேற்படி தனது பாட்டியின் இறப்பினை எந்தவொரு பிறப்பு (ம) இறப்பு பதிவு அலுவலகத்திலும் பதிவு செய்யவில்லை என்றும், மேற்படி இறப்பினை பதிவு செய்வதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் தென்காசி கோட்டாட்சித் தலைவர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளுமாறு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

மனுதார்
S. பால்ராஜ்

கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம்
கோவில்பட்டி

முனியசாமி,
தபெ. சங்கரலிங்கம்,
197-1, வேத கோவில் தெரு,
கடலையூர், எட்டையாபுரம்
தாலுகா, தூத்துக்குடி மாவட்டம்.
மனுதாரர்

எதிர்

வட்டாட்சியர், எட்டையாபுரம்.
சார் பதிவாளர், எட்டையாபுரம்.
எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

எனது தாத்தா காளியப்பன் தபெ. சொரிமுத்து நாடார் என்பவர் கடந்த 10.10.1960. அன்று மேற்படி முகவரியில் வைத்து இறந்ததை மேற்படி எதிர்மனுதாரர்கள் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரிலோ, எழுத்து மூலமோ, ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டும். என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இப்படிக்கு
முனியசாமி,
மனுதார்,

கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம்
கோவில்பட்டி

நல்ல முத்து,
தபெ. ராஜா என்ற பூவன்,
81/2, வடக்கு தெரு,
தீத்தாம்பட்டி, கொப்பம்பட்டி
அஞ்சல்,
துறையூர் மஜரா, கோவில்பட்டி
தாலுகா, தூத்துக்குடி மாவட்டம்.
மனுதாரர்

எதிர்

வட்டாட்சியர், கோவில்பட்டி.
சார் பதிவாளர், எட்டையாபுரம்.
எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

எனது தாயார் ராமத்தாள் என்பவர் கடந்த 10.11.1993. அன்று மேற்படி முகவரியில் வைத்து இறந்ததை மேற்படி எதிர்மனுதாரர்கள் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரிலோ, எழுத்து மூலமோ, ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டும். என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இப்படிக்கு
நல்ல முத்து,
மனுதார்,

தமிழ்நாடு அரசு
கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் 2025-2026
அத்தாணி பேரூராட்சி அலுவலகம், ஈரோடு மாவட்டம்.

ந.க.எண்.101 / 2025 | ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு | நாள். 28.04.2025

ஈரோடு மாவட்டம், அத்தாணி பேரூராட்சி செயல் அலுவலரால் கோரப்படும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு. (இரு உறைகள் முறை)
1. பணியின் விவரம் :

| வ.எண் | வேலையின் விவரம் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | வைப்புத் தொகை ரூபாயில் |
|---|---|---|---|
| 1) | அத்தாணி பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண் 03 காக்காச்சி குட்டை இணைப்பு சாலை, வார்டு எண் 05 மதேஸ்வரன் கோயில் ரோடு, வார்டு எண் 07 தென்றல் நகர் குறுக்கு வீதி, மயானம் செல்லும் சாலை, கூடல் நகர் சைட்ரோடு, காக்காச்சி குட்டை முதல் பேரூராட்சி எல்லை வரை, வார்டு எண் 04 தென்றல் நகர் எதிர்புற ரோடு ஆகிய பகுதிகளில் உள்ள மண்சாலையினை தார்சாலையாக அமைத்தல். | ரூ.85.00 | ரூ.1,70,000/- |

2. ஒப்பந்தப்புள்ளிகளை https://tntenders.gov.in என்ற இணையதளத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.
3. ஒப்பந்தப்புள்ளிக்கான முன்வைப்புத்தொகை பட்டியலில் காணும் விவரப்படி Internet Banking மூலமாக செலுத்தப்பட வேண்டும்.
4. மேலும் ஒப்பந்தப்புள்ளி தொடர்பான விபரங்களுக்கு அத்தாணி பேரூராட்சி செயல் அலுவலரை அணுகி அலுவலக வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.

| 5) முக்கியமான நாட்கள் | | |
|---|---|---|
| | ஒப்பந்தப்புள்ளிகள் பதிவிறக்கம் செய்தல் | 02.05.2025 |
| | ஒப்பந்ததாரர்களின் முன்கலந்தாய்வு கூட்டம் | 14.05.2025 |
| | பதிவிறக்கம் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளியினை சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் | 20.05.2025- 3.00 பிற்பகல் |
| | ஒப்பந்தப்புள்ளி நாள் | 20.05.2025- 3.00 பிற்பகல் |
| | தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு செய்யும் நாள். | 23.05.2025- 3.30 பிற்பகல் |

6. ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள் விடுமுறை நாள் எனில் அதற்கு அடுத்த வேலை நாளில் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இடத்தில் நடைபெறும். இதர விபரங்களை ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளில் தெரிந்துகொள்ளலாம். 7. நிபந்தனைகள் ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்பட்டுள்ளது.

தலைவர்,
அத்தாணி பேரூராட்சி, ஈரோடு மாவட்டம்.
செ.ம.தொ.இ./ 1748 / ஒப்பந்தப்புள்ளி / 2025
செயல் அலுவலர்,
அத்தாணி பேரூராட்சி, ஈரோடு மாவட்டம்.

தமிழ்நாடு அரசு
கலவை தேர்வுநிலை பேரூராட்சி,
இராணிப்பேட்டை மாவட்டம்.

ந.க.எண். 17 / 2025 | ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு | நாள்: 25.04.2025

இராணிப்பேட்டை மாவட்டம், கலவை தேர்வுநிலை பேரூராட்சியில் 2025-2026 ஆம் ஆண்டு நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ. 55.00 இலட்சம் மதிப்பீட்டில் கலவை பேரூராட்சியில் மேட்டுக்காலனி தொகுப்பு வீடுகள் பகுதியில் சாலை 1முதல் 4 வரை, வேதமூர்த்தி தெரு மற்றும் மேட்டுக்காலனி பெருமாள் தெரு சாலையில் தார்சாலை அமைத்தல் பணி மேற்கொள்ள ஒப்பந்தபுள்ளிகள் பதிவு பெற்ற மற்றும் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து 20.05.2025 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிவரை (அலுவலக கடிகாரப்படி) இப்பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களால் இ-டெண்டரிங் முறையில் மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றது. வரப்பெற்ற ஒப்புந்தப்புள்ளிகள் அன்று மாலை 3.30 மணிக்கு வருகை புரிந்துள்ள ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவர்களால் திறக்கப்படும்.

www.tntenders.gov.in என்ற இணைய தளம் மூலம் E-Token / Digital signature Card உபயோகித்து இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். இதர விபரங்களை பேரூராட்சி அலுவலகத்தில் வேலை நாட்களில் தெரிந்துகொள்ளலாம்.

செயல் அலுவலர்
கலவை தேர்வுநிலை பேரூராட்சி,
இராணிப்பேட்டை மாவட்டம்.

செ.ம.தொ.இ / 1719 / ஒப்பந்தப்புள்ளி /2025

தமிழ்நாடு அரசு
கலவை தேர்வுநிலை பேரூராட்சி,
இராணிப்பேட்டை மாவட்டம்.

ந.க.எண். 21 / 2025 | ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு | நாள்: 25.04.2025

இராணிப்பேட்டை மாவட்டம், கலவை தேர்வுநிலை பேரூராட்சியில் 2025-2026 ஆம் ஆண்டு சிறப்பு நிதி திட்டத்தின் கீழ் ரூ. 122.00 இலட்சம் மதிப்பீட்டில் கலவை பேரூராட்சியில் வார்டு 1 பிராமணர் தெரு, நாகலோரியார் தெரு, வார்டு 4, சீனிவாச முதலியார் தெரு, நூலக தெரு, வார்டு 6, நாவிதர் தெரு, முத்துமாரியம்மன் கோயில் தெரு, நமந்தகார தெரு, வார்டு 9, அருந்ததியர் தெகுப்பு வீடு 4வது தெரு. வார்டு 12. தொட்டி சின்னபையன் தெரு, சின்னபூங்கான் தெரு, ஒத்தவாடை தெரு, வார்டு 13, நடுசெங்குந்தர் தெரு, மேட்டுசெங்குந்தர் தெரு, வார்டு 15. புளியங்கொட்டை ஆகிய தெருக்களில் சிமெண்ட் சாலை அமைத்தல் பணி மேற்கொள்ள ஒப்பந்தபுள்ளிகள் பதிவு பெற்ற மற்றும் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து 20.05.2025 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிவரை (அலுவலக கடிகாரப்படி) இப்பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களால் இ-டெண்டரிங் முறையில் மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றது. வரப்பெற்ற ஒப்புந்தப்புள்ளிகள் அன்று மாலை 3.30 மணிக்கு வருகை புரிந்துள்ள ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவர்களால் திறக்கப்படும்.

www.tntenders.gov.in என்ற இணைய தளம் மூலம் E-Token / Digital signature Card உபயோகித்து இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். இதர விபரங்களை பேரூராட்சி அலுவலகத்தில் வேலை நாட்களில் தெரிந்துகொள்ளலாம்.

செயல் அலுவலர்
கலவை தேர்வுநிலை பேரூராட்சி,
இராணிப்பேட்டை மாவட்டம்.

செ.ம.தொ.இ / 1718 / ஒப்பந்தப்புள்ளி /2025

### மகளிர் முத்தரப்பு கிரிக்கெட்:
# தென் ஆப்பிரிக்காவை வீழ்த்தி இந்திய அணி திரில் வெற்றி




**கொழும்பு, ஏப்.30-**

மகளிர் முத்தரப்பு கிரிக்கெட் தொடரில் தென் ஆப்பிரிக்காவை வீழ்த்தி 15 ரன் வித்தியாசத்தில் இந்திய அணி திரில் வெற்றி பெற்றது.

**இந்தியா 276 ரன்கள்...**

இந்தியா, இலங்கை, தென் ஆப்பிரிக்கா ஆகிய பெண்கள் அணிகள் பங்கேற்றுள்ள ஒரு நாள் கிரிக்கெட் தொடர் கொழும்புவில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் இந்தியா - தென் ஆப்பிரிக்கா அணிகள் ஆடின. இந்த ஆட்டத்திற்கான டாசில் வென்ற இந்தியா முதலில் பேட்டிங் செய்வதாக அறிவித்தது. தொடர்ந்து முதலில் பேட்டிங் செய்த இந்திய அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்டை இழந்து 276 ரன்கள் மட்டுமே எடுத்தது. இந்தியா தரப்பில் ஹர்மன்பிரீத் கவுர் 41 ரன்னுடன் களத்தில் இருந்தார்.

**நிதான ஆட்டம்...**

தென் ஆப்பிரிக்கா தரப்பில் நோன்குலுலேகோ மிலாபா 2 விக்கெட் வீழ்த்தினார். தொடர்ந்து 277 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் தென் ஆப்பிரிக்கா களம் கண்டது. தென் ஆப்பிரிக்காவின் தொடக்க ஆட்டக்காரர்களாக லாரா வால்வார்ட் மற்றும் டாஸ்மின் பிரிட்ஸ் களம் இறங்கினர். இருவரும் நிதானமாக ஆடி ரன்கள் சேர்த்தது.

**பிரிட்ஸ் சதம்...**

இந்த இணை முதல் விக்கெட்டுக்கு 140 ரன் எடுத்து பிரிந்தது. லாரா வால்வார்ட் 43 ரன்னில் அவுட் ஆனார். தொடர்ந்து களம் இறங்கிய லாரா குடால் 9 ரன், கரபோ மெசோ 7 ரன், சுனே லூஸ் 28 ரன், க்ளோ ட்ரையன் 18 ரன், அன்னெரி டெர்க்சன் 30 ரன் எடுத்து அவுட் ஆகினர். மறுபுறம் நிலைத்து நின்று ஆடிய டாஸ்மின் பிரிட்ஸ் சதம் அடித்த நிலையில் 109 ரன்களில் அவுட் ஆனார்.

**திரில் வெற்றி...**

இதையடுத்து களம் இறங்கிய நாடின் டி கிளார்க் ரன் எடுக்காமலும், மசபட்டா கிளாஸ் 2 ரன், நோன்குலுலேகோ மிலாபா 8 ரன் எடுத்து அவுட் ஆனார். இறுதியில் தென் ஆப்பிரிக்கா 49.2 ஓவரில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 261 ரன்னுக்கு ஆல் அவுட் ஆனது. இதன் மூலம் 15 ரன் வித்தியாசத்தில் இந்தியா திரில் வெற்றி பெற்றது.

**இலங்கையுடன்...**

இந்தியா தரப்பில் ஸ்னே ராணா 5 விக்கெட் வீழ்த்தினார். இதன் மூலம் இந்திய அணி இதுவரை தான் விளையாடியுள்ள 2 லீக் ஆட்டங்களிலும் வெற்றி பெற்று புள்ளிப் பட்டியலில் முதல் இடத்தில் உள்ளது. இந்திய அணி தனது அடுத்த லீக் ஆட்டத்தில் இலங்கையை மே 4ம் தேதி எதிர்கொள்கிறது.

### 14 வயது வீரர் வைபவ் அதிரடி சதம்:
# ராஜஸ்தான் அணி அபார வெற்றி




**ஜெய்ப்பூர், ஏப்.30-**

இளம் வீரர் வைபவ் அதிரடி சதத்தால், குஜராத்துக்கு எதிரான போட்டியில் ராஜஸ்தான் அபார வெற்றி பெற்றது.

**209 ரன்கள் குவிப்பு...**

ஐ.பி.எல். தொடரின் 47-வது லீக் போட்டியில் ராஜஸ்தான் ராயல்ஸ்- குஜராத் டைட்டன்ஸ் அணிகள் மோதின. இதில் டாஸ் வென்ற ராஜஸ்தான் ராயல்ஸ் பந்து வீச்சை தேர்வு செய்தது. அதன்படி முதலில் விளையாடிய குஜராத் டைட்டன்ஸ் அணி 20 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 209 ரன்கள் அடித்துள்ளது. அதிகபட்சமாக சுப்மன் கில் 84 ரன்கள் எடுத்தார். ராஜஸ்தான் தரப்பில் தீக்ஷனா 2 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

**வைபவ் அதிரடி சதம்...**

இதனையடுத்து ராஜஸ்தான் அணியின் தொடக்க வீரர்களாக ஜெய்ஸ்வால் - வைபவ் களமிறங்கினர். தொடக்கம் முதலே இருவரும் அதிரடியாக விளையாடினர். தொடர்ந்து அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்த ராஜஸ்தான் அணியின் 14 வயது வீரர் வைபவ் 35 பந்தில் சதம் விளாசி அசத்தினார். அவர் 101 ரன்கள் எடுத்த நிலையில் போல்ட் ஆகி வெளியேறினார். இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்கு 166 ரன்கள் குவித்தது.

**ஜெய்ஸ்வால்...**

அடுத்த சிறிது நேரத்தில் ஜெய்ஸ்வால் அரை சதம் விளாசினார். அடுத்து வந்த நிதிஷ் ரானா 4 ரன்னில் ஆட்டமிழந்தார். இதனை தொடர்ந்து ஜெய்ஸ்வாலுடன் கேப்டன் ரியான் பராக் ஜோடி சேர்ந்து அணியை வெற்றி பாதைக்கு அழைத்து சென்றனர். இறுதியில் ராஜஸ்தான் அணி 15.5 ஓவர்களில் 212 ரன்கள் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

## புள்ளிகள் பட்டியல்

| வரிசை | அணிகள் | ஆட்டங்கள் | வெற்றி | தோல்வி | புள்ளிகள் | நெட் ரன்ரேட் |
|---|---|---|---|---|---|---|
| 1 | பெங்களூரு | 10 | 7 | 3 | 14 | +0.521 |
| 2 | மும்பை | 10 | 6 | 4 | 12 | +0.889 |
| 3 | குஜராத் | 9 | 6 | 3 | 12 | +0.748 |
| 4 | டெல்லி | 9 | 6 | 3 | 12 | +0.482 |
| 5 | பஞ்சாப் | 9 | 5 | 3 | 11 | +0.177 |
| 6 | லக்னோ | 10 | 5 | 5 | 10 | -0.325 |
| 7 | கொல்கத்தா | 9 | 3 | 5 | 7 | +0.212 |
| 8 | ராஜஸ்தான் | 10 | 3 | 7 | 6 | -0.349 |
| 9 | ஐதராபாத் | 9 | 3 | 6 | 6 | -1.103 |
| 10 | சென்னை | 9 | 2 | 7 | 4 | -1.302 |

## இன்றைய ஐ.பி.எல் (49-வது லீக்)



**அணிகள் - சென்னை vs பஞ்சாப்**

**இடம் - சென்னை மணி - இரவு 7.30**

# தேச பாதுகாப்புக்காக ஒட்டுக்கேட்பதில் தவறில்லை: சுப்ரீம் கோர்ட் அதிரடி

**புதுடில்லி, ஏப்.30-**

நாட்டின் பாதுகாப்பு காரணங்களுக்காக தேசவிரோதிகளின் செல்போன்களை கண்காணிப்பதில் எந்த தவறுமே இல்லை என சுப்ரீம் கோர்ட் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலில் தயாரிக்கப்பட்ட பெகாசஸ் மென்பொருள் மூலம் அரசியல் தலைவர்கள், பத்திரிகையாளர்கள், நீதிபதிகளின் செல்போன்கள் ஒட்டுக்கேட்கப்பட்ட விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்நிலையில் உளவு பார்க்க பெகாசஸ் ஸ்பைவேரைப் பயன்படுத்தியது தொடர்பான புகார் மனுக்களை நீதிபதிகள் சூர்யா காந்த் மற்றும் என் கோடீஸ்வர் சிங் ஆகியோர் சுப்ரீம் கோர்ட் அமர்வு நேற்று விசாரித்தது. விசாரணையின் போது பேசிய நீதிபதிகள், நாட்டின் பாதுகாப்பு காரணங்களுக்காக தேசவிரோதிகளின் செல்போன்களை பெகாசஸ் மூலம் கண்காணிப்பதில் என்ன தவறு உள்ளது? அதில் எந்த தவறுமே இல்லை. தற்போதைய சூழ்நிலையில் நாட்டின் பாதுகாப்பில் நாம் சமரசம் செய்து கொள்ள முடியாது. அது யாருக்கு எதிராகப் பயன்படுத்தப்படுகிறது என்பதுதான் கேள்வி. தனிநபர்களுக்கு எதிராக இது பயன்படுத்தப்பட்டால் அப்போது இந்த புகாரை பரிசீலிக்கலாம் என்று தெரிவித்தனர்.

இதற்கிடையில் விசாரணையின்போது, மூத்த வழக்கறிஞர்கள் கபில் சிபல், ஷ்யாம் திவான், தினேஷ் திவேதி ஆகியோர், சுப்ரீம் கோர்ட் முன்னாள் நீதிபதி ஆர்வி ரவீந்திரன் தலைமையிலான பெகாசஸ் தொழில்நுட்பக் குழுவின் அறிக்கையை வெளியிட வலியுறுத்தினர். ஆனால் இதை மறுத்த நீதிபதிகள், தேசப்பாதுகாப்பு தொடர்பான விவரங்கள் அறிக்கையில் இடம் பெற்றிருந்தால் அதை பொதுவெளியில் விவாதிக்க முடியாது என்று கோரிக்கையை நிராகரித்தனர்.

# ஏ.டி.எம். பரிவர்த்தனை கட்டணத்தில் மாற்றம்-நாளை முதல் அமலாகிறது

**புதுடில்லி, ஏப்.30-**

ஏ.டி.எம். பணப்பரிவர்த்தனைகளுக்கான கட்டணத்தில் ஆர்பிஐ கொண்டு வந்திருக்கும் மாற்றம் மே 1-ம் தேதி முதல் நடைமுறைக்கு வரவிருக்கிறது.

வழக்கமாக ஏ.டி.எம்.களில் ஒவ்வொரு மாதமும் நகரமாக இருந்தால் கட்டணமின்றி மூன்று முறையும், ஊரகப் பகுதியாக இருந்தால் கட்டணமின்றி ஐந்து முறையும் பணப்பரிவர்த்தனை மேற்கொள்ளலாம். ஒருவேளை, ஒரு மாதத்துக்கான பணப்பரிவர்த்தனைக்கான அளவை கடந்துவிட்டால் அதன்பிறகு ஒவ்வொரு முறை ஏ.டி.எம். பயன்படுத்தும்போதும் வசூலிக்கப்படும் தொகை ரூ.23 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதனுடன் வரிகளும் அடங்கும். இதற்கு முன்பு வரை இந்தக் கட்டணம் ரூ.21 ஆக இருந்தது. இது பணத்தை வங்கிக் கணக்கில் செலுத்தும் சேவைக்கும் பொருந்தும்.

இந்நிலையில், ஏ.டி.எம். பயன்பாட்டுக் கட்டணம் ரூ.21+ வரிக்கு பதிலாக தற்போது ரூ.23+ வரி என உயர்த்தப்பட்டுள்ளது. சில வங்கிகள், பணப்பரிவர்த்தனைக்கு மட்டுமே கட்டணம் வசூலிப்பதாகவும், வங்கி இருப்பு நிலவரங்களைப் பார்ப்பதற்கு கட்டணம் வசூலிப்பதில்லை என்றும் தெரிவித்துள்ளது. ஆனால் சில வங்கிகள், பணப்பரிவர்த்தனை மற்றும் ஏ.டி.எம். சேவை அனைத்தும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும் என தெரிவித்துள்ளன.

ஒவ்வொரு ஆண்டும் ஏ.டி.எம்.களில் பணம் எடுக்கப்படும் அளவு குறைந்து வருவதை ஆர்பிஐ தரவு காட்டுகிறது. அதாவது, கடந்த 2023 ஜனவரியில் ஏ.டி.எம். மூலம் 57 கோடி முறை பணப்பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது என்றும், இது 2024 ஜனவரியில் 52.72 கோடி முறையாகவும், கடந்த 2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 48.83 கோடி முறையாகவும் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த கட்டண மாற்றம், வங்கிகள் தங்களது ஏ.டி.எம். மையங்களின் பராமரிப்பு உள்ளிட்ட செலவுகளை ஈடுகட்ட உயர்த்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

## சூர்யவன்ஷிக்கு ரூ.10 லட்சம் பரிசு




ஐ.பி.எல். போட்டியின் 47-ஆவது ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த குஜராத் 20 ஓவர்களில் 209/4 ரன்கள் சேர்க்க, ராஜஸ்தான் 15.5 ஓவர்களில் 212/2 ரன்கள் எடுத்து வென்றது. இந்த ஆட்டத்தில் அதிரடியாக விளையாடிய ராஜஸ்தானின் 14 வயது வீரர் வைபவ் சூர்யவன்ஷி, நடப்பு சீசனில் அதிவேக சதம் விளாசி சாதனைப் படைத்தார். இந்தச் சிறுவனுக்கு பலரும் வாழ்த்துகளை குவித்துவரும் நிலையில் பீகார் முதல்வர் நிதீஷ் குமார் நேரில் அழைத்து வாழ்த்து தெரிவித்து ரூ.10 லட்சம் பரிசுத் தொகையையும் அளித்துள்ளார்.

இந்தப் புகைப்படங்களை தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்ட பீகார் முதல்வர் நிதீஷ் குமார் கூறியதாவது: ஐ.பி.எல். வரலாற்றில் 14 வயதில் சதமடித்த பிகாரைச் சேர்ந்த வைபவ் சூர்யவன்ஷிக்கு வாழ்த்துகள். கடின உழைப்பு, திறமையினால் இந்திய கிரிக்கெட்டின் புதிய நம்பிக்கையாக மாறியுள்ளார். அனைவரும் இவரை நினைத்து பெருமைப்படுகிறார்கள். பீகார் அரசு சார்பில் இந்த இளம் பீகார் வீரருக்கு ரூ.10 லட்சம் பரிசுத் தொகை அளிக்கிறேன். வைபவ் சூர்யவன்ஷி இந்திய அணிக்கு புதிய சாதனைகளை நிகழ்த்தவும் இந்திய நாட்டிற்கு புகழைச் சேர்க்கவும் வாழ்த்துகிறேன் எனக் கூறியுள்ளார்.

## சூர்யவன்ஷி தந்தை நெகிழ்ச்சி

ஐ.பி.எல். போட்டியின் 47-ஆவது ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த குஜராத் 20 ஓவர்களில் 209/4 ரன்கள் சேர்க்க, ராஜஸ்தான் 15.5 ஓவர்களில் 212/2 ரன்கள் எடுத்து வென்றது. இந்த ஆட்டத்தில் அதிரடியாக விளையாடிய ராஜஸ்தானின் 14 வயது வீரர் வைபவ் சூர்யவன்ஷி, நடப்பு சீசனில் அதிவேக சதம் விளாசி சாதனை படைத்தார். ஐ.பி.எல். போட்டி வரலாற்றில் இது 2-ஆவது அதிவேக சதமாகும். முன்னதாக பெங்களூரு வீரர் கிறிஸ் கெயில் 2013-இல் புனே வாரியர்ஸுக்கு எதிராக 30 பந்துகளில் சதமடித்து முதலிடத்தில் உள்ளார்.



இந்நிலையில் இவரது தந்தை அளித்த பேட்டியில் கூறியதாவது: கடைசி 3-4 மாதங்களாக சூர்யவன்ஷிக்கு விரிவாக பயிற்சியளித்த ராஜஸ்தான் ராயல்ஸ் அணிக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். வைபவ் சூர்யவன்ஷியின் ஆட்டம் மெருகேற்றியதற்கு ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் தலைமைப் பயிற்சியாளர் ராகுல் திராவிட், உதவி பயிற்சியாளர்கள் என அனைவருக்கும் எனது நன்றிகள். வைபவ் சூர்யவன்ஷி மிகவும் கடினமாக உழைத்தான். அதன் பலன்தான் இந்த சதம் என்றார். வைபவ் சூர்யவன்ஷியின் விளையாட்டு பயிற்சிக்காக தங்களது விவசாய நிலத்தை விற்று, செய்யும் தொழிலையும் விட்டு மகனுக்காக போராடியுள்ளார்.



**முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று தலைமைச்செயலகத்தில், கேரள மாநில வருவாய் மற்றும் வீட்டுவசதி துறை அமைச்சர் கே.ராஜன் சந்தித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கேரள மாநில மாநாட்டிற்கு அழைப்பு விடுத்தார்.**

# 3-வது குழந்தை பெற்றுக்கொள்ள சலுகை: தி.மு.க. எம்.எல்.ஏ. கோரிக்கை

**சென்னை, ஏப்.30-**

தமிழ்நாட்டில் புதுமணத் தம்பதிகள் 3-வது குழந்தை பெற்றுக்கொள்ள அரசு சலுகை வழங்க வேண்டும் என தி.மு.க. எம்.எல்.ஏ. மதியழகன் பேரவையில் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடு முழுவதும் மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பு செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதற்கு தமிழகம், கேரளம் உள்ளிட்ட தென் மாநிலங்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. மக்கள்தொகை அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பு செய்தால் தமிழகம் உள்ளிட்ட தென் மாநிலங்களில் நாடாளுமன்றத் தொகுதிகள் குறையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் மத்திய அரசின் கோரிக்கைக்கு ஏற்ப, முன்னதாக மக்கள்தொகையைக் கட்டுப்படுத்திய மாநிலங்கள் தற்போது பாதிக்கப்படும் சூழல் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், தொகுதி மறுசீரமைப்பால் தமிழகம் பாதிக்கப்படும் என்று கூறி தமிழ்நாட்டில் 3-வது குழந்தை பெற்றுக்கொள்ள முன்வரும் பெற்றோருக்கு அரசு சலுகை வழங்க வேண்டும் என பர்கூர் தொகுதி தி.மு.க. எம்.எல்.ஏ. மதியழகன் பேரவையில் கோரிக்கை விடுத்துள்ளார். முன்னதாக தொகுதி மறுசீரமைப்பை மத்திய அரசு 25 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்க வேண்டும் என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் கோரிக்கை விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது

# ஜூன் மாதத்திற்குள் 4 மண்டல மாநாடுகள்: த.வெ.க. தலைவர் விஜய் திட்டம்

**புதுடில்லி, ஏப்.30-**

2026 சட்டமன்ற தேர்தலை இலக்காக கொண்டு த.வெ.க. தலைவர் விஜய் கட்சியில் அடுத்தடுத்து அதிரடி அரசியல் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்.

கட்சியின் உள்கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக தமிழகம் முழுவதும் பூத் கமிட்டி 5 மண்டலமாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு கட்டமாக பல்வேறு இடங்களில் பூத் கமிட்டி மாநாடு நடத்த திட்டமிடப்பட்டு நடந்து வருகிறது. முதற்கட்டமாக கொங்கு மண்டலத்துக்குட்பட்ட 13 மாவட்டங்களுக்கான மாநாடு கடந்த 26, 27-ந்தேதிகளில் கோயம்புத்தூரில் நடந்தது. மாநாட்டுக்காக கோவை வந்த விஜய்க்கு வழி நெடுகிலும் கட்சி தொண்டர்களும், பொதுமக்களும் திரண்டு நின்று வரவேற்பு கொடுத்தனர்.

வரலாறு காணாத கூட்டத்தால் கோவை மாநகரமே குலுங்கும் அளவிற்கு விஜய் வருகை பொதுமக்கள் மத்தியில் மட்டுமின்றி அரசியல் கட்சிகள் மத்தியிலும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. கோவை மாநாடு விஜய்க்கு மட்டுமின்றி தொண்டர்கள் மத்தியிலும் புது உற்சாகத்தை கொடுத்து உள்ளது.

இதை அடுத்து அடுத்த கட்டமாக மீதி உள்ள மண்டலங்களில் விரைவில் மாநாடு நடத்துவதற்கு விஜய் திட்டமிட்டு வருகிறார். இது பற்றி கட்சி பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த்துடன் விஜய் ஆலோசனை நடத்தி வருவதாக தகவல்கள் வெளியாகி வருகிறது. வரும் ஜூன் மாதத்துக்குள் மீதி உள்ள 4 மண்டல பூத் கமிட்டி மாநாட்டையும் நடத்தி முடிக்க விஜய் திட்டமிட்டு உள்ளார். மாநாடு முடிவடைந்ததும் த.வெ.க. தலைவர் விஜய் 234 தொகுதிகளுக்கும் சுற்றுப் பயணம் செய்து மக்களை நேரடியாக சந்திக்க இருக்கிறார்.

இது ஒருபுறமிருக்க த.வெ.க. மகளிரணியினர் தமிழகம் முழுவதும் காலையிலும் மாலையிலும் வீடு வீடாக சென்று த.வெ.க. கொள்கைகளையும், மக்கள் பணிகளையும் மக்களிடையே கொண்டு சேர்த்து வருகின்றனர். இதுமட்டுமின்றி திராவிட கட்சிகள் மீது மக்களிடையே இருக்கும் எதிர்ப்புகளை த.வெ.க.வுக்கு சாதகமாக்கி கொள்ளும் நடவடிக்கைகளிலும் தொண்டர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

# பாராளுமன்ற சிறப்புக் கூட்டத்தை கூட்ட பிரதமருக்கு கார்கே கடிதம்

**புதுடில்லி, ஏப்.30-**

பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் தொடர்பாக விவாதிக்க பாராளுமன்ற சிறப்புக் கூட்டத்தை கூட்டக் கோரி பிரதமர் நரேந்திர மோடிக்கு காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கடிதம் எழுதியுள்ளார்.

ஜம்மு - காஷ்மீரின் பஹல்காம் சுற்றுலாத் தலத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 சுற்றுலாப் பயணிகள் பலியாகினர். இதனைத் தொடர்ந்து, அனைத்துக் கட்சிகள் கூட்டத்தை கூட்டிய மத்திய அரசு, பஹல்காம் தாக்குதல் தொடர்பாக விளக்கம் அளித்தது. இதையடுத்து, மத்திய அரசின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்கும் என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி அறிவித்தார்.

இந்த நிலையில், பாராளுமன்ற சிறப்புக் கூட்டத்தொடரை கூட்டக் கோரி பிரதமருக்கு மல்லிகார்ஜுன கார்கே கடிதம் எழுதியுள்ளார்.

அந்த கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது: ''இந்த தருணத்தில் ஒற்றுமையும் ஒத்துழைப்பும் அவசியம், பாராளுமன்றத்தின் இரு அவைகளின் சிறப்புக் கூட்டத்தை விரைவில் கூட்டுவது முக்கியமானது என்று எதிர்க்கட்சிகள் நம்புகின்றன. பஹல்காம் தாக்குதலுக்கு எதிராக நமது ஒற்றுமையையும் தீர்மானத்தையும் வெளிப்படுத்தும் ஒரு சக்தி வாய்ந்த நடவடிக்கையாக அமையும். இந்த கூட்டத்தொடர் கூட்டப்படும் என்று நாங்கள் நம்புகிறோம்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, ஜம்மு - காஷ்மீர் சட்டப்பேரவை சிறப்புக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இந்த கூட்டத்தில் பஹல்காம் தாக்குதலை கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# தமிழ்நாடு விளையாட்டு பல்கலை. சட்டத்தை திருத்தம் செய்யும் மசோதா நிறைவேற்றம்

**சென்னை, ஏப்.30-**

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக சட்டத்தை திருத்தம் செய்ய சட்ட மசோதா சட்டசபையில் நிறைவேற்றப்பட்டது.

தமிழக சட்டசபையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக சட்டத்தை திருத்தம் செய்வதற்கான சட்ட மசோதாவை அறிமுகம் செய்தார்.

அதில் கூறப்பட்டு இருப்பதாவது:- முதல்வரால் 18.11.2023 அன்று சட்டசபையில் முன்மொழியப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் பல்கலைக்கழகங்கள் தொடர்பான 10 சட்ட மசோதாக்கள் மீண்டும் நிறைவேற்றப்பட்டன. சுப்ரீம் கோர்ட்டு கடந்த 8-ந்தேதியன்று பிறப்பித்த தீர்ப்பின்படி, அந்த மசோதாக்களுக்கு 18.11.2023 அன்றே ஒப்புதல் பெறப்பட்டதாக கருதப்படுகிறது.

அந்த பல்கலைக்கழக சட்டங்கள் மூலம் 18 பல்கலைக்கழகங்களின் துணை வேந்தரை நியமிக்கவும், பதவி நீக்கம் செய்யவும் அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதுபோல், தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்திற்கு துணை வேந்தரை நியமிக்கவும், பதவி நீக்கம் செய்யவும் அரசுக்கு அதிகாரம் அளிக்க அரசு முடிவு செய்துள்ளது.

மேலும், மாற்றுத்திறன் அடிப்படையிலான பாகுபாட்டை தடை செய்கிற மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம்-2016-ன் (மத்திய சட்டம்) 3-ம் பிரிவின்படி, பல்கலைக்கழகங்களின் அதிகார அமைப்புகளில் உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டு நியமனம் செய்யப்படுவதற்கு, காது கேளாத, வாய் பேச முடியாதவர்களுக்கான தகுதியின்மையை நீக்குவதற்கு, சில பல்கலைக்கழகச் சட்டங்களில் ஏற்கனவே திருத்தம் செய்யப்பட்டு உள்ளன. அதன்படி, தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்திலும் அவர்கள் உறுப்பினராக இருப்பதற்கான தகுதியின்மையை நீக்க முடிவு செய்து உள்ளது.

மேலும், இந்தப் பல்கலைக்கழகத்தின் ஆட்சி குழுவில் நிதித்துறைச் செயலாளரை உறுப்பினர்களில் ஒருவராக நியமிப்பதற்கு ஏதுவாக திருத்தம் செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கான சட்ட திருத்த மசோதா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. இந்த மசோதா நேற்று அவையில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# சினிமா CiNi செய்திகள்

## குற்றம் தவிர் - விமர்சனம்



ஸ்ரீசாய் சைந்தவி கிரியேஷன்ஸ் சார்பில் பாண்டுரங்கன் தயாரிப்பில், கஜேந்திரா இயக்கத்தில் உருவாகி உள்ள படம் 'குற்றம் தவிர்'. இப்படத்தில்

ரிஷி ரித்விக் நாயகனாகவும் ஆராதியா நாயகியாகவும் நடித்திருக்கிறார்கள். இவர்களுடன் சரவணன், வினோதினி, ஆனந்த் பாபு, செண்ட்ராயன், ஜார்ஜ் விஜய், சாய்தீனா உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

இப்படத்திற்கு ரோவின் பாஸ்கர் ஒளிப்பதிவு செய்துள்ளார். ஸ்ரீகாந்த் தேவா இசையமைத்துள்ளார்.


இந்நிலையில் இந்த படத்தின் முன்னோட்டம் மற்றும் பாடல்கள் வெளியீட்டு விழா சென்னையில் சமீபத்தில் நடைபெற்றது. முன்னோட்டம் மற்றும் பாடல்களை கங்கை அமரன் வெளியிட, சிறப்பு விருந்தினர்களுடன் படக்குழுவினர் இணைந்து பெற்றுக் கொண்டனர்.

அப்போது பேசிய கங்கை அமரன் ,"முதலில் கர்நாடகத்திலிருந்து படம் எடுக்க வந்துள்ள இவர்களை வரவேற்கிறேன். இந்தப் படத்திற்கு ஸ்ரீகாந்த் தேவா நன்றாக இசையமைத்துள்ளார். பொதுவாக இதுபோல வெளியீட்டு நிகழ்ச்சிகளில் படத்தின் பாடல்களைப் போடுகிறார்கள், சண்டைக் காட்சிகளைப் போடுகிறார்கள். ஆனால், சென்டிமெண்ட் காட்சிகளையோ நகைச்சுவைக் காட்சிகளையோ போடுவதில்லை .

இனி அதையும் போட்டுக் காட்ட வேண்டும் . அதைப் பார்க்கும் போது தான் நடிப்புக்கான மதிப்பெண் கொடுக்க முடியும். இது ஒரு அறிவுரை என்று எடுத்துக் கொள்ள வேண்டாம். எப்போதும் நான் வெளிப்படையாகப் பேசுபவன் என்று கூறினார். கதாநாயகனாக நடிக்கும் ரிஷி ரித்விக் பேசும்போது,

" நான் வில்லனாக நடித்து வந்தேன். இதில் கதாநாயகனாக நடிக்க வைத்திருக்கிறார்கள். பெங்களூரிலிருந்து படம் எடுக்க வந்திருக்கிறார்கள் என்ற போது நான் முதலில் யோசித்தேன். ஆனால் தயாரிப்பாளர் உடனே ஒரு லட்ச ரூபாய் எனக்கு அட்வான்ஸ் கொடுத்து புக் செய்தார்கள். எந்தப் பிரச்சினையும் இல்லாமல் படப்பிடிப்பு நடந்து முடிந்தது மகிழ்ச்சியான அனுபவமாக இருந்தது . கதாநாயகி ஆராதியா பேசும் போது, ஒவ்வொரு படத்தையும் மக்களிடம் கொண்டு சேர்க்கும் பணியைச் சிறப்பாகச் செய்யும் ஊடகங்களுக்கு நன்றி .இந்தப் படத்தையும் கொண்டு செல்லுங்கள் என்று கேட்டுக் கொண்டார். விழாவுக்கு வந்திருந்த சிறப்பு விருந்தினர்களுக்கும் படக்குழுவினருக்கும் தயாரிப்பாளர் பாண்டுரங்கன் பொன்னாடை போர்த்தி வரவேற்று கர்நாடகத்துப் பாரம்பரிய முறையில் தலைப்பாகை அணிவித்து மரியாதை செய்தது , எந்தவொரு தமிழ் திரைப்பட திருவிழாவிலும் காண முடியாத பண்பாட்டுச் செயல் பாடாக இருந்தது குறிப்பிடத்தக்கது

## மே 17-ல் வெளியாகும் மிஷன் இம்பாசிபிள்



ஹாலிவுட் மிகவும் பிரபலமான 'மிஷன்: இம்பாசிபிள்' பட பாகங்களுக்கு தனி ரசிகர் பட்டாளம் இருக்கிறது. குறிப்பாக இந்த படத்தில் சண்டை காட்சிகள் ஆக்‌ஷன் ஜானர் ரசிகர்களுக்கு விருந்தாக அமைகிறது. இதுவரை 'மிஷன்: இம்பாசிபிள்' பட தொடர்களில் ஏழு பாகங்கள் வெளியாகியுள்ள நிலையில் இப்போது அதன் எட்டாவது பாடம் 'மிஷன்: இம்பாசிபிள் தி பைனல் ரெகனிங்' என்ற பெயரில் வெளியாகவுள்ளது. படத்தின் டீசர் மற்றும் ட்ரைலர் சமீபத்தில் வெளியாகி ரசிகர்களின் எதிர்பார்ப்பை அதிகரித்தது. வழக்கம் போல் டாம் குரூஸின் டூப் இல்லாத சண்டைக் காட்சிகள் ரசிகர்களை வியக்கவைத்தது. குறிப்பாக சமீபத்தில் வெளியான 8ஆயிரம் அடி உயரம் வரை ஏரோபிளேனில் டாம் குரூஸ் பறக்கும் காட்சி இணையத்தில் வைரலானது.

இப்படம் அடுத்த மாதம் நடக்கவுள்ள உலக புகழ் பெற்ற கேன்ஸ் திரைப்பட விழாவில் மே 14ஆம் தேதி ப்ரீமியர் செய்யப்படுகிறது. பின்பு மே 23ஆம் தேதி உலகமெங்கும் திரையரங்குகளில் வெளியிடப்படுகிறது. இந்த நிலையில் இப்படம் இந்தியாவில் முன்கூட்டியே வெளியாவதாக படக்குழு அறிவித்துள்ளது. அதாவது உலகளவில் வெளியாகும் நாளுக்கு 7 நாள் முன்பாக இப்படம் ஆங்கிலம், தமிழ், இந்தி மற்றும் தெலுங்கில் வெளியாகவுள்ளது. இப்படத்தின் முந்தைய பாகத்தை இயக்கிய கிறிஸ்டோபர் மெக்யூரியே இதனையும் இயக்கியுள்ளார். பாராமௌண்ட் பிக்சர்ஸ் தயாரித்துள்ளது.

## திரை உலகின் தேவசேனா தேவயானி - வனிதா புகழாரம்



தர்ஷன் பிலிம்ஸ் சார்பில் ஜோதி சிவா தயாரிப்பில் உருவாகியுள்ள திரைப்படம். 'நிழற்குடை'. சிவா ஆறுமுகம் கதை திரைக்கதை எழுதி இயக்குகிறார், இவர் இயக்குநர் கே.எஸ் அதியமானிடம் உதவியாளராக பணியாற்றியவர். தேவயானி முதன்மை கதாபாத்திரத்தில் நடிக்கும் இந்த படத்தில் விஜித் கதாநாயகனாகவும் கண்மணி கதாநாயகியாகவும் மற்றும் முக்கிய வேடங்களில் இளவரசு, ராஜ்கபூர் மனோஜ்குமார் வடிவுக்கரசி, நீலிமா இசை, நிஹாரிகா, அஹானா என இரு குழந்தைகள் நடித்துள்ளனர் மேலும் தர்ஷன் சிவா என்ற புதுமுகம் மிரட்டலான கதாபாத்திரத்தில் அறிமுகமாகிறார். மே மாதம் 9ம் தேதி வெளியாகவுள்ள நிலையில்,


இந்த படத்தின் இசை மட்டும் ட்ரைலர் வெளியீட்டு விழா சமீபத்தில் நடைபெற்றது. இந்த விழாவில் சிறப்பு விருந்தினர்களாக இயக்குநர் கே.பாக்யராஜ், சீமான், இயக்குநர் பேரரசு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் நடிகை வனிதா விஜயகுமார் பேசுகையில், "தேவயானியின் மிகப்பெரிய ரசிகை நான். எல்லோருக்கும் காதல் கோட்டை தேவயானியை பிடிக்கும் என்றால் எனக்கு கல்லூரி வாசல் படத்தில் நடித்த அந்த பப்ளியான தேவயானியை ரொம்ப பிடிக்கும். ரொம்பவே எளிமையான நல்ல இதயம் கொண்டவர். அவரை இந்த திரை உலகின் தேவசேனா இன்று தாராளமாக சொல்லலாம். விஜய் சொன்னது போல 20 வயதில் ஒரு பெண் ஹீரோயினாக இருப்பது அதிசயம் அல்ல. ஆனால் 40 வயதிலும் கதாநாயகியாக நிற்பது தான் பெரிய விஷயம். மனோரமா ஆச்சி, ஊர்வசி போல அவரும் ஒரு இடத்தை பெறுவார் என்றார்.



**சென்னை பசுமைவழிச் சாலையில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரும், அ.தி.மு.க. பொதுச்செயலாளருமான எடப்பாடி பழனிச்சாமியை அருப்புக்கோட்டை நகர செயலாளர் சோலை சேதுபதி சந்தித்து வாழ்த்து பெற்ற போது எடுத்த படம்.**

### திண்டுக்கல் மாவட்டத்தில்

## அபிராமி அம்மன் கோவிலில் சித்திரை திருவிழா தொடக்கம்



**திண்டுக்கல், ஏப். 30-**

திண்டுக்கல் அருள்மிகு அபிராமிஅம்மன் அருள்மிகு பத்மகிரீஸ்வரர் திருக்கோவிலில் 12 நாள் சித்திரை திருவிழா கொடியேற்றத்துடன் துவங்கியது.

திண்டுக்கல் நகர் மத்தியில் அறநிலையத்துறைக்கு சொந்தமான சுமார் 400 வருடங்களுக்கு மேல் பழமையான மிகவும் பிரசிதிப் பெற்ற அருள்மிகு அபிராமி அம்மன், காளஹஸ்தீஸ்வரர் திருக்கோவில் உள்ளது. இங்கு ஒவ்வொரு வருடமும் சித்திரை திருவிழா சிறப்பாக கொண்டாடப்படுவது வழக்கம். அதன்படி நேற்று 29-ம் தேதி கோவில் திருவிழா 12 நாள் சித்திரை திருவிழா கொடியேற்றத்துடன் துவங்கியது.

முன்னதாக கணபதி ஹோமம் லட்சுமி ஹோமம் ரிஷப ஹோமம், ஹெரி ஹோமம், உட்பட பல்வேறு ஹோமங்கள் செய்யப்பட்டது. இதனையடுத்து கோவிலில் உள்ள கொடி மரத்திற்கு பால், சந்தனம், தயிர், மஞ்சள், திருமஞ்சனம் உட்பட 16 வகையான அபிஷகங்கள் மற்றும் சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. இதை தொடர்ந்து நந்தி பகவான் மற்றும் வேல் பொறித்த கொடியினை மேலதாலங்கள் வாத்தியங்கள் முழங்க பத்மகிரீஸ்வரர் அபிராமியம்மன் முன்னிலையில் கொடியேற்றப்பட்டது. இன்று தொடங்கிய சித்திரை திருவிழாவானது தொடர்ந்து 12 நாட்கள் நடைபெறும். ஒவ்வொரு நாளும் நந்திகேஸ்வரர் வாகனம், கற்பக விருச்சக வாகனம், பூத வாகனம், யானை வாகனம், யாழி வாகனம், ரிஷப வாகனம், கைலாய வாகனம், குதிரை வாகனம் உட்பட பல்வேறு வாகனங்களில் அபிராமி அம்மன் பத்மகிரீஸ்வரர் எழுந்தருளி கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு, ஆகிய 4 ரத வீதிகளில் உலா வந்து வழி நெடுகிலும் பக்தர்களுக்கு நாள்தோறும் அருள்பாலிப்பார்கள்.

இதனைத் தொடர்ந்து 10ம் நாளான அடுத்த மாதம் 5ம் தேதி திருக்கல்யாணவைபவம் , அதனைத் தொடர்ந்து ஒன்பதாம் தேதி திருத்தேரோட்டமும் பத்தாம் தேதி தீர்த்த வாரியம் நடைபெற உள்ளது நேற்று நடைபெற்ற கொடியேற்ற நிகழ்ச்சியில் பெண்கள் உட்பட 300-க்கும் மேற்பட்ட பக்தர்கள் கோவிலுக்கு வருகை தந்து அபிராமி அம்மன் பத்மகிரீஸ்வரர் அருள் பெற்றுச் சென்றனர். அபிராமி அம்மன் கோவில் அறங்காவலர் குழு தலைவர் வேலுச்சாமி உறுப்பினர்கள் வீரக்குமார், சண்முகவேல், மலைச்சாமி, நிர்மலா, அறநிலையத்துறை இணை ஆணையர் கார்த்திக் செயல் அலுவலர் தங்கலதா மற்றும் தாடிக்கொம்பு சௌந்தர்ராஜ பெருமாள் திருக்கோவில் அறங்காவலர் குழு தலைவர் விக்னேஷ் பாலாஜி திண்டுக்கல் சீனிவாச பெருமாள் திருக்கோவில் அறங்காவலர் குழு தலைவர் மாரிமுத்து மாமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## அகமொழி விழிகள் டிரெய்லர் வெளியீட்டு விழா



சச்சுஸ் கிரியேஷன்ஸ் சார்பில் தயாரிப்பாளர் பவுலோஸ் ஜார்ஜ் தயாரிப்பில், சசீந்திரா கே. சங்கர் இயக்கத்தில் மாறுபட்ட கதைக்களத்தில், உருவாகியுள்ள திரைப்படம் "அகமொழி விழிகள்". வரும் மே மாதம் 9 ஆம் தேதி திரைக்கு வரவுள்ள இப்படத்தின் இசை வெளியீட்டு விழா சமீபத்தில் நடைபெற்றது.

## ட்ரீம் கேர்ள் படத்தின் இசை வெளியீட்டு விழா



எம் .ஆர்.பாரதி இயக்கத்தில் புதுமுகங்கள் ஜீவா, ஹரிஷா, பிரபு சாஸ்தா, இந்திரா மற்றும் பலர் நடிப்பில் உருவாகி இருக்கும் திரைப்படம் 'ட்ரீம் கேர்ள்' . இளமாறன் ஒளிப்பதிவு செய்துள்ள இப்படத்தை சாருலதா பிலிம்ஸ் தயாரித்துள்ளது. இப்படத்தின் முன்னோட்டம் மற்றும் இசை வெளியீட்டு விழா சமீபத்தில் நடை பெற்றது. பாடல்களைப் பிரபல ஒளிப்பதிவாளர் பி.சி. ஸ்ரீராம் வெளியிட படக்குழுவினர் பெற்றுக்கொண்டனர்.

அப்போது விழாவில் பேசிய இயக்குநர் எம் .ஆர். பாரதி, 'மீரா' படத்திற்கு பிறகு பல ஆண்டுகள் கழித்து 12 நாளில் 'அழியாத கோலங்கள் 2 'படத்தை எடுத்தோம். அந்த பட முயற்சியில் இறங்கிய போது அர்ச்சனா தயாரிக்க முன் வந்தார். நான் பொருளாதார சிக்கலில் மாட்டிக் கொள்ளக் கூடாது என்று அர்ச்சனா தயாரிக்க முன் வந்தார். அப்போது ரேவதியை இயக்குநராக ஆக்கலாமே படத்துக்கு ஒரு மதிப்பு கிடைக்கும் என்றேன். உன் கனவு இது, நீதான் இயக்க வேண்டும் என்று கூறினார். அப்படி அந்தப் படத்தை 12 நாட்களில் எடுத்தோம். யூட்யூபில் லட்சக்கணக்கான பேர் பார்த்துள்ளார்கள்.

இப்போது இந்த 'ட்ரீம் கேர்ள்' படத்திற்கு நான்கு காட்சிகள் எடுப்பது போல் திட்டத்தோடு சென்றோம். ஆனால் முழுப் படத்தையும் முடித்து விட்டு வந்திருக்கிறோம் .16 நாட்களில் பெரும்பாலான காட்சிகளை எடுத்து விட்டோம். சினிமா என்பது கஷ்டம் கிடையாது, தேவையில்லாமல் சிரமப்படக்கூடாது.

சரியாக வாய்ப்புகள் அமையவில்லை என்றால் அதிலிருந்து ஒரு பிரேக் கொடுத்துவிட்டு மீண்டும் செல்லலாம். சற்று விலகி இருந்து பார்த்தால் நமக்கு ஒரு திறப்பு கிடைக்கும். நான் சினிமாவில் வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்று சிரமப்பட்டதில்லை, சினிமாவை நம்ப வேண்டும் நேசிக்க வேண்டும். சிறிய பட்ஜெட்டில் சிக்கனமாகப் படம் எடுக்கக் தெரிந்தால் நம்மை அது காப்பாற்றி விடும். சிக்கனமாக எடுத்தால் இழப்பும் குறைவாக இருக்கும். முதலில் நான் 'மீரா' படத்திற்கு கதை வசனம் எழுதினேன். பி சி சார் இயக்கினார். அதன் பிறகு சினிமாவை நான் நேசித்ததால் அதற்குள்ளேயே எப்போதும் இருப்பது போல் பார்த்துக் கொண்டேன் என்றார்..

## விவசாயிகளுக்கு தழைக்கூளம் குறித்து பயிற்சி

**ஒட்டன்சத்திரம், ஏப்.30-**

திண்டுக்கல்மாவட்டம் ஒட்டன்சத்திரம் வட்டத்திற்குட்பட்ட பெரியகோட்டையில் மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பயிலும் சஞ்ஜய் உள்ளிட்ட 4-ம் ஆண்டு மாணவர்கள் விவசாயிகளுக்கு தழைக்கூளம் குறித்து பயிற்சி அளித்தனர்.

கிராமப்புர அனுபவத் திட்டத்தின் கீழ் தழைக்கூளம் போடுவது களைகளை அடக்குதல், மண்ணின் ஈரப்பதத்தைத் தக்கவைத்தல், மண்ணின் வெப்பநிலையை ஒழுங்குபடுத்துதல் மற்றும் மண் அரிப்பிலிருந்து பாதுகாத்தல் போன்ற நன்மைகளை வழங்குகிறது என்பதையும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார் . படம். திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் வட்டத்துக்குட்பட்ட பெரிய கோட்டையில் தலைக்கூளம் பயன்படுத்துவதின் அவசியம் குறித்து விவசாயிகளுக்கு செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.

## சுமோ - திரை விமர்சனம்



அலைச்சறுக்கு விளையாட்டு வீரரான சிவா, ஒரு முறை கடலுக்கு செல்லும் போது, ஒரு நபர் கரை ஒதுங்கி கிடப்பதைப் பார்த்து அதிர்ச்சியாகிறார். உடனே அவரை மீட்டு காப்பாற்றுகிறார். வேறு நாட்டவரான அவர் பற்றிய எந்த விவரங்களும் தெரியாததால்

அவரை சிவாவே பராமரிக்கிறார். இதற்கிடையே, கரை ஒதுங்கிய அந்த நபர் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த சுமோ மல்யுத்த வீரர் என்பது சிவாவுக்கு தெரிய வருகிறது. அதனால் அவரை ஜப்பானுக்கு அனுப்பும் முயற்சியில் சிவா ஈடுபடுகிறார்.

ஆனால், இந்த சுமோ வீரர் ஜப்பானுக்கு வருவதை தடுக்கிறது ஒரு கும்பல், அவர்களது முயற்சிகளை முறியடித்து, சுமோ வீரரை ஜப்பானுக்கு சிவா அழைத்துச் சென்றாரா? இல்லையா என்பதை கமர்ஷியலாக சொல்லும் படந்தான் 'சுமோ'. சிவா வழக்கம் போல் நடிக்காமல் பேசிக்கொண்டு காட்சிகளை கடத்தியிருக்கிறார்.நாயகியாக நடித்திருக்கும் பிரியா ஆனந்த், தனக்கான காட்சியில் சிறப்பாக நடித்திருக்கிறார். யோகி பாபு, சதீஷ், விடிவி கணேஷ் ஆகியோர் காமெடி செய்ய முயற்சித்திருக்கிறார்கள்.

நிவாஸ் கே.பிரசன்னாவின் இசை மற்றும் பின்னணி இசை ஓகே ரகம்தான், ராஜீவ் மேனனின் ஒளிப்பதிவு சுமார் ரகமே. நடிப்புடன் படத்தின் திரைக்கதை மற்றும் வசனத்தை சிவா எழுதியிருக்கிறார். கதை எழுதி இயக்கியிருக்கும் எஸ்.பி. ஹோசிமின் ஒரு கமர்ஷியல் படத்தை, கமர்ஷியல் அம்சங்களே இல்லாமல் இயக்கியிருக்கிறார்.

சுமோ மல்யுத்த வீரரைச் சுற்றி கதை நகர்ந்தாலும், அந்த வீரருக்கான வலுவான பின்னணி அம்சங்களோடு திரைக்கதை இருந்திருந்தால் சுமோ வென்றிருக்கும்.

### விருதுநகர் மாவட்டத்தில்

## சீர்மரபினர் நல வாரியத்தில் உறுப்பினர் சேர்க்கை முகாம்

### கலெக்டர் ஜெயசீலன் தகவல்

**விருதுநகர், ஏப். 30-**

அருப்புக்கோட்டை மற்றும் சாத்தூர் சட்டமன்றத் தொகுதிகளில் சீர்மரபினர் நல வாரியத்தில் உறுப்பினர் சேர்க்கை முகாம் வருகிற 3-ம் தேதி காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற உள்ளது. அருப்புக்கோட்டை சட்டமன்ற தொகுதியில், அருப்புக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம், பாலையம்பட்டி. ஆத்திபட்டி, ஸ்ரீ வெங்கடேஷ்வரா மெட்ரிக் குலேசன் பள்ளி, கணேஷ் நகர். சென்னிலக்குடி, அரசு உயர்நிலைப்பள்ளி வளாகம் மற்றும் பொம்மையாபுரம், பல்நோக்கு கட்டிடத்திலும், சாத்தூர் சட்டமன்ற தொகுதியில், சமுதாயக்கூடம், நத்தத்துபட்டி. சமுதாயக்கூடம், ஓ.மேட்டுப்பட்டி. தேவர் மண்டபம், அண்ணாநகர்(டவுன்), சாத்தூர். முருகன்கோவில் மண்டபம், சாத்தூர் டவுன். நாடார் மகமை துவக்கப்பள்ளி, ஏழாயிரம்பண்ணை, வெம்பக்கோட்டை. வெம்பக்கோட்டை டவுன், அரசு மேல்நிலைப்பள்ளி, தாயில்பட்டி மற்றும் ஆலங்குளம் ஆகிய இடங்களில் நடைபெறுகிறது.

கல்வியில், பொருளாதாரத்தில் மேம்பாடு அடைவதற்கான முயற்சியில் பங்கேற்று இவ்வாய்ப்பினை பயன்படுத்தி சீர்மரபினர் சமுதாய மக்கள் உறுப்பினர்களாக சேர்ந்து பயனடையுமாறு மாவட்ட கலெக்டர் ஜெயசீலன், தெரிவித்துள்ளார்.

## நத்தத்தில் நுண்ணீர் பாசன பயிற்சி முகாம்



**நத்தம், ஏப். 30-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலக கூட்டரங்கில் நுண்ணீர் பாசன பராமரிப்பு மற்றும் தானியங்கி செயல்பாடு பற்றிய விவசாயிகளுக்கான பயிற்சி நடைபெற்றது. இதற்கு வேளாண்மை உதவி செயற்பொறியாளர் சரவணமுத்து தலைமை தாங்கினார். வேளாண்மை அலுவலர் செல்விதாரணி முன்னிலை வகித்தார். இதில் விவசாயிகள் நுண்ணீர் பாசனம் குறித்தும், சூரியஒளி மின்வேலி அமைப்பதற்கான செலவினங்கள் மற்றும் நன்மைகள் குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் இராஜாங்கம், தொழில்நுட்ப அலுவலர்கள் சேகர், ராஜா உள்ளிட்ட வேளாண்மை துறையினர், விவசாயிகள் கலந்து கொண்டனர்.





● சென்னை தலைமைச்செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 2025-2026-ம் ஆண்டிற்கான பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மானியக்கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்து பெற்றார். மேலும் முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் 2025-2026-ம் ஆண்டிற்கான முன்னாள் படைவீரர் நலத்துறை மானியக்கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்து பெற்றார். மேலும் முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று சிறுபான்மையினர் நலன், வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர் 2025-2026-ம் ஆண்டிற்கான சிறுபான்மையினர் நலத்துறை மற்றும் மறுவாழ்வுத்துறை மானியக்கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்து பெற்றார்.

### பஹல்காம் தாக்குதலுக்கு பிறகு முதல்முறையாக


# பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் மத்திய அமைச்சரவை இன்று கூடுகிறது

புதுடெல்லி, ஏப். 30-

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்குப் பிறகு முதல்முறையாக மத்திய அமைச்சரவை இன்று (ஏப்.30) காலை 11 மணிக்கு கூடுகிறது.

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்குப் பிறகு கடந்த 23-ம் தேதி நடந்த பாதுகாப்புக்கான அமைச்சரவைக் குழுவில், பயங்கரவாத தாக்குதலுக்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. மேலும், சிந்து நதிநீர்ப் பங்கீடு ஒப்பந்தம் நிறுத்தப்படுகிறது. பஞ்சாப் மாநிலம் அட்டாரி கிராமத்தில் உள்ள ஒருங்கிணைந்த சோதனைச்சாவடி உடனடியாக மூடப்படுகிறது. முறையான அங்கீகாரத்துடன் இந்த எல்லை வழியாக சென்றவர்களும், வந்தவர்களும் இந்த எல்லை வழியாக மே 1-ம் தேதிக்கு முன்பாக திரும்ப வேண்டும். சார்க் விசா விலக்கு திட்டத்தின் கீழ் பாகிஸ்தானியர்கள் இந்தியாவுக்கு வர அனுமதிக்கப்படமாட்டார்கள். பாகிஸ்தானியர்களுக்கு இதற்கு முன் வழங்கப்பட்ட சிறப்பு விசாக்கள் ரத்து செய்யப்படுகிறது. சிறப்பு விசா மூலம் இந்தியாவில் தற்போது இருக்கும் பாகிஸ்தானியர்கள் 48 மணி நேரத்துக்குள் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டும்' என்ற 5 முக்கிய முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

இந்நிலையில், இந்த பயங்கரவாத தாக்குதலுக்குப் பிறகு முதல் முறையாக மத்திய அமைச்சரவை இன்று காலை 11 மணிக்கு கூட இருக்கிறது. பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் இந்த அமைச்சரவைக் கூட்டம் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




● சென்னை தலைமைச்செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று தமிழ்நாடு தலைமைச்செயலக ஊழியர் சங்கம், ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பு மற்றும் பல்வேறு சங்கங்களின் நிர்வாகிகள் சந்தித்து அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் நலன் கருதி பல்வேறு அறிவிப்புகளை சட்டமன்ற பேரவையில் அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொண்டனர். அருகில் துணை முதல்வர் உதயநிதி, அமைச்சர்கள் எ.வ.வேலு, தங்கம்தென்னரசு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, டி.ஆர்.பி.ராஜா, தலைமைச்செயலாளர் நா.முருகானந்தம், நிதித்துறை முதன்மைச்செயலாளர் த.உதயச்சந்திரன் உள்ளனர்.

# ரூ.5 கோடியில் கோவையில் பயங்கரவாத தடுப்பு பிரிவு

## சட்டசபையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, ஏப். 30-

ரூ.5 கோடி செலவில் கோவையில் பயங்கரவாத தடுப்பு பிரிவு அமைக்கப்படும் உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகளை சட்டசபையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

முதல்வர் மு.க. ஸ்டாலின் சட்டசபையில் நேற்று காவல் துறை மானிய கோரிக்கை மீது பேசுகையில் பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டார். அதன் விவரம் வருமாறு:- கோவை மாவட்டம் நீலாம்பூரில் புதிதாக போலீஸ் நிலையம் ரூ. 4.88 கோடி செவில் உருவாக்கப்படும். கீழடியில் புதிதாக போலீஸ் நிலையம் ரூ.2.83 கோடியில் உருவாக்கப்படும். சேரன்மாதேவி உட்கோட்டத்தில் உள்ள மேலச்செவலில் புதிதாக போலீஸ் நிலையம் ரூ.4.88 கோடி செலவில் உருவாக்கப்படும்.

பொங்கலூரில் புதிதாக காவல் நிலையம் ரூ.2.83 கோடி செலவில் உருவாக்கப்படும். திருவண்ணாமலை கோவிலுக்கு என புதிதாக போலீஸ் நிலையம் ரூ.2.83 கோடி செலவில் உருவாக்கப்படும். குழித்துறையில் புதிதாக இருப்புப்பாதை காவல் நிலையம் ரூ.2.15 கோடி செலவில் உருவாக்கப்படும். மதுரை மாநகர காவல் ஆணையரக எல்லைக்குட்பட்ட சிந்தாமணியில் புதிதாக காவல் நிலையம் ரூ.6.57 கோடியில் உருவாக்கப்படும்.

மதுரை மாநகர காவல் ஆணையரக எல்லைக்குட்பட்ட மாடக்குளத்தில் புதிதாக போலீஸ் நிலையம் ரூ.6.57 கோடி செலவில் உருவாக்கப்படும். திருவல்லிக்கேணியில் உள்ள ஓமந்தூரார் அரசு பன்னோக்கு மருத்துவமனை, பெரம்பூரில் உள்ள பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனையில் புறக்காவல் நிலையம் தலா ரூ.7.50 லட்சம் செலவில் அமைக்கப்படும். ரூ.72.30 லட்சம் செலவில் காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூரில் புதிதாக போலீஸ் உட்கோட்டம் உருவாக்கப்படும்.

சென்னை பெருநகர காவல், அரும்பாக்கம் சரகத்தில் புதிதாக அனைத்து மகளிர் காவல் நிலையம் ரூ.2.68 கோடி செலவில் அமைக்கப்படும். சென்னை பெருநகர காவலின் நுண்ணறிவுப் பிரிவில் புதிதாக திட்டமிட்ட குற்றப்பிரிவு ரூ.13 லட்சம் செலவில் உருவாக்கப்படும். சென்னை பெருநகர காவலின் நுண்ணறிவுப் பிரிவில் புதிதாக போதைப் பொருள் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவு ஒன்று ரூ.8 லட்சம் செலவில் உருவாக்கப்படும்.

சென்னை பெருநகர காவல் மத்திய குற்றப்பிரிவின் இணையவழி குற்றப் பிரிவில், தேவையான பணியிடங்களுடன் சமூக ஊடக நுண்ணறிவுப் பிரிவு ஒன்று புதிதாக ரூ.63 லட்சம் செலவில் உருவாக்கப்படும். செங்கல்பட்டு மாவட்டத் தில் குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறைக்கு என புதிய அலகு ஒன்று ரூ. 1.95 கோடி செலவில் உருவாக்கப்படும். செங்குன்றம் மாவட்ட போக்குவரத்து காவல் பிரிவு புதிதாக ரூ.59 லட்சம் செலவில் உருவாக்கப்படும்.

சென்னை பெருநகரில் உள்ள விருகம்பாககம் காவல் நிலையத்திற்கு ரூ.6.46 கோடி செலவில் புதிய கட்டிடம் கட்டப்படும். ஆவடி மாநகரில் சட்டம்-ஒழுங்கு குற்றப்பிரிவு மற்றும் துணை ஆணையாளர் அலவலகங்களுக்கு என ஒருங்கிணைந்த புதிய காவல் நிலைய கட்டிடம் ரூ.7.71 கோடி செலவில் கட்டப்படும். மொத்தம் 321 குடியிருப்புகள் ரூ.143.16 கோடி செலவில் கட்டப்படும்.

காவலர் தங்குமிடம் வசதி இல்லாத அல்லது குறைவாக உள்ள 20 மாவட்ட, மாநகரங்களில் ஆயுதப் படை காவலர்களின் பயன்பாட்டிற்காக 50 படுக்கை வசதிகள் கொண்ட காவலர் தங்கும் இடங்கள் ரூ.30 கோடி செலவில் கட்டப்படும். நுண்ணறிவுப் பிரிவின் கீழ் புதிதாக உருவாக்கப்பட்ட கோவை பயங்கரவாத தடுப்புப் பிரிவிற்கு கோவை மாநகரத்தில் ரூ.5.98 கோடி செலவில் அலுவலக கட்டிடம் கட்டப்படும். பெண்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காக மாநகரங்களின் (சென்னை பெருநகரம் தவிர) பயன்பாட்டிற்கு என 80 இளஞ்சிவப்பு ரோந்து வாகனங்கள் ரூ. 12 கோடி செலவில் வாங்கப்படும்.

சென்னைப் பெருநகரில் உள்ள பொதுமக்களின் பாதுகாப்பினை உறுதி செய்ய, காவல் துறையில் உள்ள பாதுகாப்புப் பிரிவின் பயன்பாட்டிற்கு என வெடிகுண்டுகளை கண்டு பிடித்து செயலிழக்கச் செய்யும் கருவிகள் ரூ.3.99 கோடி செலவில் வாங்கப்படும். ஆண்டுதோறும் வழங்கப்படும் அண்ணா பதக்கங்களின் எண்ணிக்கை 100-ல் இருந்து 150 ஆக உயர்த்தப்படும். இதற்கான தொடர் செலவினம் ரூ.1.08 கோடி ஆகும். ஆண்டுதோறும் வழங்கப்படும் தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் பதக்கங்கள் 3000-ல் இருந்து 4000 ஆக உயர்த்தப்படுவதுடன், மாதாந்திர பதக்கப்படி ரூ.400-ல் இருந்து ரூ.500 ஆக உயர்த்தப்படும். இதற்கான தொடர் செலவினம் ரூ.4.80 கோடி ஆகும்.

தடய அறிவியல் துறையின் குற்ற நிகழ்விடப் பார்வையிடல் விசாரணை முறையை வலுப்படுத்துவதற்கு ஏதுவாக, 50 நடமாடும் தடய அறிவியல் வாகனங்களும் அதன் தேவையான மனிதவளம், எரிபொருள் மற்றும் பராமரிப்புச் செலவுகள் ஆகியவற்றிற்கு என ரூ.38.25 கோடி வழங்கப்படும்.

திருவண்ணாமலை மாவட்டம் அருணாச்சலேஸ்வரர் கோவில், பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை, வேலூர் மாவட்டம் பள்ளிக்கொண்டா, விழுப்புரம் மாவட்டம் கண்டமங்கலம், கரூர் மாவட்டம் குளித்தலை, கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி, கன்னியாகுமரி மாவட்டம் ராஜாக்கமங்கலம் ஆகிய 7 இடங்களில் புதிதாக தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் ரூ.16.80 கோடி செலவில் அமைக்கப்படும்.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் திருச்சியை தலைமை இடமாக கொண்ட மத்திய மண்டலத்தை 2 ஆக பிரித்து விழுப்புரத்தை தலைமை இடமாக கொண்டு ஒரு புதிய மண்டலம் ரூ.1.04 கோடி செலவில் உருவாக்கப்படும். தலா 25 தீயணைப் போர்களைக் கொண்ட 2 கமாண்டோ படைகளை உருவாக்குவதற்கு என அவர்களுக்கு பயிற்சி மற்றும் சிறப்பு உபகரணங்கள் ரூ.1 கோடி செலவில் வழங்கப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

### இதுவரை செயல்படுத்தியுள்ள திட்டங்கள், சாதனைகளால்

# தமிழ்நாட்டில் 7-வது முறையாக தி.மு.க. நிச்சயம் ஆட்சி அமைக்கும்

## சட்டசபையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி

சென்னை, ஏப். 30-

இதுவரை செயல்படுத்தியுள்ள திட்டங்களால், செய்திருக்கக் கூடிய சாதனைகளால் 7-வது முறையும் தமிழகத்தில் திமுக ஆட்சிதான் அமையும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என சட்டப்பேரவையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நம்பிக்கை தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் நேற்று (ஏப்.29) காவல் மற்றும் தீயணைப்புத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்கு பதிலளித்துப் பேசிய முதல்வர் ஸ்டாலின் தமிழக அரசின் சாதனைகளைப் பட்டியலிட்டுப் பேசியதோடு, அந்தச் சாதனைகளால் தமிழகத்தில் மீண்டும் திமுக ஆட்சி அமையும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் முதல்வர் பேசியது வருமாறு:- இதுவரை செயல்படுத்தியுள்ள திட்டங்களால், செய்திருக்கக் கூடிய சாதனைகளால் 7-வது முறையும் தமிழகத்தில் திமுக ஆட்சிதான் அமையும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

'ஸ்டாலின் என்றால் உழைப்பு, உழைப்பு, உழைப்பு' என்று கருணாநிதி சொன்னார். அவர் இன்று உயிருடன் இருந்திருந்தால் 'ஸ்டாலின் என்றால் சாதனை, சாதனை, சாதனை' என்று சொல்லியிருப்பார். தலைவர் கலைஞர் இப்போது இருந்திருந்தால் என்னவெல்லாம் செய்திருப்பார் என்று யோசித்து திட்டங்களைத் தீட்டுகிறேன்.

கடந்த ஆட்சியாளர்கள் செய்த நிர்வாக சீர்கேட்டில் இருந்து தமிழகத்தை மீட்டு எல்லா துறைகளிலும் நம் மாநிலத்தைத் தலைநிமிரச் செய்துள்ளேன். இது சாதாரண சாதனை அல்ல. கடும் உழைப்பால் கிடைத்த சாதனை. திராவிட மாடல் ஆட்சியில் இதுவரை பார்க்காத சாதனையை தமிழகம் படைத்துள்ளது. இந்தியாவில் உள்ள எந்த மாநிலமும் செய்யாத சாதனைகளைப் படைத்துள்ளது.

2024- 2025 ஆம் ஆண்டில் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழகம் 9.6 சதவீதம் பொருளாதார வளர்ச்சியடைந்துள்ளது. இதுவரை இந்த வளர்ச்சியை தமிழகம் கண்டதில்லை. இதனை நான் சொல்லவில்லை, எப்போதும், எல்லாவிதத்திலும் தமிழகத்தை ஒடுக்கும் ஒன்றிய அரசே சொல்லியிருக்கிறது. தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் ரூ.3 லட்சத்து 58 ஆயிரம். தேசிய சராசரியே ரூ.2.06 லட்சம் தான்.

மிகச்சிறந்த 100 பல்கலைக்கழகங்களில் 25 பல்கலைக்கழகங்கள் தமிழகத்தில் உள்ளன. தமிழகத்தின் சமூக பொருளாதார வளர்ச்சியால் அந்தக் குறியீட்டில் நாம் தேசிய அளவில் முதலிடத்தில் இருக்கிறோம். தமிழகத்தில் வறுமைக்கோட்டின் கீழ் இருப்போர் 1.4 சதவீதம்தான். தேசிய அளவில் 11.2 சதவீதம் பேர் வறுமைக்கோட்டின் கீழ் உள்ளனர். மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் ஐ.நா. அமைப்பின் விருதைப் பெற்றுள்ளது. இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் அதிகமான அரசு மருத்துவர்கள் இருக்கிறார்கள். அதிகமான மருத்துவ சீட் உள்ள மாநிலமும் தமிழகம் தான்.

காற்றாலை மின் உற்பத்தியில் தமிழகம் 2-வது இடத்தில் உள்ளது. சூரிய சக்தி மின் உற்பத்தியில் 4-வது இடத்தில் உள்ளது. ஸ்டார்ட் அப் நிறுவனங்களை உருவாக்கும் மாநிலங்களின் தரவரிசைப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளோம். இது ஒரு கட்சியின் அரசு அல்ல. ஒரு கொள்கையின் அரசு. அதனால் தான் அண்ணா அரசு, கலைஞர் அரசு, எம்ஜிஆர் அரசு என்ற வரிசையில் ஸ்டாலின் அரசு என்று சொல்லாமல் திராவிட மாடல் அரசு என்று நான் குறிப்பிட்டேன். ஒரு தனி மனிதனின் ஆட்சி அல்ல. இது ஒரு தத்துவத்தின் ஆட்சி.

தமிழகம் இந்தச் சாதனைகளை எல்லாம் சாதாரணமாக செய்துவிடவில்லை. மேலே பாம்பு, கீழே நரிகள், குதித்தால் அகழி, ஓடினால் தடுப்புச் சுவர்கள் இவற்றிற்கெல்லாம் இடையில் மாட்டிக் கொண்ட மனிதனைப் போல் ஒரு பக்கம் மத்திய அரசு, மறு பக்கம் ஆளுநர், இன்னொரு பக்கம் நிதி நெருக்கடி என்று எல்லா தடைகளையும் கடந்து சாதனை படைத்து வருகிறோம். இது தனி மனித சாதனைகள் இல்லை, அமைச்சர், அதிகாரிகள் என கூட்டு உழைப்புக்கு கிடைத்த சாதனை. என்னைப் பொறுத்தவரை கொள்கையும், இயக்கமும் தான் முன்னிலை பெற வேண்டும். வலிமை பெற வேண்டும்.

சட்டம் - ஒழுங்கு சீராக இருப்பதால் தான் தமிழகத்தில் கலவரங்கள் இல்லை. கலவரங்களைத் தூண்ட யாரேனும் நினைத்தாலும் மக்களே அதை முறியடித்து விடுவார்கள். மொத்தத்தில் சட்டம் ஒழுங்கில் கல் விழாதா எனத் துடிப்பவர்களின் ஆசையில் மண் தான் விழுந்திருக்கிறது. குற்றச் சம்பவங்கள் நடந்தால் உடனடியாக குற்றவாளிகள் கைது செய்யப்படுகிறார்கள். ஏதாவது ஒரு சில இடத்தில் கவனக்குறைவால் சில தவறுகள் நடந்தால், அதை சுட்டிக்காட்டும் பட்சத்தில் சரி செய்து கொள்ள நாங்கள் தயாராகவே இருக்கிறோம்.

உள்நோக்கத்தோடு, அரசியல் ஆதாயத்துக்காக தமிழ்நாட்டின் சட்டம் - ஒழுங்கு சரியில்லை என்று சொல்பவர்களுக்கு நான் ஒன்றை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இது மணிப்பூர் அல்ல, இது காஷ்மீர் அல்ல, உத்தரப் பிரதேச கும்ப மேளா மரணங்கள் இங்கே நடக்கவில்லை. இது தமிழ்நாடு. மறந்துவிடாதீர்கள்.

இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

# பிரதமர் தலைமையில்...(1-ம் பக்க தொடர்ச்சி)

(1-ம் பக்க தொடர்ச்சி)

இந்தநிலையில், பஹல்காம் தாக்குதல் தொடர்பாக பிரதமர் மோடியின் இல்லத்தில் முக்கிய ஆலோசனை நடைபெற்றது. பிரதமர் இல்லத்தில் நடந்த ஆலோசனையில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், சிடிஎஸ் ஜெனரல் அனில் சவுகான், ராணுவத் தளபதி ஜெனரல் உபேந்திர திவேதி, கடற்படைத் தளபதி அட்மிரல் தினேஷ் கே திரிபாதி மற்றும் இந்திய விமானப்படைத் தலைவர் விமானப்படைத் தளபதி அமர் ப்ரீத் சிங் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் உள்ளிட்டோர் பங்கேற்றனர். பாகிஸ்தானுடன் பதற்றம் அதிகரித்த நிலையில் பிரதமர் மோடி மீண்டும் அவரச ஆலோசனை நடத்துவது முக்கியத்துவம் பெறுகிறது. இந்த ஆலோசனை கூட்டத்தில் பயங்கரவாதிகளுக்கு பதிலடி தருவது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது. இன்று பிரதமர் மோடி தலைமையில் அமைச்சரவை கூட்டம் நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

# 2026-ல் திராவிட மாடல்...(1-ம் பக்க தொடர்ச்சி)

முன்னணி மாநிலமாக இருக்கும் தமிழ்நாடு, குற்றச் சம்பவங்களில் பூஜ்ஜியமாக இருந்தால்தான் நமக்கு பெருமை. எனவே, இதில் பூஜ்ஜியம் வாங்குவதற்கு, ஒவ்வொரு காவலரும் 100 விழுக்காடு அர்ப்பணிப்போடு பணியாற்றவேண்டும். ஓய்வு பெற்ற உயர்நீதிமன்றத்தின் நீதிபதி சி.டி.செல்வம் தலைமையிலான ஐந்தாவது காவல் ஆணையம் 934 பரிந்துரைகளை வழங்கியிருக்கிறது. அதில் 86 பரிந்துரைகள் ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்டு விட்டன. மேலும் 274 பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படுவதற்கான பல்வேறு கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதோடு, மற்றவை அரசின் பரிசீலனையில் உள்ளன.

### நீதிபதி தலைமையில் குழு

பல்லாண்டு காலமாக தமிழ்நாட்டில் அரசு பணியாளர் தேர்வு முறையிலே தயாரிக்கப்பட்டு வந்த தரவரிசை பட்டியலானது சமூகநீதி அடிப்படையிலே இருந்து வந்த நிலையிலே கடந்த 2019-ம் ஆண்டு வரப்பெற்ற சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பின் காரணமாக இந்த முறையில் ஏற்பட்டுள்ள மாற்றம், வருங்காலத்தில் ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து ஆய்வு செய்வதற்கும் அதற்கான சட்டரீதியான தீர்வுகள் அளித்திடவும் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையில் குழு ஒன்று அமைக்கப்படும். அந்த குழு அளிக்கக்கூடிய பரிந்துரையின் அடிப்படையில் இந்த தீர்ப்பின் காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புகளிலிருந்து ஒரு நல்ல தீர்வு காணப்படும்.

### சிறப்பாக செயல்பட்டு

எதிர்க்கட்சி தலைவர் பல்வேறு சம்பவங்கள் குறித்து பேசியிருக்கிறார். அவர் பேசிய அத்தனை விவகாரங்களிலும் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது. இனியும் நடவடிக்கை எடுக்கப்படும். உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொண்டு, இந்த அரசை பொறுத்தவரைக்கும் எந்த வித அழுத்தங்களுக்கும் உள்ளாகாமல் காவல்துறை சுதந்திரமாக செயல்பட்டு, சட்டம் ஒழுங்கை பராமரிப்பதிலும் நீதியை நிலை நாட்டுவதிலும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

கடந்த பத்தாண்டுகால அ.தி.மு.க. ஆட்சியை விட ஆயிரம் மடங்கு சிறப்பான சாதனைகளை அனைத்துத்துறைகளிலும் செய்திருக்கிறோம். இந்த உறுதியோடும், மக்கள் மேல் உள்ள நம்பிக்கையோடும் சொல்கிறேன், அடமானம் வைக்க நினைப்பவர்களாலும், அபகரிக்க நினைப்பவர்களாலும் தமிழ்நாட்டை ஒருபோதும் சூறையாட முடியாது. சட்டமன்றத்தின் இறையாண்மையை நிலைநாட்டும் வகையில் வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை பெற்றோம். அடுத்தப்படியாக மாநில சுயாட்சி கனவையும் நிறைவேற்ற குழு அமைத்திருக்கிறோம்.

நான் தொடங்கியுள்ள இந்த பயணம் நீண்டது. முதல்வராக ஐந்தாவது ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கிற இந்த வேளையில், இந்த மன்றத்தில் நின்று உறுதியோடு சொல்கிறேன், தமிழ்நாட்டிற்காக, தமிழர்களுக்காக, மாநில உரிமைகளுக்காக என் பயணம் தொடரும். இதுவரை பார்த்தது திராவிட மாடல் அரசின் முதல்பாகம் தான். 2026-ல் திராவிட மாடல் அரசின் வெர்ஷன் 2.0 தொடங்கும். அதில் இன்னும் சாதனைகளை படைப்போம். தமிழ்நாடு வரலாறு படைக்கும். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

# கொடியேற்றத்துடன் தொடங்கியது மதுரை மீனாட்சியம்மன் கோவில் சித்திரை திருவிழா

மதுரை, ஏப்.30-

மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவிலில் சித்திரைத் திருவிழா நேற்று (ஏப். 29) காலை கொடியேற்றத்துடன் கோலாகலமாக துவங்கியது. இதில் ஆயிரக் கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர்.

மதுரை மீனாட்சி அம்மன் கோவிலின் முக்கிய திருவிழாக்களில் ஒன்றான சித்திரைத் திருவிழா ஆண்டுதோறும் வெகுவிமர்சையாக கொண்டாப்பட்டு வருகிறது. விழாவில் முக்கிய நிகழ்ச்சிகளான மீனாட்சிக் திருக்கல்யாணம், அழகர் பெருமாள் வைகை ஆற்றில் எழுந்தருளும் வைபவத்தைக் காண பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள், மதுரைக்கு வருகை தருவர்.



சிறப்பு வாய்ந்த மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் சித்திரைத் திருவிழாவானது நேற்று, சுவாமி சன்னதியின் முன்பாக உள்ள தங்கக் கொடி மரத்தில் கொடியேற்றத்துடன் தொடங்கியது. முன்னதாக கொடிமரம் முன்பு மீனாட்சி, சுந்தரேஸ்வரர் பிரியாவிடையுடன் எழுந்தருளினார். பூஜைகளுக்கு பின்னர் மங்கள வாத்தியங்கள், வேதமந்திரங்கள் முழங்கிட காலை 10.35 மணிக்கு மேல் 10.59 மணிக்குள் மிதுன லக்னத்தில் கொடியேற்றம் நடைபெற்றது.

சித்திரைத் திருவிழா துவங்கியுள்ள நிலையில் அம்மனும் சுவாமியும் தினமும் பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி வீதியுலாவும், விழாவின் முக்கிய நிகழ்வுகளாக வரும் 6-ம் தேதி மீனாட்சியம்மன் பட்டாபிஷேகம், 8-ம் தேதி மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாணம், 9-ம் தேதி தேரோட்டமும் நடைபெறும். விழாவின் சிகர நிகழ்ச்சியாக வரும் 12-ம் தேதி கள்ளழகர் வைகை ஆற்றில் எழுந்தருளுகிறார். மீனாட்சி அம்மன் கோவிலில் சித்திரைத் திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியதால் மதுரை மாநகர் விழாக்கோலம் பூண்டுள்ளது.